2736

# T.N.L.A Debates

## OFFICIAL REPORT

VOL: LIII NO: 1

October 29th 1983

D
Y211,31 N83
N83-53.1
136057

2736 - 8 MAR 19..
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர் சென்னை-8.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

**சனிக்கிழமை 1983 அக்டோபர் -29 தொகுதி LIII எண் .1**

**Saturday 29th October 1983 —Volume LIII No. 1**

**சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600009**

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை: ரூ. 3-50 காசுகள்) (Price Rs. 3–50 paise

V211,31 N83
N83.53.1
136057
சென்னை-600 009

## உள்ளடக்கம்.

**29–10–1983.**

| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். | iii—iv |
| (ii) Personel of the Government of Tamil Nadu. | v—v |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். | vii—viii |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். | ix—x |
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 1—33 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. | |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) பேரவைக் கூட்டம் நடைபெறும் போது அவைக்கு வெளியில் புதுக் கொள்கைகளை அறிவிப்பது. | 33—34 |
| (ஆ) உறுப்பினர்கள் விடுதி அமைந்துள்ள பகுதியில் விளக்கு வசதி. | 34 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| திருச்சி சிறை கைதிகள் நடத்தும் உண்ணா விரதப் போராட்டம். | 34—61 |
| 4. அறிவிப்பு : | |
| பேரவை அலுவல். .. .. | 61—62 |
| 5. அறிக்கை அளித்தல் : | |
| விதி 106-ன் கீழ் அவை முன்ன[illegible]ின் அறிக்கை 116 (a). | 62 |
| 6. கவன ஈர்ப்பு : | |
| திண்டுக்கல் நகரில் கொசுக்களின் தொல்லை | 62—65 |

128/178—i

| | பக்கங்கள் |
|---|---|
| 7. அரசினர் சட்ட முன்வடிவு : | |
| சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1983. | 65—71 |
| 8. தனித் தீர்மானம் : | |
| மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் தொடர்ச்சி.— | 71—112 |
| திரு. என். வி. என். சோமு | 73—89 |
| திரு. சு. முத்துக்கிருஷ்ணன் | 89—93 |
| திரு. சி. கோபால் | 93—100 |
| திரு. கு. ரமணி | 101—112 |
| 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் : .. | 113 |



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர் லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் *(முதலமைச்சர்)* பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப்பாகு கழிவு, தொல்பொருள் இயல் மற்றும் ஆயத்துறை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் *(நிதி அமைச்சர்)*— நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் *(மின் துறை அமைச்சர்)*— மின்சாரம் மற்றும் இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி *(பால்பெருக்குத் திட்ட அமைச்சர்)*—பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் *(வருவாய்த்துறை அமைச்சர்)*—வருவாய், வணிக வரிகள் மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் *(செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்)*—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் *(கல்வி அமைச்சர்)*— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து *(வேளாண்மைத் துறை அமைச்சர்)*—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் *(கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்)*—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம் மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு *(உள்ளாட்சித் துறை அமைச்சர்)*—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சிஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டுவசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்—வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை.

13. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்)—பெருந்தொழில்கள், சுரங்கமும் கனிவளமும், நெசவாலைகள் மற்றும் கைத்தறி.

15. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (பொதுப்பணித் துறை அமைச்சர்)—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), மற்றும் பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை, மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.

16. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதிதிராவிடர் நலம், எழுதுபொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

17. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராசன் (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

18. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சர்)—சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப் படுத்தல்.

19. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம்.

20. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூகநலத்துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

21. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்)—கதர்.

22. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப்பணி கூட்டுறவு சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ப்.

23. மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் (ஊரகத்தொழில் துறை அமைச்சர்)—கிராம, குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

24. மாண்புமிகு திரு. க. கலைமணி (மீன்வளத் துறை அமைச்சர்)—மீன் வளம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### Governor of Tamil Nadu.

Thiru S. SUNDER LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister)—Public, General Administration, Indian Administrative Service, and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology and Excise.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)-Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Dairy Development)—Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru. S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education Including Technical Education, Official Language.

8. Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture—Agricultural Refinance, Agricultural Engineering wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIYAN (Minister for Co-operation and Law)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration)—Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development. Rural Indebtedness Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

14. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minerals, Textiles and Handlooms.

15. Hon. Thiru S. N. RAJENDRAN (Minister for Public Works and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits, Passports, Public Works Department and Establishment matters relating to Public Works Department.

16. Hon. Thiru M. VIJAYASARATHI (Minister for Adi-Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Stationery, and and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

17. Hon. Thiru R. SOUNDRAJAN (Minister for Nutritious Meals)—Nutritious Meals.

18. Hon. Thiru S. R. ERADHA (Minister for Environmental Pollution Control) - Environmental Pollution Control.

19. Hon. Thiru M. R. GOVENDHAN (Minister for Backward Classes)-Backward Classes.

20. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare,)- Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, India Overseas, Refugees and Evacuees and Co-operative Administration

21. Hon. Thiru VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi)—Khadi.

22. Hon. Thiru Y. S. M. YUSUF (Minister for Irrigation and Wakf) Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf

23. Hon. Thiru R. ARUNA CHALAM (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries.

24. Hon. Thiru K. KALAIMANI (Minister for Fisheries)—fiseries



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர்.

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்,

† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜகத்ரட்சகன்.
2. திரு. மா. சின்னராசு.
3. திருமதி டி. யசோதா.
4. திரு. பாபு ஜனார்த்தனன்.
5. திரு. என். வரதராஜன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி. ஏ., பி. எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி. ஏ.,

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி. ஏ , பி. ஜி. எல்.,

திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி. ஏ., பி. எல்.,

குழு அலுவலர்.

திரு. சா. சீனிவாசன், பி. எஸ் சி.,

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி. காம்., பி. ஜி. எல்.,

திரு. செ. சு. ஜானகிராமன், பி. ஏ., பி. எல்.,

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி. காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி. ஏ., பி. எல்.,

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.,

திரு. வ. சா. ஜான், பி. ஏ.,

---

* 21.6.1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

† 25.10.1983 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

எஸ்டேட் அலுவலர்.

திரு. கே. தியாகராஜன், பி. ஏ., பி. எல்.,

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

தலைமை நிருபர்.

திரு. வி. இராமச்சந்திரன், எம். ஏ., எல். எல். பி.,

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.,

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (2) | (3) |
| 1 | அங்குசாமி, திரு. ச. | திருவாடானை |
| 2 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4 | அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ) |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. | திருச்செந்தூர் |
| 7 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 8 | அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ) |
| 9 | அரங்கநாயகம் திரு. செ. | கோவை (மேற்கு) |
| 10 | வெற்றிடம். | உப்பிலியாபுரம் |
| 11 | அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 12 | அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 13 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 14 | வெற்றிடம் | புரசைவாக்கம் |
| 15 | அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 16 | அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 18 | ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 19 | ஆறுமுகம். திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 20 | சேலம் ஆறுமுகம், திரு. மு. | சேலம்—2 |
| 21 | ஆறுமுகம், திரு. த. | அரியலூர் |
| 22 | ஆனூர் ஜெகதீசன், திரு. பு. கோ. | செங்கல்பட்டு |
| 23 | இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 24 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி |
| 25 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம் |
| 26 | இராசரத்தினம் திரு. து. | பூந்தமல்லி |
| 27 | இராசாம்பாள், திருமதி தா. | தலைவாசல் (செ.வ) |
| 28 | இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 29 | இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 30 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ.வ) |
| 31 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |

| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (2) | (3) |
| 32 | இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | மதுரை (மேற்கு) |
| 33 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 34 | இராமச்சந்திரன், திரு. ச. | பன்ருட்டி |
| 35 | இராமச்சந்திரன், திரு.செஞ்சி.ந. | செஞ்சி |
| 36 | இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 37 | இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 38 | இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீ வைகுண்டம் |
| 39 | இராமலிங்கம், திரு. ஏ. | காட்டுமன்னார் (செ.வ) |
| 40 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம் |
| 41 | இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர் |
| 42 | இராஜசேகரன், திரு. வெ. | இராதாகிருஷ்ண நகர் |
| 43 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா | தல்லி |
| 44 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 45 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ) |
| 46 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம் |
| 47 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம் |
| 48 | உச்சி, திரு. கே. | கூடலூர் |
| 49 | உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ) |
| 50 | உமாநாத், திரு. ரா. | நாகை |
| 51 | கண்ணன், திரு. ம. | கண்டமண்டலம் (செ.வ) |
| 52 | கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 53 | கணேசன், திரு. இ. | இடப்பாடி |
| 54 | கணேசன், திரு. சி. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 55 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 56 | கந்தசாமி, திரு. பி. | பொங்கலூர் |
| 57 | கபாலி, திரு. டி. கே. | மைலாப்பூர் |
| 58 | வெற்றிடம் | அண்ணா நகர் |
| 59 | கருப்பசாமிப் பாண்டியன், திரு.வி. | பாளையங்கோட்டை |
| 60 | கருப்பையா, திரு. இரா. | குளித்தலை |
| 61 | கருப்பையா, திரு. ஏ. டி. | வால்பாறை |



| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (2) | (3) |
| 62 | கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 63 | கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 64 | கலியமூர்த்தி, திரு. பெ. | மங்களூர் (செ.வ) |
| 65 | கலையரசன், திரு. நன்னிலம் அ. | நன்னிலம் (செ.வ) |
| 66 | காளிமுத்து, டாக்டர் கா. | திருப்பரங்குன்றம் |
| 67 | கிட்டப்பா, திரு. என். | மயிலாடுதுறை |
| 68 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 69 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 70 | கிருட்டிணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம் |
| 71 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம் |
| 72 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. | சேலம்-1 |
| 73 | கிருஷ்ணன், திரு, ரா. | வாசுதேவநல்லூர் |
| 74 | குப்புசாமி, திரு. என். | மொரப்பூர் |
| 75 | குப்புசாமி, திரு. கே. | ஒட்டன்சத்திரம் |
| 76 | குப்புசாமி, திரு. செ. | வந்தவாசி (செ.வ) |
| 77 | குமரி அனந்தன், திரு. | திருவொற்றியூர் |
| 78 | குருசாமி, திரு. ப. | அந்தியூர் (செ.வ) |
| 79 | குலசேகர், திரு. ஏ. டி. | சிங்காநல்லூர் |
| 80 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 81 | குழந்தைவேலு, திரு. ப. | உடுமலைப்பேட்டை |
| 82 | கோபால், திரு. சி. | சோளிங்கர் |
| 83 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84 | கோபாலன், திரு. ஆர். டி. | கம்பம் |
| 85 | கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கை (செ.வ) |
| 86 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87 | கோவைத்தம்பி, திரு. | பேரூர் |
| 88 | சக்கரபாணி, திரு. ஆர். | பொன்னேரி |
| 89 | சங்கரய்யா, திரு. என். | மதுரை (கிழக்கு) |
| 90 | சட்டநாத கரையாளர், திரு. கி. | தென்காசி |
| 91 | சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 92 | சண்முகம். திரு. ஏ. சி. | ஆரணி |
| 93 | சத்தியமூர்த்தி, திரு. வ. | கடலாடி |
| 94 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான் |

| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். (2) | தொகுதியின் பெயர். (3) |
|---|---|---|
| 95 | சபாபதி, திரு. சி. | அரூர் (செ.வ) |
| 96 | சமரசம், டாக்டர் கே. | காவேரிப்பட்டணம் |
| 97 | சாகுல் ஹமீது, திரு. ஏ. | கடையநல்லூர் |
| 98 | சாமிக்கண்ணு, திரு. த. | செங்கம் |
| 99 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100 | சிதம்பரம், திரு. சி. த. | காரைக்குடி |
| 101 | சிவசாமி, திரு. செ. | இளையான்குடி |
| 102 | சிவஞானம், திரு. ந. | திருவோணம் |
| 103 | சிவப்பிரகாசம், திரு. சீ. | சேந்தமங்கலம் (செ.வ) |
| 104 | சிவபெருமாள், திரு. மு. | ஓமலூர் |
| 105 | சிவராமன், திரு. எஸ், | சின்னசேலம் |
| 106 | சின்னசாமி, திரு. எம். | கரூர் |
| 107 | சின்னதுரை, திரு. ஏ. | மேல்மலையனூர் |
| 108 | சின்னராசு. திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 109 | சின்னராசு, திரு. மா. | தொண்டாமுத்தூர் |
| 110 | சுந்தரம், திரு. கே. ஆர். | குடியாத்தம் |
| 111 | சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர் |
| 112 | சுந்தரம், திரு. மு. | ரிஷிவந்தியம் |
| 113 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முகையூர் |
| 114 | சுந்தரராஜ், திரு. நா. | திருமயம் |
| 115 | சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர் |
| 116 | சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 117 | சுப்பிரமணியன், திரு.கே.எம்.எஸ். | போடிநாயக்கனூர் |
| 118 | சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு |
| 119 | சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர் |
| 120 | சுப்பிரமணியன், திரு. பி. கே, | பவானிசாகர் |
| 121 | சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 122 | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம் |
| 123 | செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 124 | செல்லமுத்து, திரு. எம். | திருவாரூர் (செ.வ) |
| 125 | செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 126 | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. | அரவக்குறிச்சி |
| 61 | கருப்பையா, திரு. ஏ. டி. | |



| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். (2) | தொகுதியின் பெயர். (3) |
|---|---|---|
| 127 | சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு |
| 128 | சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் |
| 129 | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130 | சோமு, திரு. என். வி. என். | பூங்கா நகர் |
| 131 | சௌந்திரராசன், திரு. கே. | திருச்சி–2 |
| 132 | சௌந்திரராஜன், திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம் |
| 133 | சௌரிராஜன், டாக்டர் கே. | தி. நகர் |
| 134 | தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 135 | தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 136 | தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 137 | தங்கவேலு, திரு. பி. | செயங்கொண்டான் |
| 138 | தவசி, திரு. ஆர். | பரமக்குடி (செ.வ) |
| 139 | தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 140 | தனுக்கோடித் தேவர், திரு. கே. | முதுகளத்தூர் |
| 141 | தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| 142 | தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 143 | திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 144 | திருமாறன், திரு. பெ. | ஆலங்குடி |
| 145 | திருமான், திரு. இரா. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. | பென்னகாம் |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ். | பர்கூர் |
| 149 | துரைமுருகன், திரு. | இராணிப்பேட்டை |
| 150 | துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 151 | துரைராஜ். திரு. பி. | சங்கரநயினார் கோவில் (செ.வ) |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 153 | நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர் |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. | பெருந்துறை |
| 156 | நவநீதகிருஷ்ண பாண்டியன், | ஆலங்குளம் |
| 157 | நாச்சிமுத்து. திரு. கே. பி. | மேட்டூர் |
| 158 | நாராயணசாமி, திரு. கே. | திருவண்ணாமலை |

| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். (2) | தொகுதியின் பெயர். (3) |
| --- | --- | --- |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய) |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம் |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 166 | பலராமன், திரு. இல. | போளூர் |
| 167 | பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம் |
| 168 | பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 169 | பழனியப்பன், திரு. கு. பா. | விழுப்புரம் |
| 170 | பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ) |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 174 | பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ) |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ) |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 179 | பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ) |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. | சமயநல்லூர் (செ.வ) |
| 181 | பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. | வில்லிவாக்கம் |
| 183 | புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. | தாராபுரம் (செ.வ) |
| 186 | பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் (செ.வ) |
| 187 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ) |
| 188 | பெருமாள், திரு. ரா. கு. | விளாத்திகுளம் |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ) |
| 190 | பொன்னுரங்கம் திரு. ப. | இராயபுரம் |



| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். (2) | தொகுதியின் பெயர். (3) |
| --- | --- | --- |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 192 | மணி, திரு. டி. | விளவங்கோடு |
| 193 | மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர் |
| 194 | மாணிக்கம், திரு. எம். எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ) |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம் |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி–1 |
| 198 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 199 | முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 201 | முத்துவேல், திரு. என். | வானூர் (செ.வ) |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 | முனுசாமி, திரு. மு. ப. | பாலக்கோடு |
| 205 | மூர்த்தி, திரு. பி. | பேரணாம்பட் (செ.வ) |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ.வ) |
| 207 | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் |
| 208 | ரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். | சத்தியமங்கலம் |
| 210 | ரங்கசாமி, திரு. க. | உளுந்தூர்பேட்டை (செ.வ) |
| 211 | ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை |
| 213 | ராஜமாணிக்கம், திரு. எம். கே. | முசிரி |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல் |
| 215 | வரதராஜன், திரு. என். | திண்டுக்கல் |
| 216 | விசயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில் |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம்(செ.வ) |
| 219 | விஜயபாலன், திரு. என். | பூம்புகார் |
| 220 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |

| தொடர் எண் | உறுப்பினரின் பெயர். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (2) | (3) |
| 221 | விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு |
| 222 | வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு |
| 223 | வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர் |
| 224 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 225 | வெங்கடரெட்டி, திரு. டி. | ஓசூர் |
| 226 | வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர் |
| 227 | வெள்ளைச்சாமி, திரு. ரா. | ஆத்தூர் |
| 228 | வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு |
| 229 | வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை |
| 230 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர் |
| 231 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டார் |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமைபெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா—அமைச்சர்.
5. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்—அமைச்சர்.
6. மாண்புமிகு திரு. க. கலைமணி—அமைச்சர்.
7. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**1983 அக்டோபர் 29, சனிக்கிழமை,**
**ஐப்பசி 12, ருத்ரோத்காரி–திருவள்ளுவர் ஆண்டு 2014.**

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை."

எப்பொழுதும் தன்னை வியந்து கொண்டாடாதே. நன்மை தராத செயல்களை மனத்தாலும் விரும்பாது ஒழிக.

### 1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

பால் உற்பத்தியைத் தீவிரப்படுத்த அரசு மேற்கொண்ட நடைமுறைகள்.

* வினா எண். 81— திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் உற்பத்தியைத் தீவிரப்படுத்த அரசு என்னென்ன முறைகளை மேற்கொண்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) விவரமான அறிக்கை ஒன்று ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் எந்தெந்த மாவட்டங்களில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் இயங்கவில்லை? அப்படி இல்லாத மாவட்டங்களில் எப்போது கூட்டுறவு பால் ஒன்றியங்களை அமைக்க அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

** 114-117 ம் பக்கங்களில் இணைப்பு I—ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1983 அக்டோபர் 29

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் அந்த பால் ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன. சில மாவட்டங்களில் நான்–அபிஷியல்ஸ் தலைவர்களாக இருக்கிறார்கள். மற்றும் மிகுதியாக இருக்கிற மாவட்டங்களில் நிர்வாக வசதியையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மாநிலத்தில் 'ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட்' என்ற அந்த நிறுவனத்தின் மூலமாக 'அமுல்' என்கிற குழந்தை உணவைத் தயாரித்து ஏராளமாக விற்பனை செய்கிறார்கள். அது போல நம்முடைய மாநிலத்திலே அந்தத் திட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆனந்தில்' அமுல் விற்பனைப் போல தமிழகத்தில் 'ஆவின்' என்கிற பால் பொருள்கள் ஏற்கெனவே உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. அவை நல்ல முறையில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே இந்த பால் ஒன்றியங்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நடைபெறுகிறது என்பது உண்மை. ஆனால் இன்னும் பல பெரிய நகரங்களில், உதாரணமாக கோவை போன்ற பெரிய நகரங்களில் அந்த ஒன்றியங்களினால் முழுமையாக மக்களுக்கு பால் சப்ளை செய்ய [illegible]யாமல், அங்கே சாதாரணமாக பால் விற்கக் கூடியவர்கள் கலப்படம் பண்ணி மிக மோசமாக பால் விநியோகம் நடத்துவதைத் தடுத்து, முழுமையாக அந்த ஒன்றியங்களே பால் சப்ளை செய்ய என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வோடு நூற்றுக்கு நூறு விழுக்காடு நானும் ஒன்றுபடுகிறேன். கோவை மாநகரத்திலேயும், அதனைச் சுற்றியுள்ள நகரங்களிலேயும் இன்றையதினம் நல்ல பால் கிடைப்பது பற்றாக்குறையாக இருக்கிறது. எனவே, அந்தக் குறைபாட்டை நீக்குவதற்காக 3 கோடி ரூபாயில் சிறுவாணி அணைக்கு செல்கிற அந்த நெடுஞ்சாலையில் விரைவிலே ஒரு பால் பண்ணையை அமைக்க ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறோம். விரல் விட்டு எண்ணக்கூடிய சில நாட்களில் அதற்கான அடிக்கல் நாட்டப்பெறும்.



1983 அக்டோபர் 29]

இப்போது கோவை நகரம் மாநகராட்சியாக ஆகியிருக்கிறது என்கிற காரணத்தால், தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், நடுத்தர மக்கள் இருக்கிற காரணத்தால், அரசே அங்கு பால் விநியோகம் செய்ய வேண்டும் என்கிற அந்த முனைப்போடு காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறோம். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் நிறைவேற்றப்படும் என்று கருதுகிறேன்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்பதற்கு—1977க்கு—முன்னாலே தமிழ்நாட்டிலே பால் உற்பத்தி எவ்வளவு என்பதையும், மாண்புமிகு முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே பால் வளத் துறையினுடைய பால் உற்பத்தி எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி பொறுப்பு ஏற்ற நேரத்தில் 1977 ஆம் ஆண்டு, 3 லட்சத்து 80 ஆயிரம் லிட்டர் மட்டுமே பால் உற்பத்தி ஆகின்ற திறன் இருந்தது தமிழ்நாட்டில். எங்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல்வேறு தீவிர நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்ட காரணத்தால் 1983 ஆம் ஆண்டு, இந்தத் தேதி வரையில் 7 லட்சம் என்ற குறியீட்டை அடைந்திருக்கிறோம். அதாவது 3 லட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால் அதிகப்படியாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. தற்போது மொத்தத்தில் 7 லட்சம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் தான் பால் அதிகமாக உற்பத்தி செய்கிற மாவட்டம். அந்த மாவட்டத்திலே பல கிராமங்களிலேயிருந்து, இன்றும் பால் உற்பத்தி செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்ய வேண்டும் என்று சொன்னால், கூட்டுறவு பதிவாளர்கள் பதிவு செய்வதில்லை என்று கூறுவதாகச் சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா? பதிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே சொல்கிறார்கள் என்று உறுப்பினர் சொல்கிறார்கள். அவர்களே தகவலை அளித்தால் அல்லது தகவல் இருப்பவர்களை அனுப்பச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. பாரமலை: தலைவர் அவர்களே, இந்த பால் உற்பத்தி சங்கங்கள் அமைப்பதில் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதற்கான ப்ரொசீஜரை சிம்பிளிபை பண்ணி துரிதமாக அவைகளை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது ஒரு சங்கம் அமைக்கவேண்டுமென்றால் கூட்டுறவுத் துறை ரிஜிஸ்திரார் பார்வையிட வேண்டி இருக்கிறது. லோன் கொடுக்கவேண்டுமென்றால் பேங்கின் கன்சன்ட் இருக்க வேண்டும், சப்சிடி கிடைக்குமா என்று ஐ. ஆர். டி. பி.யிலிருந்து கேட்கிறார்கள், இவைகளுக்கு எல்லாம் ஒரு வருடம்கூட கால தாமதம் ஏற்பட்டு அமைக்கமுடியாமல் இருக்கிறது. ஆகவே பால் உற்பத்தி சங்கங்கள் அமைக்க லாயக்குள்ள இடங்களிலாவது லாயக்குள்ள இடங்கள் என்று இலாகா எந்த இடங்களைத் தீர்மானிக்கிறதோ அந்த இடங்களிலாவது உடனடியாக ஏற்பாடு செய்ய தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, ஏற்பாடுகள் செய்யப்படும்.

முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான ஊதிய நிர்ணயம்

*—வினா எண் 82 திரு. சி. கோபால்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தற்போது நிர்ணயம் செய்திருக்கும் ஊதியத்தை விரைவில் அமுல்படுத்த அரசிடம் ெ யற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) மற்றும் (ஆ) மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கான பணி விதிகள் வெளியிடப்பட்டு விட்டதால் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குநரால் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. சி. கோபால்: தலைவர் அவர்களே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நன்றி. இந்த முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு? தற்போது மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் இந்த நிர்ணயத்தால் எத்தனை பேர்கள் நன்மை அடைவார்கள் என்பதை அ மச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அந்த ஆசிரியர்களின் ஊதிய விகிதம் 675-1200 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்வதால் பயனடைகிற





ஆசிரியர்களின் எண்ணிக்கை 4,398. அவர்களில் 3944 பேர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சில பேர்களுக்கு வெளிமாநிலப் பல்கலைக் கழகங்களின் சான்றிதழ்களை எவால்யுவேட் செய்யவேண்டியிருப்பதால் காலதாமதமாகிறது. சில பேர்களுக்கு அசல் சான்றிதழ்களை அனுப்பாததால்தாமதம் ஆகிறது. சில பேர்களுக்கு பணிப் பதிவேடுகள் தேர்வு நிலை வழங்கும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளதால் தாமதம் ஆகிறது. இன்னும் 454 பேர்களுக்குத் தான் செய்யப்பட இருக்கிறது. 3944 பேர்களுக்கு செய்யப்பட்டு விட்டது.

திரு. சி. கோபால்: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளிலே பணிபுரிகின்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஊதியத்தை நிர்ணயம் செய்கிறபோது தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலே பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலே உள்ள பல்கலைக் கழகங்களிலே பட்டம் பெற்றவர்களுக்கும் செய்வதற்கு உத்தேசம் உண்டா? அல்லது ஊதிய நிர்ணயத்தில் அவர்களை கன்சிடர் செய்யாத நிலைமை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மற்ற பல்கலைக் கழகங்களிலே தகுதிபெற்றிருந்தாலும் நிர்ணயம் செய்யப்படுகிறது; ஆனால் அவர்கள் பெற்றிருக்கிற சான்றிதழ்களை எவால்யுவேட் செய்ய வேண்டும். அவர்கள் பெற்ற அந்தச் சான்றிதழ்கள் எல்லாம் நம்முடைய சான்றிதழ்களுக்கு சமமாக இருக்கின்றனவா நம்முடைய பாடத்திட்டங்களுக்கு அவர்கள் படித்தவை சமமாக இருக்கின்றனவா என்பதையெல்லாம் பார்த்து நிர்ணயம் செய்ய வேண்டும்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் இன்னும் சில இடங்களில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு கன்சாலிடேட்டட் பே என்று கொடுக்கப்படுவது உண்மையா? அதை மாற்றி மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப்போல் சரியான ஊதியம் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விளக்கத்தைத் தான் இதற்கு முன்னாலே கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலாகச் சொன்னேன். 3,944 ஆசிரியர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னேன்.

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளிலே பணி புரிகின்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சம்பள நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இன்னும் பல்வேறு பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலே இருக்கிறதே, அப்படிப்பட்ட இடங்களிலே உடனடியாக

அவர்களை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக பௌதிகம், இரசாயனம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் கிடைப்பதில்லை; அதனால் போடப்படவில்லை என்ற நிலை இருக்கிறது. அதைப் போக்கிட அரசு துரிதமான நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே காலி இடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. சில பிரிவுகளில் கெமிஸ்டிரி போன்ற பாடங்களில் ஆட்கள் கிடைக்காமல் இருப்பது உண்மைதான். அதற்கும் ஆட்களைப் போடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

## இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு நடத்தப்படும் பயிற்சி வகுப்பு

* வினா எண். 83—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர் [Lower P. E. T]. பயிற்சி நிறுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (அ) ஆம்.

(ஆ) லோயர் கிரேடு உடற்பயிற்சியில் தேர்ச்சி பெற்ற எண்ணற்ற ஆசிரியர்கள் வேலை கிடைக்கப்பெறாத நிலையில் இருந்ததால் அப்பயிற்சி வகுப்பை 1977.78 முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிறுத்தி வைக்க அரசு உத்தரவிட்டது. இவ் வகுப்பை நிரந்தரமாக மூடிவிட சமீபத்தில் அரசு உத்தரவிட்டுள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. ஆசிரியர்கள் அதிகமாக இருப்பதால் அதிக மாணவர்களை சேர்த்துக்கொள்ள முடியவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது எவ்வளவு ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் அவர்களுக்கு எவ்வளவு காலக்கட்டத்தில் வேலை கிடைப்பதற்கு அரசு முயற்சி செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான விவரங்கள் இங்கே இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதற்குப் பதில் சொல்ல முடியும். லோயர் கிரேடு என்று ஒரு பயிற்சி இருந்தது. ஹையர் கிரேடு என்று ஒரு பயிற்சி இருந்தது, பி. பி. ஈ. டி,



என்ற இன்னொரு பயிற்சியும் இருந்து கொண்டு வருகிறது. இப்போது இருக்கிற உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றின் பாடத்திட்டங்கள். மாணவர்களுடைய மனோநிலைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஹையர் கிரேடு தரத்தில் ஒரு பயிற்சியும் பி பி. ஈ. டி. தரத்தில் ஒரு பயிற்சியும், எம். பி. ஈ. டி. தரத்தில் ஒரு பயிற்சியும் அரசு அமுல் செய்து கொண்டு இருக்கிறது. லோயர் கிரேடு என்ற பயிற்சியை எடுத்துவிட்டதால் ஹையர் கிரேடு என்று பெயரை நாம் மாற்றவேண்டியிருக்கிறது. அதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே ஒரு பயிற்சி போய் விட்டதைப் போல் இருந்தாலும் நமக்குத் தேவையான எண்ணிக்கையில் பயிற்சி பெறுவதற்கு வகுப்புகள் இருக்கின்றன என்பதை இங்கே நான்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மற்றபடி அவ்வப்போது போதுமான நிதி ஆதாரங்கள் வரும்போது பணியிடங்களை ஏற்படுத்தி ஆசிரியர்களை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த லோயர் கிரேடு பயிற்சியை நிறுத்தி விட்டதாகவும், ஹையர் கிரேடு பயிற்சி இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எம். பி. ஈ. டி. பயிற்சி பெற்றவர்களை மேல்நிலைப்பள்ளிகளில் நியமிக்க வேண்டும் என்றால் 10 ஆம் வகுப்பு பிளஸ்1, பிளஸ்2 ஆகிய 3 வகுப்புகளிலும் 400 குழந்தைகள் இருக்க வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே மொத்தம் 4 அரசுப் பள்ளிகளில் தான் அந்த ஒரு எண்ணிக்கையில் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆகவே 400 குழந்தைகள் என்று இருப்பதை 300, 350 என்று மாற்ற ஏதாவது ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அதிகமாக ஆசிரியர்களை போட முடியாத நிலைமையில் தான் இத்தகைய ஒரு வரம்பை வைத்து இருக்கிறோம். நாம் அதிகமாக பணியிடங்களை தோற்றுவிக்கின்ற போது அந்த விதிகளைநாம் மாற்றநடவடிக்கை எடுக்கலாம்.

## தமிழகத்திலுள்ள ஆங்கிலோ இந்திய உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்

*வினா எண். 84—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை ஆங்கிலோ இந்திய உயர் நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன?

(ஆ) அவைகளில் எத்தனை பள்ளிகளில் தமிழ் அல்லாத பிற மொழிகளில் பாடங்கள் போதிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தமிழகத்தில் 18 ஆங்கிலோ இந்திய உயர்நிலைப்பள்ளிகளும் 26 ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

(ஆ) எல்லா ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தில் தான் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதியில் மொழிப்பாடமாக தமிழ் அல்லது இந்தி, பிரெஞ்சு மலையாளம் போன்ற இதர மொழிகள் கற்பிக்கப்படுகின்றன.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆங்கிலோ உயர்நிலைப்பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் அரசு எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு உள்ளதா? இன்றைக்கு மக்களிடத்தில் இருக்கின்ற ஆங்கில மோகத்தின் காரணமாக படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் இந்த பள்ளிகளை நோக்கிச் செல்கிறார்கள். அரசின் மூலமாக இதுபோன்ற பள்ளிகளை துவக்குகின்ற ஆலோசனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பாக ஆங்கில மொழி வழி சொல்லித் தரப்படுகின்ற பள்ளிகள் ஆரம்பிக்கின்ற உத்தேசம் இல்லை. தனிப்பட்டவர்கள் இத்தகைய பள்ளிகளை ஆரம்பிக்க முன்வருகின்ற போது அந்தந்த பகுதிகளுடைய தேவைகளை உணர்ந்து, மக்கள் வேண்டுகோளை பார்த்து நாம் அனுமதிகளை தந்துகொண்டு வருகிறோம்.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதி, மத இன பாகுபாடு அற்ற சமுதாயம் என்று எல்லோரும் ஒப்புக்கொண்ட நேரத்தில் மேலும் மேலும் ஜாதி இன மத உணர்வுகளை வெளிக்காட்டுகின்ற வகையில் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டுமா? ஒரு முன் மாதிரியாக நம் நாட்டில் ஆதற்கு தடை விதிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லாம் சிறுபான்மை இனத்தவர் களுக்கு வழங்கப்பட்டு இருக்கிற அடிப்படை உரிமைகள். அவர்களுக்கு இந்த உரிமைகளை அரசியல் அமைப்புச் சட்டத்தில் தந்து விட்ட காரணத்தால் அதைத் தடுக்கின்ற அதிகாரம்கூட நமக்கு இல்லை.

திரு. பாபு ஜனார்த்தனம்: பேரவைத் தலைவர் அவர்களே ஆங்கிலோ இந்திய உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளி களை மானேஜ்மென்ட் செய்கின்றவர்கள் தனி ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். அவை அரசினுடைய கன்ட்ரோலில்



இருப்பதாகவே தெரியவில்லை. அவர்கள் வைத்ததுதான் சட்டம் என்ற முறையிலே அட்மிஷனிலும் மற்ற விவகாரங்களிலும் நடந்து கொள்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஏதாவது பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் [illegible]ர்களே, அவர்கள் பள்ளிகளை நடத்துகின்ற முறையில், [illegible]களுடைய குழந்தைகளுக்கு முதலிடம் தந்து அவர்களைச் சே[illegible]துக்கொள்வார்களானால், அதை நாம் தடுப்பதற்கில்லை. அதற்காகத்தான் அந்தப் பள்ளிகளை வர்கள் ஆரம்பிக்க நாம் அனுமதி தந்திருக்கிறோம். மற்ற மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில், பிற பள்ளிகளிலே எப்படி நடந்து கொள்கிறார் களோ அப்படித்தான் அவர்கள் நடந்து கொண்டுவருகிறார்கள். அதிலே தவறு நடக்கிறது என்று குறிப்பாக ஏதாவது புகார் வருமானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்; நம்முடைய அதிகாரிகள் போய் பார்த்து ஆவன செய்வார்கள்.

**குளச்சலில் சைமன் காலனி பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும் திட்டம்.**

*வினா எண். 85—திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரிமாவட்டம் குளச்சலில் சைமன் காலனி பாலம் புதுப்பித்துக் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்பொழுது தொடங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ மற்றும் ஆ) கன்னியா குமரி மாவட்டத்தில் குளச்சலையும் சைமன் காலனியையும் இணைக்கும் வகையில் பாம்பூரி வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்டவும், சாலையை மேம்பாடு செய்யவும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணி) அனுப்பிய ரூ. 11 இலட்சம் மதிப்புள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஆற்காடு நகராட்சிப் பேருந்து நிலையம்.**

*வினா எண். 86—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகராட்சிப் பேருந்துநிலையம் கட்டுமானப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆற்காடு நகராட்சிப் பேருந்து நிலையம் அபிவிருத்திப் பணிகள் நான்கு கட்டங்களில் கட்டி முடிக்க பொதுப்பணித் துறையின் மூலமாக மேற்கொள்ளப் பட்டு முதற்கட்டப் பணிகளான 9 பேருந்துகள் நிற்குமிடமும்

இரண்டு கடைகளும் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளன. இரண்டாவது கட்டப்பணிகளான 10 பேருந்துகள் நிற்குமிடமும் 7 கடைகள் கட்டுதல் பணி நடைபெற்று வருகின்றன.

(ஆ) மத்திய ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ், இத் திட்டப் பணிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 25.00 இலட்சமாகும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆற்காடு பேருந்து நிலையத்தில் இப்பொழுது கட்டப்படுகிறது. அதற்கு நேர் எதிராக 10, 20 பேருந்துகள் நிற்கின்றன. அப்படி இருந்தும், 10 வருடத்திற்கு முன்னாலே அமைக்கப்பட்ட பெட்ரோல் பங்க் ஒன்று இன்னும் அங்கு அமைக்கப்பட்டிருப்பதாலே, அதனை விட்டு விட்டு ஆர்க்கிடெக்ட் பிளான் போட்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த பெட்ரோல் பங்க் இன்னமும் நடந்து வருகிறது. 10 வருடத்திற்கு முன்னாலே அமைத்தவர்கள் கமிஷனரிடத்திலே எந்தவிதமான அக்ரிமெண்டும் போடாமல் காலி பேப்பரிலே கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறார்கள். அதைக் காலி செய்து பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதோடு, அந்தப் பேருந்து நிலையத்திற்கு பெரியார் பேருந்து நிலையம் என்று பெயர் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே கடந்த ஆண்டிலே எடுத்துக்கொள்ளப்பட்டது இந்தத் திட்டம். இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.25 இலட்சம். இது 4 கட்டங்களாக நடந்து வருகிறது. தற்போது அங்கே ஒரு நாளைக்கு 25 பேருந்துகள் வந்து போகின்றநிலைமையிருக்கிறது. ஆகவே 31 பேருந்துகள் ஒரே சமயத்திலே நிற்கக்கூடிய வகையிலே பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. அதே சமயத்திலே 31 கடைகளும், ஒரு உணவு விடுதியும் கட்டுவது இத்திட்டத்திலே சேரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், ஏற்கனவே பெட்ரோல் பங்க் இருந்ததையெல்லாம் கருத்திலே கொண்டு தான் இந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த இன்னமும் திட்டம் தீட்டப்பட, அதை நடைமுறைப்படுத்துகிற சூழ்நிலையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவைகளையெல்லாம் கட்டி முடித்ததற்குப் பின்னாலே, அதற்கு பெரியாருடைய பெயரை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது அரசின் மூலமாக பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதே சமயத்தில் பேருந்துகள் நிற்கின்ற பழைய ஷெட்டின் அளவு 104 அடி அகலமும் 108 அடி நீளமும் ஆகும். அந்தப் பேருந்து நிலையத்தைக் கலைத்துவிட வேண்டுமென்று முதலிலே திட்டமிடப்பட்டது. அப்படிக் கலைத்தால் அந்த ஷெட்டுகள் உபயோகப்படாமல் போகும் என்பதால் அதனால் சுமார் ரூ. 5 இலட்சம் நட்டம் ஏற்படும் என்ற காரணத்தினால், அந்த



ஷெட்டை அப்படியே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் அந்தக் கூறைக்குக் கீழேயே கடைகளைக் கட்டுவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறார். அதை தயவு செய்து மாற்றி அந்தக் கடைகளை ஷெட்டுக்குள்ளே கட்டாமல், அந்தக் கூறைக்குக் கீழே ஆடிட்டோரியம் அரங்கம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்ட விஷயம். ஆகவே மீண்டும் இதில் ஒரு ஆடிட்டோரியம் கட்டவேண்டுமென்று சொன்னால், தனித் திட்டமாகத்தான் கொண்டுவர வேண்டும். இதை அரசாங்கத்தினுடைய பரிசீலனைக்குமாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு, தனியாக திட்டமிடப்பட்டு கட்டி முடிக்கப்படும்.

## பெரியகுளத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 87—திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளத்தில் பஸ் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) அதன் விஸ்தீரணம் என்ன?

(இ) புதிய நிலையத்தில் எத்தனை பேருந்துகள் நிற்க வசதி ஏற்படுத்தப்படும்?

(ஈ) அதில் பயணிகள் தங்கும் அறை கட்டும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) 1 ஏக்கர் 86 சென்ட்.

(இ) பத்து பேருந்துகள்.

(ஈ) தற்போது இல்லை.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பெரியகுளத்திலே இருக்கிற பேருந்து நிலையம் மிகவும் இடைஞ்சலான இடத்திலே இருப்பதால் அதில் பேருந்துகள் வந்து திரும்புவதற்கு மிகவும் சிரமப்படுகின்றன. ஆகவே உடனடியாக பெரியகுளத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்றை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, புதிய பேருந்து நிலையத்தைப் பற்றி தான் இந்த விவரங்களைச் சொன்னேன். கொய்யாதோப்பு என்ற இடத்திலே புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தில் பேருந்து நிலையம் என்று எதுவும் இல்லை. பேருந்துகள் ரோடிலே நிற்கின்றன. இந்த நிலைமை ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டாக இல்லை. கடந்த 10 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. கொய்யாத்தோப்பாக இருந்தாலும் சரி, மாந்தோப்பாக இருந்தாலும் சரி அல்லது தென்னந்தோப்பாக இருந்தாலும் சரி விரைவில் இந்த பேருந்து நிலையத்தை ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேருந்து நிலையம் இருக்கிறது. நானே நேரடியாக போய் பார்த்திருக்கிறேன். ஆனால் போதுமான அளவிற்கு இல்லையென்பதை வேண்டுமானால் ஒத்துக் கொள்கிறேன். பேருந்துகள் ஏறத்தாழ ஒரு நாளைக்கு 130 க்கு மேலே வந்து செல்கிற தன்மையிலே பெரியகுளம் பேருந்து நிலையம் இருக்கிறது. அதை விரிவுப்படுத்த வேண்டுமென்பதற்காக கொய்யாத்தோப்பு என்ற இடத்திற்கு கொண்டு செல்ல இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடி மாந்தோப்போ, தென்னந்தோப்போ கிடைத்தால் அதையும் பார்க்கப்படும்.

### அரசு போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம்.

*வினா எண். 88—**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீண்ட தொடர்கால ஊதியத் திட்டம் (Longevity Pay Scheme) அமுல்படுத்தப்பட்ட பிறகு 1982-ம் ஆண்டு இறுதிவரை ஓய்வுபெற்ற தொழிலாளிகளில் எத்தனை பேர்களுக்கு அரசு போக்குவரத்துத் துறையில் வேலை செய்த காலத்திற்குரிய பணிக்கொடை (Gratuity) வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதற்கு மேல் எத்தனை பேர்களுக்கு ஓய்வூதியம் (Pension) வழங்கப்பட்டுள்ளது?

(இ) ஓய்வூதியம் பெறுவதற்கு அரசு நிர்ணயம் செய்துள்ள தகுதி முறை என்ன?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) 758 நபர்களுக்கு பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 454 நபர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) அரசு ஆணை எண் 284, நிதி, நாள் 31-3-80-ன் படி, கழகப் பணியாளராக 1-5-1975 அல்லது அதற்குப்பின் எந்த நாளிலிருந்து கழகத்தில் தொடர்ந்து பணியிலிருக்கின்றாரோ, அந்த நாளை வரையறையாகக் கொண்டு, அதுவரை உள்ள நிகர பணிக்காலத் தகுதிப் பிரகாரம் (Non-Qualifying Service) 10 ஆண்டுகள் உண்டென்றால் அவருக்கு ஓய்வூதிய விதிகளின் படி ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகின்றது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பிரகடனம் செய்த 31-3-80 தேதியிட்ட 284 எண்ணுள்ள அரசாணை, 18-1-83 அன்று சென்னை உயர்நீதி மன்றம் செல்லாது என்று தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகும், 5-8-83-ல் 18-4-75 தேதியிட்ட 378 எண்ணுள்ள அரசாணையை அமல்படுத்த வேண்டுமென்று சென்னை நீதிமன்றம் மீண்டும் தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகும், 284 எண்ணுள்ள அரசாணைப் படி தான் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று அரசு நிலை எடுத்திருப்பது சரியா? அரசு சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வந்ததற்கு பிறகு அதை அமலாக்கக் கூடாது என்று அரசாங்கம் நினைக்கிறது என்று சொல்வது தவறாகும். எனவே அந்த முடிவே சரியாக இருக்குமானால், நீதிமன்றம் அப்படிப்பட்ட தீர்ப்பை கொடுத்திருக்குமானால், அதிலே அரசு மேல்முறையீட்டிற்கு போகாமல் இருந்திருக்குமேயானால், அதிலே துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-8-83-ல் தீர்ப்பு வந்ததற்கு பிறகும் தற்போதும் கூட ஓய்விலே செல்லக் கூடிய ஓட்டுநர்களும், நடத்துனர்களும் 284 ஆம் எண்ணுள்ள அரசாணைப்படி ஒப்புதல் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறதே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்தத் தீர்ப்பு சம்பந்தமாக அரசு என்ன நிலை எடுத்திருக்கிறது என்பது கூட இன்றைக்கு தெளிவில்லாமல் இருக்கிற நிலைமையில், ஏற்கெனவே இருக்கிற 378 ஆம் எண்ணுள்ள அரசாணைப்படி தொழிலாளர்களுக்கு கொடுக்கக்கூடிய கிராச்சிட்டி, பென்ஷன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அதற்காக தொழிலாளர் சங்கங்களின் ஒரு கூட்டத்தைக் கூட்டலாமென்றும் இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தாரே அந்த வகையிலே நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி அதில் நீதிம றத்திலிருந்து ஏதாவது ஒரு முடிவு அறிவிக்கப்பட்டிருக்குமேயானால் அந்த முடிவை அமுலாக்கக்கூடாது என்று அரசாங்கம் நினைப்பதில்லை. ஆனால் அதேநேரத்தில் மேல்முறையீடு போக அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாது என்று நான் கருதுகிறேன். இந்த அடிப்படையில் ''எந்தெந்தத் தொழிலாளர்கள் விரும்புகிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க முயற்சி எடுக்கிறோமே தவிர இதை வாங்கித்தான் ஆக வேண்டும்'' என்று கட்டாயப்படுத்தும் உரிமை எங்களுக்கு இல்லை, வேண்டாம் என்று சொல்லும் உரிமை யாருக்குப் கிடையாது. பேச வேண்டும் என்று சொல்லி, சில கூட்டங்களைக் கூட்டியிருக்கிறோம். அதில் சில முறைகள் இது பற்றி பேசக்கூடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களும் கலந்து கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டிருப்பார்கள். தேவையானால் மீண்டும் கூட்டுகிற கூட்டத்தில் இதைப்பற்றி விவாதிக்க தடை இல்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நான் தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஆகவே அதில் சேர்த்துக் கொள்வதில் தடை இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ''உச்ச நீதிமன்றத்திலிருந்து அப்படி ஒரு தீர்ப்பு வந்திருந்தால்'' என்று சொல்கிறார்கள். வந்ததா இல்லையா என்பது கூட அரசாங்கத்திற்குத் தெரியாதா? உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கூட அரசாங்கத்திற்குத் தெரியாமல் இருக்கும் என்று நான் கருதவில்லை. தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டம் கூட்டியிருந்தால் என்றால், கூட்டப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது அரசுக்குத் தெரியாதா? ஆகவே நான் கேட்க விரும்புவது என்னவென்றால், நீங்கள் அந்தப் புள்ளிவிவரங்களோடு ஜீ.ஒ.க்கள் வெளியிட்டு அமல் நடத்தவில்லை என்று உண்மையாகக் கருதி ஒரு உறுப்பினர் எடுத்துக்காட்டும்போது அதிலுள்ள குறையை அரசாங்கம் ஏற்று அதைத் திருத்துவதற்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதை திட்டவட்டமாக அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கூட்டம் கூட்டியிருந்தால் என்று அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள். கூட்டம் கூட்டினோம். அதில் வந்து பேசினார்கள். உறுப்பினர் அவர்கள் ஒருவேளை கலந்து கொண்டிருப்பார் என்றுதான் சொன்னேனே தவிர கூட்டம் கூட்டியது பற்றி நான் சந்தேகத்தோடு சொல்லவில்லை. உறுப்பினர் அவர்கள் கலந்து கொண்டாரா இல்லையா என்பதைத்தான் சந்தேகத்தோடு சொன்னேன். அவர்கள் கட்சியின் சார்பில் நிச்சயமாக கலந்து கொண்டிருப்பார்கள். இருக்கிற குறைபாடுகளை சுட்டிக்காட்ட வேண்டுமென்பதற்காகத்



தான் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கோர்ட் தீர்ப்பைப் பொறுத்தவரையில் இதை போக்குவரத்துக் கழகங்கள் நேரடியாகக் கவனிக்கிற காரணத்தினால் — மேல்முறையீடு போக உரிமை இருக்கிறது. இன்னும் அது சம்பந்தமான சரியான தகவல்கள் நீதிமன்றத்திலிருந்து கிடைக்கவில்லை. உயர்நீதிமன்றத்திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு செல்ல தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இடைப்பட்ட காலத்திற்குள்ளே நிறைவேற்றவேண்டும் என்று கட்டாயப்படுத்துவது அவ்வளவு சரியாகயிருக்காது.

சென்னை நகரில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க, புதிய திட்டம்.

*வினா எண். 89—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் அடுத்த பத்தாண்டுக் காலத்தில் ஏற்படக் கூடிய போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க ஏதேனும் புதிய திட்டம் வகுக்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்க்கவும் போக்குவரத்தினை மேம்படுத்தவும் 10 வருட கால அளவில் பல முனைப்பு திட்டங்களை சென்னை நகர காவல் துறையினர் வகுத்துள்ளனர். அதன்படி—

(1) அகலமில்லாத சாலைகளை ஒருவழிச்சாலையாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) மெதுவாகச் செல்லும் வாகனங்களை படிப்படியாக உரிமங்கள் வழங்காமல் குறைத்து, இறுதியில் அவற்றை நகரின் போக்குவரத்திலிருந்தே நீக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) சென்னை எஸ்பிளேனேட் அருகிலுள்ள இரு பேருந்து நிலையங்கள் சென்னை நகர எல்லைக்கு அப்பால் மாற்றப்படுவதால், தற்போது பாரிமுனையில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழக பெருநகர் பேருந்துகள் இங்கு மாற்றி அமைந்திட உதவும். மேலும் இதனால் போக்குவரத்து நெருக்கடி குறைவது மட்டுமின்றி, நீளமான உடலமைப்பு உள்ள வாகனங்களின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்படும்.

(4) ஜார்ஜ் டவுன் மற்றும் பார்க் டவுன் ஆகிய இடங்களிலுள்ள லாரி கொட்டகைகளை நகரின் எல்லைக்கு அப்பால் அப்புறப்படுத்தப்படும்.

(5) இன்னும் சென்னை நகரின் சாலைகளில் லாரிகளின் நடமாட்டத்தைப் படிப்படியாகக் கட்டுப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. து. புருஷோத்தமன்** : தலைவர் அவர்களே, இதற்கு
முன்னால் இப்படிப்பட்டதொரு கேள்விக்கு நல்லதொரு
செய்தியை அரசுச் சார்பில் கொடுத்தார்கள். சென்னை பீச்
ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து அடையாறு வரை ஒரு சர்குலர்
ரெயில்வேபாதை அமைக்கும் திட்டம் வளர்ந்து வருகிற
போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தும் நல்லதொரு
திட்டமாக அமையும். அது என்னவாயிற்று என்று கேட்க
விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் மேலை
நாடுகளில் குறிப்பாக சிங்கப்பூரில் பெரும்பாலான சாலைகளும்,
பொதுவாக எல்லாச் சாலைகளும் ஒருவழிச் சாலையாக
அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அமைச்சர் அவர்கள்,
ஒரு சில சாலைகளை ஒருவழிச்சாலையாக மாற்ற உத்தேசிக்கப்
பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். ப்ராட்வே சாலை
மிகவும் நெரிசலாக இருக்கிறது. வால்டாக்ஸ் ரோட்,
ஆற்காடு சாலை, உஸ்மான் ரோடு ஆகியவை மிகவும் நெரிசலான
சாலைகளாக இருக்கின்றன. ஆக, எந்தெந்தச் சாலைகளை
ஒருவழிச்சாலையாக மாற்ற இருக்கிறார்கள் என்ற விவரத்தை
அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : தலைவர் அவர்களே,
எந்தெந்தப் பாதைகள் என்ற குறிப்பு என்னிடம் இல்லை.
ஆனால் நெரிசலாக இருக்கிற சாலைகளை எதை எதையெல்லாம்
ஒருவழிச்சாலையாக மாற்ற முடியுமோ அப்படி மாற்ற
நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். பத்தாண்டுகள் என்று
சொல்கிறபோது இன்று நெரிசலாக இல்லாத பாதைகள்கூட
நெரிசலாகும் வாய்ப்பு இருக்கிறது. தக்க நடவடிக்கைகளை
மேற்கொள்ள இருக்கிறோம். பாதாள ரயில் திட்டத்தைப் பற்றி
இங்கே சொன்னார்கள். அதற்கு மத்திய அரசு அனுமதி
அளிப்பதாக உத்திரவாதம் தந்திருக்கிறார்கள். அந்த
அடிப்படையிலே அவர்கள் அதை மேற்கொள்ளயிருக்கிறார்கள்.
ஆகவே, அதைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. மத்திய
அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே உள்ளே ஒரு பிரச்னை
இது. ஆகவே, இதிலே சேர்த்துக்கொள்ள முடியவில்லை.
நேரடியாக தமிழக அரசு எதை எதைச் செய்ய முடியுமோ,
அவைகளை நான் சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 9-30)

**திரு. து. புருஷோத்தமன்** : பேரவைத் தலைவர் அவர்களே,
பொதுவாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதற்குக் காரணம்,
சாதாரண நடைமுறை விதிகள் பின்பற்றப்படுவதில்லை
என்ற குறைபாடு இருக்கிறது. குறிப்பாக, பல்லவன் பஸ்
போகின்றது என்று சொன்னால், இடையிலே ஒரு ஆட்டோ
ரிக்ஷா சென்றால், அந்த பஸ்ஸை நிறுத்திவிட்டு, இடையில் சில
கேள்விகளைக் கேட்டு, அதற்கு ஆட்டோ ரிக்ஷாக்காரர் பதில்
சொல்ல, அதற்குப் பின்னால் வருகின்ற வாகனங்கள் மேற்



கொண்டு செல்ல முடியாமல், போக்குவரத்து ஸ்தம்பித்துவிடக்
கூடிய நிலையிருக்கிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்
படுமா? போக்குவரத்து காவல்துறை அதிகாரிகள்கூட அதைப்
பார்த்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர, அந்தப் போக்குவரத்து
நெரிசலை அப்புறப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு
இல்லை. பொதுவாக சென்னையில், பல்வேறு இடங்களில்
இந்த பல்லவன் போக்குவரத்தில் இந்த குறைபாடு இருக்கிறது.
அதனால், இந்த நெரிசலைத் தவிர்க்க, போக்குவரத்து காவல்
துறைக்கு ஒரு அறிக்கையோ அல்லது அறிவிப்போ கொடுக்க
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** ; தலைவர் அவர்களே,
பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றுகின்ற
தொழிலாளர்கள் அப்படி நடந்து கொள்வதாக ஒரு குறையைச்
சொல்லியிருக்கிறார்கள். இதிலே பணிபுரியும் 18,000
தொழிலாளர்களும் அப்படிச் செய்வார்கள் என்று நிச்சயமாக
ஏற்றுக்கொள்ள முடியாது. ஆங்காங்கே யாராவது இரண்
டொருவர் தவறுகள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.
இல்லை என்று சொல்ல நான் தயாராக இல்லை. அவர்கள்மீது
நடவடிக்கை எடுத்துக்கொண்டு தான் இருக்கிறோம். இன்னும்
கூட நான் உங்களைக் கேட்டுக்கொள்வது — அந்தத் தொழிலாளர்
களுக்கும் உங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆனால்,
நடவடிக்கை எடுக்கிறபோது, வேறுவிதமான கேள்விகள் கேட்கக்
கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது; அப்படி கேட்டிருக்கிறார்கள்.
எனவே, இதையெல்லாம் பார்க்கிறபோது, நீங்களும் எங்களோடு
சேர்ந்துகொண்டால், இன்னும் சுலபமாக இருக்கும். அவர்கள்
என்ன நினைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி** : பேரவைத் தலைவர் அவர்களே,
சென்னை அண்ணா சாலை போக்குவரத்திற்கு இடைஞ்சலாக
இருக்கிறது. ஆதலால், இந்த அண்ணா சாலையிலே இருக்கின்ற
கட்டிடங்களையெல்லாம் இடித்து விட்டால், அதைக் கொஞ்சம்
அகலப்படுத்துவதற்கு வசதி ஏற்படும். அண்ணா சாலையில்
ஏற்கனவே, பிளஷரைத் தவிர, லாரி மற்றும் டிராக்டர்,
சைக்கிள் போன்ற வாகனங்கள் செல்லுவதற்குத் தடை விதிக்கப்
படுமா? போக்குவரத்து விதியை மீறுகின்றவர்கள்மீது, அவர்கள்
லைசன்ஸ் ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி** : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அது அவர்களுடைய
தொகுதியாக இருந்தால், அப்படிச் சொல்லியிருப்பாரா என்ற
அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஆனால், அவர்கள் சொன்ன
இந்த யோசனையைச் செய்தால், இடைஞ்சல் வருமென்று
கருதுகிறேன். இருந்தாலும், நெரிசலைக் குறைக்கின்ற
வகையில், கடைசியாக சில யோசனைகளைச் சொன்னார்கள்.
அதைப்பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டு வருகிறது. முதலில்
சொன்ன யோசனையை அல்ல; கடைசியாக சொன்ன
யோசனையை.

நெடுந்தூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் வீடியோ பொருந்தும் திட்டம்.

*வினா எண். 90—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுந்தூரம் செல்லும் அரசுப் பேருந்துகளில் வீடியோ பொருத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; தேவைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த போக்குவரத்திலே வீடியோ வைப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். வெகுதூரம் செல்லும் சூப்பர் டீலெக்ஸ் பஸ்களை நிறைய ஓட்டுகிறீர்கள். அதற்கு அதிகமான சார்ஜ் பாசஞ்ஜர்களிடமிருந்து வாங்குகிறீர்கள். எந்த கன்டிஷனில்? டேப் ரிக்கார்டர் மியூசிக் இருக்கும், நல்ல சீட்டு அமைப்புகள் இருக்கும், ஸ்பூத்தாகரன் பண்ணக்கூடிய ஒரு நிலையிருக்கும், இதற்கெல்லாம் தான் அதிக சார்ஜ் வாங்குகிறீர்கள். பல சூப்பர் டீலெக்ஸ் பஸ்களில் நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அநேக சூப்பர் டீலெக்ஸ் பஸ்களில் மியூசிக் இல்லை; கம்பிளீட்டாக நிறுத்தப்பட்டிருக்கிறது; இல்லையென்றால், ரிப்பேர் என்று சொல்லப்படும். சீட்டுகள் எல்லாம் கிழிந்திருக்கின்றன. ரேட்டிலிங் அதிகமாக இருப்பதால், உடம்பு வலி தாங்க முடியவில்லை. ஆனால், சார்ஜைக் குறைக்கவில்லை. மாறாக, அதிக சார்ஜை வாங்குகிறீர்கள். இப்படி நீங்கள் சூப்பர் டீலெக்ஸ் என்ற பெயரை வைத்துக் கொண்டு, ஒருவித வசதிகளும் செய்யாமல் ஜனங்களை ஏமாற்றுகிறீர்கள். அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. தலைவர் அவர்களே, வீடியோவைப் பற்றிய கேள்வி கேட்டு, அது ஒரு பக்கம் இருக்கட்டும் என்று சொல்லி விட்டார்கள். நானும் ஒரு பக்கம் அதை விட்டுவிட்டு, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி சில அம்சங்களுக்கு என்னுடைய பதிலைச் சொல்கிறேன். இங்கே மியூசிக்கைக் காட்டி, கட்டணத்தை உயர்த்தவில்லை. நாங்கள் அந்த மியூசிக்கைக் கொடுத்திருப்பதுகூட அடிஷனலாகத்தான். நாங்கள் வாங்குகின்ற கட்டணத்திற்கு மேலே அது கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, வீடியோ போடுவதற்காகவோ அல்லது டேப் ரிக்கார்ட் போடுவதற்காகவோ அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யப்படுவதில்லை. இப்படிச் சொல்வதால் நான் அவைகளைப் போடுவதை மறுக்கத் தயாராக இல்லை. இவைகளைப்பற்றிக் கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். சீட்டுகள் ஆடிக் கொண்டிருக்கின்றன, கிழிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஏன் அவைகள் கிழிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினரவர்கள் வருகின்றபொழுது யாராவது கிழித்திருப்பார்கள்; அந்தப் பேருந்து திரும்பிச் செல்லும்பொழுது அதுசரி செய்யப்படலாம். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்மைப் பொறுத்த வரையில் மக்களிடத்தில் உண்மையைச் சொல்ல நாம் மறுக்கிறோம். அப்படிச் சொன்னால் மக்களிடத்தில் நம்மைப்பற்றி கெட்ட பெயர் வந்துவிடும் என்ற எண்ணத்தில் அவ்வாறு இருக்கிறோம். இலட்சக் கணக்கான ரூபாய்களைப் போட்டு பேருந்துகள் வாங்கப்படுகின்றன. ஆனால் அவைகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று மக்களிடத்திலே சொல்வதற்கு அரசியல்வாதிகள் தயாராக இல்லை, என்னையும் சேர்த்துதான் சொல்கிறேன். அரசாங்கம் செய்யவில்லை என்று குற்றம் சொல்வதைவிட மக்களிடத்திலே அவைகளை எப்படிப் பயன்படுத்துவது என்பதுபற்றி ஒவ்வொரு அரசியல் கட்சியும் சொல்வதற்கு நடவடிக்கையை நிச்சயமாக எடுக்க வேண்டும். தற்பொழுது இந்த எக்ஸ்பிரஸ் பஸ்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றி விடுகிறோம். இதற்கும் குறைவான காலத்தில் மாற்றவேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு பேருந்தும் 400 கிலோ மீட்டர் தூரம் செல்கிறது என்றால், போகவர 800 கிலோ மீட்டர் ஆகும். இப்படி ஓடுவதால் சில நேரங்களில் தவிர்க்க முடியாத குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. அதைக் கவனித்து நல்ல முறையில் கண்காணிக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஏற்கனவே ஸ்பேர் பஸ்கள் எட்டு சதவீதம் என்று இருந்ததை மாற்றி இப்பொழுது 14 சதவீதம், 15 சதவீதம்என்று உயர்த்தி இருக்கிறோம். இதன் மூலம் ஒவ்வொரு பேருந்தையும் வாரம் ஒரு முறை கட்டாயம் நிறுத்தி, கவனித்து பராமரித்தாக வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். மழையின் காரணமாகத் தவிர்க்க முடியாமல் சில சங்கடங்கள் நேருகின்றன. இதன் காரணமாகச் சில நேரங்களில் பேருந்துகளை நாங்கள் நிறுத்தி கண்காணிக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. எதிர்காலத்தில் சரியாகக் கவனிக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் இருக்கிறது.





திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது மாநிலத்தில் ஓடுகின்ற சூப்பர் டீலக்ஸ் பேருந்துகளில் மற்ற மாநிலங்களை விடக் கட்டணத்தைக் குறைவாக வசூலித்தாலும்கூட, மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் வீடியோக்கள் பொருத்தப்படுகின்றன. ஆனால் அந்த வீடியோக்கள் நல்ல முறையில் இயங்கவில்லை. அவைகளைக் கண்காணித்து அரசு பணிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நான்கு பேருந்துகளில்தான் நாம் வீடியோக்களைப் பொருத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் வீடியோ பொருத்திய வண்டிகளிலே பயணம் செய்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. அத்தனையும் இயங்கிக் கொண்டிருப்பதாகத்தான் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். வேண்டுமானால் மீண்டும் அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்கிறோம்.

சத்தியமங்கலம் வழியாகக் கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் வரை புதிய இரயில் தடம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 91—திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வழியாகக் கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் வரை புதிய இரயில் தடம் ஏற்படுத்த ஆய்வு செய்யப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) இப்பணிக்காக பூர்வாங்க அளவு (Survey), தென்னக இரயில்வேயினால் மேற்கொள்ளப்பட்டு நில அளவு பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. பொறியியல் மற்றும் போக்கு வரத்து நில அளவு அறிக்கை 1984 மார்ச்சு திங்களில் இரயில்வே அமைச்சகத்துக்கு சமர்ப்பிக்கப்படலாம் என தென்னக இரயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த இந்த இரயில் பணி தமிழகத்தையும் கர்நாடகத்தையும் இணைக்கின்ற இரயில் தளமாகும், தமிழகத்தில் எந்தப் பகுதியிலிருந்து சாம்ராஜ் நகருக்கு இணைக்கப்படுகிறது என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, மேட்டுப் பாளையத்திலிருந்து சாம்ராஜ் நகருக்குச் செல்வதாக ஏற்பாடு என்று எனக்கு ஞாபகம். ஈரோட்டிலிருந்து அது செய்யப்பட வேண்டுமென்று முயற்சியெடுக்கப்படுவதாகவும் எனக்கு ஞாபகம். அதையும்கூட மத்திய அரசுக்கு எழுதுவதாகத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? இதன் பணிகள் எப்பொழுது துவங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது? எப்பொழுது முடிக்கப்படும் என்றும் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொல்லியபடி, அளவுகளை முடித்து 1984 மார்ச்சு திங்களில் அதுபற்றிய குறிப்புகளை மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்து விடுவோம் என்று பொது மேலாளர் தெரிவித்துள்ளார். எப்பொழுது முடிக்கப்படும் எவ்வளவு பணம் தேவை என்ற குறிப்புகள் எங்களுக்குக் கொடுக்கப்பட வில்லை.





திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சாம்ராஜ் நகருக்கும் சத்தியமங்கலத்திற்கும் இணைக்கப்படும் இந்த இரயில் பாதை ஈரோட்டிலிருந்து கோபி வழியாகச் செல்கிறதா அல்லது மேட்டுப் பாளையம் வழியாகச் செல்கிறதா? சர்வே முடிந்து விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து சாம்ராஜ் நகரத்திற்குச் செல்கின்ற அந்தத் தடத்தை ஆய்வுக்கு எடுத்திருக்கிறோம். அதிலேயே சில பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன. அவர்களே அந்த வழித்தடம் எப்படி அமையவேண்டும் என்பது குறித்து ஒருமித்த முடிவுக்கு வருவார்களானால் அதுபற்றி ஆலோசிக்கப்படும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, கோவை மாநகரம் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி. மத்திய அரசு போட்டிருந்த திட்டத்தின்படி அந்த இரயில் தடம் மேட்டுப் பாளையத்திலிருந்து சத்தியமங்கலம் வழியாக சாம்ராஜ் நகருக்கு வரவேண்டும் என்பதுதான். கோவை தொழிற் சாலைகள் நிறைந்த பகுதி என்பதால் அங்கிருந்து பம்பாய், பெங்களூர் போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு வசதியாக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு ஒரு கண்ணோட்டத் தோடு பெரியார் மாவட்டமாகிய ஈரோட்டிலே இருந்து அந்தத் தடத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று யோசிக்கிறார்களோ என்று கருதுகிறேன். ஆகவே பழைய திட்டத்தின்படியே அமல் படுத்துகின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டுகள் சொல்லக் கூடாது. அமைச்சர் அவர்களிடம் இதற்குப் பதில் இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே போடப்பட்ட திட்டத்தின்படி என்றாலும், யாருக்கும் பாதிப்பு இல்லை என்றால் அதனை ஈரோடுக்குக் கொண்டு வரலாம் என்ற முயற்சியினை எடுக்கிறோம். ஆனால் பாதிப்பதாக இருந்தால் அந்த முயற்சியினை நாங்கள் கைவிட்டுவிடுகிறோம்.

[1983 அக்டோபர் 29

இராமநாதபுரம் மற்றும் காரைக்குடியில் ஆதிதிராவிடர் மகளிர் விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 92 திரு. த. இராமசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) இராமநாதபுரத்தில் ஆதிதிராவிடர் மகளிர் தங்கும் விடுதி (Hostel) கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: இராமநாதபுரத்தில் ஆதி
திராவிடர் மகளிர் விடுதி கட்டுவதற்காக உரிய இடத்தினைத்
தேர்ந்தெடுத்து உடனடியாக அறிக்கை அனுப்பும்படி
இராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரை ஆதி
திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர்
கேட்டுள்ளார். அது கிடைக்கப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை
எடுக்கப்படும்.

*வினா எண். 93—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி நகரில் ஆதிதிராவிடப் பெண்கள் விடுதி கட்ட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) மேற்படி கட்டிடம் முடிவு பெறாத நிலையில் இருக்க காரணம் யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இராமநாதபுரம்
மாவட்டம், காரைக்குடி நகரில் ஆதிதிராவிடர் நலத்துறையின்
கீழ் மாணவியர் விடுதி (100 பேர்) கட்ட தமிழ்நாடு ஆதி
திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழக மேலாண்மை
இயக்குநர் அனுப்பிய ரூ. 9.58 இலட்சம் மதிப்புள்ள திருத்திய
மதிப்பீட்டுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) தேவகோட்டையில் உள்ள மாவட்ட முன்சீப் நீதி
மன்றம் இந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு 19-3-82-ல்
தடை உத்தரவு விதித்தது. எனவே நீதி மன்றத் தடை
உத்திரவினால் வேலைகளைத் தொடர்ந்து செய்ய இயலாமல்
போயிற்று.

திரு. சி. த. சிதம்பரம்: தலைவர் அவர்களே, நீதி மன்றத்தின்
தடை காரணத்தால் கட்டடம் கட்ட முடியவில்லை என்று
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே நீதிமன்றத்தின்
உத்தரவுப்படி அந்த இடத்திலே கட்டடத்தைக் கட்டாமல்
வேறு இடம் பார்த்து உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு
செய்யப்படுமா?



1983 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, தற்போது அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதன் காரணத்தால் அரசு அந்தப் பகுதியிலே மாணவிகள் விடுதியினைக் கட்ட முடியவில்லை. ஆனால் மாணவிகள் விடுதியினைக் கட்ட வேண்டியது மிக அவசியமாக இருக்கின்றது என்பதை உணர்ந்து வேறு தகுதியான இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த இடத்திலே விடுதியைக் கட்டுகின்ற நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி நகரில் ஆதி திராவிட மாணவிகள் விடுதி கட்டுவதற்கு கோர்ட் தடை இருக்கின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதேபோல் தமிழகத்திலே ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவது மற்றும் அவர்களுக்கு தங்க இடம் கொடுத்தல் போன்றவற்றிற்கு எல்லாம் கோர்ட் தடைகள் இருக்கின்றன. எனவே கோர்ட் தடை காரணமாகவே ஆதி திராவிட மக்களுக்கு நன்மை செய்வதில் தடங்கல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றதே, எனவே இந்த நிலைமைகளை நிரந்தரமாகத் தீர்க்கின்ற வகையிலே அரசு ஏதாவது புதிய திட்டத்தைத் தயாரிக்குமா? அந்த எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நீதிமன்றத்திற்குச் செல்வது என்பது
அவர்களுடைய சொந்த விருப்பத்திற்கேற்ற ஒன்றாகும்.
ஜனநாயக நாட்டிலே அதை நாம் தடுக்க இயலாது. இருந்
தாலும் அரசைப் பொறுத்தவரையில் ஆதிதிராவிட மக்களுக்கு
வீட்டு மனை வழங்குவதாக இருந்தாலும், விடுதிகள் கட்டுவதற்
குரிய இடங்களைத் தேர்வு செய்கின்ற நிலைமையிலும்
அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கின்ற நிலைமையினை
உணர்ந்து அரசு இதிலே நடவடிக்கைகளை ஏற்கெனவே
எடுத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் துரிதமான நடவடிக்கை
களை எடுக்கக்கூடிய சாத்தியம் இல்லை. ஏற்கெனவே இருக்கக்
கூடிய முறைகளின் அடிப்படையில் தான் நாம் நடவடிக்கை
களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே அந்த வழி
வகைகளைத்தான் நாம் பின்பற்ற முடியும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

கொல்லிமலை லேம்ப் சங்கத்தின் மூலம் அமைக்கப்படவுள்ள பழப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 94—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி
திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

கொல்லிமலை லேம்ப் சங்கத்தின் மூலம் அமைக்கப்படும்
Fruit processing Unit-க்கு மத்திய அரசு NCDC ஒப்புதல் அளிக்க
கால தாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை
என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: கொல்லிமலையில் பழப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவுவதற்கான கொல்லிமலை லேம்ப் சங்கத்தின் செயற்குறிப்பு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு நிதி உதவி கோரி அனுப்பப் பட்டுள்ளது. அக்கழகம் தனது அலுவலர் குழு ஒன்றினை தொழிற்சாலை நிறுவப்படவிருக்கும் கொல்லி மலைக்கு நேரில் அனுப்பி ஆய்வு செய்தது. அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் கொல்லிமலை லேம்ப் சங்கம் தான் தயாரிக்கவிருக்கும் பொருட்களைத் தானாகவே விற்பனை செய்துவிட இயலாதாகையால், அப்பொருட்களை விற்பதற்கு தேசிய விவசாய கூட்டுறவு விற்பனை சங்கம் (N.A.F.E.D.) போன்ற விற்பனை நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப்பட விருக்கும் பொருட்கள் மாநிலத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக விற்பனை செய்யப்படும் என்றும், எனவே இத் திட்டத்திற்கான தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியை வழங்கும்படியும் அக்கழகத்தை இவ்வரசு கேட்டுக் கொண்டு இருக்கிறது. மேற்படி கழகத்தின் சம்மதத்தினை விரைந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. சி. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, கொல்லி மலையில் அன்னாசி புரூட் ப்ராசசிங் யூனிட் எத்தனை லட்சம் மதிப்பீட்டில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது? விரைவாக அதை அமைப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையைப் பொறுத்த வரையில் அங்கே அன்னாசி பழம் அதிக அளவில் விளைகிற காரணத்தால் அங்கேயிருக்கும் லேம்ப் சங்கத்தினர் அந்தத் தொழிலை நம்பி அந்தப் பழத்தை உற்பத்தி செய்வதில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு அவர்களுடைய பொருளாதார வசதியையும் மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு, நாள் ஒன்றுக்கு 0.25 டன் பழத்தை ப்ராசஸ் செய்யும் தொழிற்சாலையை ஏறத்தாழ 6.26 லட்சம் செலவில் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலையை விரைவாக ஆரம்பிப்பதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தைப் பொறுத்த வரையில், அங்கே தயாரிக்கப்படும் பொருள்களை விற்பனை செய்வதில் எந்த விதமான பிரச்னையும் இல்லாத அளவிற்கு பார்த்துக்கொள்ளும் பொருட்டு, நீங்கள் தேசிய கூட்டுறவு விற்பனை விவசாய சங்கத்தை நாடி அவர்களுடைய உதவியைப் பெறவேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறார்கள். அந்த அடிப் படையில் இங்கே இருக்கும் கூட்டுறவு சங்கப் பதிவாளர்





அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டபோது, அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பொருள்களை நம்முடைய மாநிலத்திலுள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யலாம் என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பெங்களூரில் உள் ரீஜினல் அலுவலகமும் இதற்கு இசைவு தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் புதுடெல்லியில் இருக்கும் கழகத்திற்கு 21-6-83 அன்று இந்த அரசு அத்தகைய விவரங்களைத் தெரிவித்து, விரைந்து ஒப்புதல் அளிக்கவேண்டும் என்றும், நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் கேட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம், லேம்ப் சங்கத்தினர் தயாரிக்கும் பொருள்களை தனியார் துறை மூலமாக விற்பனை செய்வதற்கு இயலுமா என்று அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளார்களா? அரசுக்கு எழுதியிருந்தால், அதற்கு அரசு அளித்த பதில் என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் எழுதியிருப்பதாக தகவல் என்னிடத்தில் இல்லை.

கட்டிகுளம் மற்றும் திருப்புவனத்தில் பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் மாணவர் இல்லங்கள் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 95—திரு. க. பாரமலை: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கட்டிகுளம் மற்றும் திருப்புவனத்தில் பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் மாணவர் இல்லங்கள் ஆரம்பிக்க வேண்டும என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மானாமதுரை வட்டத்தில் ஒரேயொரு பிற்பட்டோர் நலத் துறையைச் சேர்ந்த விடுதிதான் இருக்கிறது. அதிலே 50 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். கட்டிகுளம் பொருளாதாரத்தில் மிகவும் பிற்பட்ட பகுதி. இந்த வருஷத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இடம் கிடைக்காததால் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலை இருப்பதால், கருணை கூர்ந்து வருகின்ற ஆண்டிலாவது பிற்பட்டோர் நலத்துறை ஆஸ்டல் ஆரம்பிக்க அரசு உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிகுளம் மற்றும் திருப்புவனம் ஆகிய இடங்களில் பிற்பட்டோர் நலத் துறையின் மூலமாக மாணவர் இல்லங்கள் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை எதுவும் இதுவரையில் வரப்பெறவில்லை என்றாலும் அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, தேவைப்படின் 1984–85 ஆம் ஆண்டில் மேற்படி இடங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்படி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார். அவரிடமிருந்து பரிந்துரை வந்தவுடன், அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### கூவம் ஆற்றை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண். 96—**திரு. மு. அம்பிகாபதி:** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் கூவம் ஆற்றை மேம்பாடு செய்ய திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. யா.சை.மு.யூசுப்:** வெள்ளக் கட்டுப்பாடு திட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் கூவம் ஆற்றை சேத்துப்பட்டு இரயில் பாலத்திலிருந்து நகர எல்லை வரை மேம்பாடு செய்வதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-50)

**திரு. மு. அம்பிகாபதி:** தலைவரவர்களே, கூவம் மணக்கிறது என்றால் மணத்திலே பலவகை உண்டு. நன் மணம், துர்நாற்றம் என்றெல்லாம் உண்டு. இப்போது இருக்கின்ற நிலையில் இந்த கூவம் ஆற்றை உடனடியாகச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க குறிப்பு இருக்கிறதா? ஏனென்றால் கொசு எல்லாம் ஜம்போசெட் விமானம் மாதிரி இருக்கின்றன. அவை நேரடியாக எம்.எல்.ஏ. ஆஸ்டலில்தான் தாக்குதல் செய்கின்றன. இந்த வகையில் கூவம் நோயின் ஊற்றுக்கண்ணாக இருக்கிறது. ஆகையால் சீர்செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நலனைக் காக்கவும் மற்றவர்களைப் பாதுகாக்கவும் தமிழக அரசு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் திட்டம் ஒன்றைப் போட்டு அரசின் பரிசீலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் திட்டம் ஒன்று நிச்சயமாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** சார், இந்த கொசுக் கடியைத் தவிர்க்க ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு நல்ல கொசு வலை கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**திரு. ரா. உமாநாத்:** அங்கத்தினர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுமா என்று ஏன் கேட்கவேண்டும்? அவர்கள் எல்லா மக்களுக்கும் கொடுக்கப்படுமா என்று கேட்கலாமே. எல்லா இடங்களிலும் கொசு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாசனத் துறையில் கொசு வலை கொடுக்கமாட்டார்கள்.

### பிளவக்கல் அணையிலிருந்து தாமரைக் குளத்திற்குக் கால்வாய் மூலம் தண்ணீர் விடும் திட்டம்.

*வினா எண். 97— **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் திருவில்லிப்புத்தூர் தொகுதி பிளவக்கல் அணையில் இருந்து தாமரைக்குளத்திற்குக் கால்வாய் மூலம் தண்ணீர் விட அரசு செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(இ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** (அ) ஆம்.

(ஆ) ரூ. 17,500

(இ) வருவாய்த் துறையினால் நிலம் ஆர்ஜிதம் செய்தபின் இத்திட்ட வேலைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் இக்குளத்தின் 81.96 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் பாசனம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவரவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதி, பிளவக்கல் அணையிலிருந்து தாமரைக்குளத்திற்கு கால்வாய் வசதி செய்வதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுவதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். ஒரு நிலச்சுவான்தார் நிலம் தரமுடியாது என்று கூறியதால் இன்னும் அந்த வேலை நடைபெறவில்லை. 3 வருடங்களுக்கு முன்னால் இதே சட்டமன்றத்தில் 17,500 ரூபாய் செலவில் இதே தாமரைக்குளத்திற்கு கால்வாய் வசதி செய்யப்போகிறோம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 3 வருடங்களுக்குப் பின்னால் இப்போது செலவு முன்னைவிட கூடுதல் ஆகுமே. அதற்கு அமைச்சரவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பிளவக்கல் அணையிலிருந்து தனியாக 535 மீட்டர் நீளத்தில் ஒரு கால்வாய் வெட்டி, தாமரைக்குளத்திற்கு தண்ணீர் கொண்டுசெல்ல 1979–80 ஆம் ஆண்டு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. விருதுநகர் கோட்ட செயற்பொறியாளர் ஒப்புதல் அளித்திருக்கிறார். அது நீங்கலாக, வருவாய்த் துறை நில ஆர்ஜிதம் செய்து, நிலத்தை ஒப்படை செய்தவுடன் பணி தொடங்கப்படும். அந்த நில ஆர்ஜித வேலை இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. நில ஒப்படை பணி முடிந்த பின்னால், அந்த நேரத்தில் எவ்வளவு செலவாகும் என்று பார்த்து, உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உடனடியாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, பிளவக்கல் அணையிலிருந்து தாமரைக்குளத்திற்கு கால்வாய் வசதி செய்கின்ற நேரத்தில், அதைப்போன்று கால்வாய் வசதி பெறாத கண்மாய்கள் நிறைய இருக்கின்றன; ஒருசில கண்மாய்களுக்கு கால்வாய் வசதி இருக்கிறது. மேற்கொண்டு எல்லா கண்மாய் களுக்கும் கால்வாய் வசதி ஏற்படுத்த அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவரவர்களே, இந்த பிளவக்கல் திட்டத்தின் வாயிலாக ஏறத்தாழ 40 குளங்கள் பயன் பெறுகின்றன. தாமரைக்குளத்திற்கு தற்போது கால்வாய் வசதி இல்லாததைப் போன்று பல்வேறு குளங்களுக்கு கால்வாய் வசதி இல்லை என்று தெரிகிறது. திட்டத்தின் பயனைபெறும் குளங்கள் எந்தவிதத்திலாவது பாசன வசதி பெற்றாகவேண்டும். அந்த அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டு, குளங்கள் கால்வாய் வசதி பெறும் அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம்.

* வினா எண். 98— திரு ம.ர. சின்னராசு: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா நீர்ப்பாசனத் திட்டம் நிறைவேறுவதற்குரிய வாய்ப்புகள் உள்ளனவா?

(ஆ) இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?





மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ஆம்.

(ஆ) பாண்டியாறு—புன்னம்புழா நீர்மின் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக கேரள தமிழக மாநிலங்களுக் கிடையே 1965 ஆம் ஆண்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இத்திட்டத்தின் மீது முடிவெடுக்குமுன் பாண்டியாறு—புன்னம்புழா நதிகளின் நீரை பாசனத்துக்கு திருப்பிவிட முறையீடுகள் வரப் பெற்றது. இதுகுறித்து கேரள அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு இரு அரசுகளும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவது சம்பந்தமாக மேற்கொண்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை, மேட்டுப்பாளையம், அவினாசி மற்றும் பல்லடம் தாலுகாக்களின் வறண்டு இருக்கின்ற அந்தப் பகுதி களுக்கு வளத்தைப் பெருக்குவதற்காக உள்ள ஒரே திட்டம் இந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலில் கேரள அரசோடு 1965 ஆம் ஆண்டு பேசப் பட்டது என்று குறிப்பிட்டார்கள். 1965-லே இருந்து தொடர்ந்து பேசப்பட்டும் இந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் தாமதப்படுகிற காரணத்தினால், தற்போது கேரள அரசோடு ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் மூலமாக நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, மிகுதியாக கடலில் கலக்கும் தண்ணீரை திருப்பிவிட்டு, இந்த வறண்ட பகுதிகளில் பயன்படுத்த அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டுபோடப்பட்ட திட்டத்தில் தமிழகம் நீர் மின் உற்பத்திக்காக மட்டும்தான் இந்தத் தண்ணீரைப் பயன்படுத்தும் என்று இருந்தது. அதற்குப் பிறகு, கோவை மாவட்ட விவசாயிகளுடைய வேண்டுகோளை ஏற்று, பாசனத்திற்கும் தண்ணீரைத்திருப்பிவிட, கேரளஅரசாங்கத்தோடு புதிய ஒப்பந்தம் போடக்கூடிய சூழ்நிலை உருவாகியது. அதற்குப் பிறகு 1974—வரையில் பல்வேறு நிலைகளில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இறுதியாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கேரள அரசின் முன்னாள் முதலமைச்சர் ஈ. கே. நாயினார் அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி புதியதொரு ஒப்பந்தத்தை உருவாக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, பின்னர் இரண்டு மாதிரி ஒப்பந்தங்கள் தயாரிக்கப் பட்டன. ஒரு ஒப்பந்தம் கேரள அரசாலும், மற்றொரு ஒப்பந்தம் தமிழக அரசாலும் தயாரிக்கப்பட்டு, அது குறித்து சட்டவல்லுநர்களின் கருத்தை அறிவதற்காக அனுப்பப் பட்டுள்ளது. சட்ட வல்லுநர்களின் யோசனை எதிர்பார்க்கப் படுகின்றது. அந்த யோசனை வந்த உடன் விரைவில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டு நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இதில் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, அந்த மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த பேச்சு வார்த்தை இரண்டு மாநில அரசுகளோடு மட்டும் நடைபெறுகிறதா, அல்லது மத்திய அரசாங்கம் இதிலே ஏதாவது துணை செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழக, கேரள மாநில அரசுகளுக்கு இடையிலேதான் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதிலே மத்திய அரசு எந்தவிதமான குறுக்கீடோ அல்லது ஒத்துழைப்போ தரக்கூடிய வாய்ப்பு உருவாகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞானிகளுடைய கருத்துப்படி கோவை மாவட்டம் கொஞ்சம் கொஞ்சமாக பாலைவனமாக மாறி வருகிறது. இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் கோவை மாவட்ட மக்களுக்கு கிடைத்தால் மிகவும் வளம் கிடைக்கும் நிலை இருக்கிறது. அரசு எடுக்கின்ற துரித நடவடிக்கைகளை மேலும் துரிதமாக்கி இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை கோவை மாவட்டம் முழுவதும் விஸ்தரிப்பதற்கு ஏதாவது புதிய திட்டம் இருக்கிறதா? அதாவது இப்போது கேரள அரசோடு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த புதிய ஒப்பந்தத்தில் பயிர் செய்யக்கூடிய நிலங்களினுடைய அளவு ஏதாவது குறிப்பிடப்பட்டு இருக்கிறதா? அப்படி என்றால் எந்தெந்த தாலுக்காக்களில் எத்தனை ஏக்கர் நிலங்கள் நீர் பரப்புக்கு பயன்படுத்த அரசு திட்டமிட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குறிப்பு எதுவும் தற்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி போடவும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் 1965-லே திட்டக் கமிஷனால் கிளியர் பண்ணிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நாம் மின்சாரமும் அவர்கள் தண்ணீரும் எடுப்பது என்ற பிரச்சனையிலிருந்து இப்போது நமக்கு நீர் வேண்டும் என்று கேட்டதால் தான்



இதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்று முன்பே மன்றத்திலே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது தண்ணீரும் ஒரு பகுதியாக நமக்குத் தருவது என்று கேரள அரசு அடிப்படையிலே ஒப்புக்கொண்டிருக்கிறதா? அப்படியானால் சுமார் எந்த அளவில் தண்ணீர் அவர்கள் அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றன. அதற்காக பல்வேறு காலகட்டங்களில் 2.6.81, 16.7.81 ஆகிய தேதிகளில் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று அதை தொடர்ந்து இருமாநில அமைச்சர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி கொண்டு வந்திருக்கின்றன. இதுபற்றிய விரிவான விளக்கங்கள் இன்னும் இங்கே தரப்படவில்லை. அது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக கேள்வி கேட்கின்ற நேரத்திலே நிச்சயமாக பதில் தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுத் துறையில் ஜெனரேட்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 99—திரு.சி. கணேசன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) ஜெனரேட்டர்கள் தயாரிக்கும் தொழிலை நடத்த அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) இல்லையெனில் அதைத் தயாரிக்கும் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: (அ) அரசுத் துறையில் ஜெனரேட்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) ஜெனரேட்டர்கள் (மின் உற்பத்திச் சாதனம்) தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்க தனியார் நிறுவனம் முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான நிதியுதவியை, தகுதி அடிப்படையில் முன்னுரிமை அளித்து, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் வங்கிகள் மூலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

## மாதஹள்ளி பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணை

***வினா எண். 100**—திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார்மாவட்டம் தாளவாடி அரசுக்குச் சொந்தமான மாதஹள்ளி பட்டு வளர்ப்புப் பண்ணைக்கு அரசு சென்ற ஆண்டு (1982-83) சுமார் 25 லட்சம் ஒதுக்கியுள்ளதா?

(ஆ) அப்படியானால் அந்த தொகையின் மூலம் என்னென்ன அபிவிருத்திப் பணிகள் நடைபெறுகிறது?

(இ) அதனால், ஏற்படும் பட்டுக்கூடு உற்பத்தி எவ்வளவு? எத்தனை பேர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** (அ) மாதஹள்ளி பட்டுப் புழு வளர்ப்பு பண்ணையில் மண்வள பாதுகாப்பு மற்றும்போதிய எம்5 முசுக்கொட்டை செடி பயிரிட ரூ. 23.65 லட்சம் செலவில் மூன்றாண்டு கால திட்டத்தை செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) 1982-85 ஆகிய மூன்றாண்டுகளில் 500 ஏக்கர் அளவு மண்வள பாதுகாப்பும் மற்றும் இதே போல நாண்காண்டில் 1982-86, 500 ஏக்கரில் எம்5 இன முசுக்கொட்டை பயிரிடவும் அவைகளை பாதுகாக்கும் பணிகளும் நடந்து வருகிறது.

(இ) இத்திட்டத்தினால் 1982–83ல் பட்டுக்கூடு உற்பத்தி 8000 கிலோகிராமிலிருந்து படிப்படியாக உயர்ந்து 30,000 கிலோகிராம் உயர்வு திறனை அடையவும் அத்துடன் கூடுதலாக 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கவும் வாய்ப்பு உள்ளது.

**திரு. ஆர். ரங்கசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சுமார் 500 ஏக்கர் இந்தத்திட்டத்தின் மூலமாக அபிவிருத்தி செய்து 8 ஆயிரம் கிலோ கிராம் பட்டுக்கூடு உற்பத்தியிலிருந்து 30,000-மாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இந்த 8 ஆயிரம் கிலோ கிராம் பட்டுக்கூடு உற்பத்தி சுமார் 10 ஏக்கரிலே எம் 5 பயிரிட்டால் செய்ய முடியும். எனவே இந்த அபிவிருத்தி செய்தும் 30,000, கிலோகிராம் என்பது மிகவும் குறைவு. ஆகவே இதைஆய்வு செய்து அரசு இதிலே அதிகமான அளவிற்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா? அதோடு 200 பேர்களுக்கு அதிகமாக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள், 500 ஏக்கரில் எம் 5 பயிரிட்டால் சுமார் 3,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே இதையும் அரசு கருத்திலே கொண்டு தீவிரப்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலனையில் ஏற்கப்படும்.

**திரு. ஆர். ரங்கசாமி,** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்ணையில் அரசுப் பணியாளர்கள் எத்தனை பேர்கள் பணிபுரிகிறார்கள்? சராசரியாக இப்பொழுது எத்தனை பேர்கள் தினக் கூலியாக இருக்கிறார்கள்? ஆண்டுதோறும் இந்தப் பண்ணைக்காக அரசு எவ்வளவு நிதியை ஒதுக்குகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

(அ) பேரவைக் கூட்டம் நடைபெறும்போது அவைக்கு வெளியில் புதுக்கொள்கைகளை அறிவிப்பது.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 24 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து சட்ட மன்றம் நடந்து கொண்டிருக்கிறது. சட்டமன்றம் நடக்கிறபோது, முக்கியமான கொள்கைப்பிரச்னைகளை யாரும், சட்டமன்றத்தை விட்டு வெளியே சொல்வது என்பது மரபு அல்ல. ஆனால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக, கல்வி அமைப்பிலே ஒரு பெரிய மாற்றம் வரப்போவதாக, அதாவது இரண்டு நாட்கள் தொழில் கல்வி 4 நாட்கள் படிப்பு என்ற வகையில் ஒரு பெரிய மாற்றுத் திட்டம் வரப்போவதாக, 'பேங்க் ஆப் தமிழ்நாடு' நடத்திய ஒரு கூட்டத்தில் கலந்துக் கொண்டு, முதலமைச்சர் அவர்கள் வெளியே அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரிய திட்டத்தை, கொள்கைப் பிரச்னையை சட்டமன்றம் நடக்கிற நேரத்தில், மன்றத்தை விட்டு வெளியே சொல்லலாமா? இது அவையை அவமதிப்பதாகாதா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது போன்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று ஒரு மாதமாகவே அவர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். நேற்றுதான் நீங்கள் அதைப் படித்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்......

**திரு. ப. பொன்னுரங்கம்:** இதற்கு முன்னாலே அப்படி எதுவும் சொல்லவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால்தான் இப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டத்தை, பாலிசி மேட்டரை அவையைவிட்டு வெளியே அறிவித்திருக்கிறார்கள். இது அவையை அவமதித்ததாகாதா? இதற்கு எங்களுக்கு நீங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே இதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். பாலிசி முடிவாக இன்னும் வரவில்லை. அப்படி வரும்போது அதைப்பற்றி பேசிக் கொள்ளலாம்.

(ஆ) உறுப்பினர்கள் விடுதி அமைந்துள்ள பகுதியில் விளக்கு வசதி.

திரு. மு. அம்பிகாபதி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். காரணம் எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்திலே கூட்டம் போட்டுவிட்டு, இரவு விடுதிக்கு திரும்பி வந்துக் கொண்டிருந்தபோது, என்மீதும் மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் அவர்கள்மீதும், ஒரு சைக்கிள் ரிக்ஷா மோதியது. அவ்வளவு கடுமையான, குகை போன்ற இருள் சூழ்ந்திருந்தது சட்ட மன்ற உறுப்பினர்களின் விடுதியைச் சுற்றி. எங்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சைக்கிள் ரிக்ஷாவிற்கு ஒன்றும் சேதமில்லையே. அப்படி என்றால் பரவாயில்லை. (சிரிப்பு).

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்னது சரி. அந்தப் பகுதியிலே லைட்டுகளே கிடையாது. இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது. சட்டமன்றம் நடந்துக் கொண்டிருக்கிற நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களின் விடுதியிலேயே இந்த நிலை என்றால், மற்ற இடங்கள் எப்படி இருக்கும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கமிஷனரிடம் சொல்லி, விடுதியைச் சுற்றியுள்ள பகுதியிலும், விடுதியிலும், தேவையான விளக்கு வசதிகளைப் போட ஏற்பாடு பண்ணுகிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி சிறைக் கைதிகள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ரா. உமாநாத், என். வரதராஜன், தி. கா. நல்லப்பன், இரா. கருப்பையா, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், சு. பாலன், ப. நெடுமாறன், பெ. சு. திருவேங்கடம், கெ. சொக்கலிங்கம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், மு. அம்பிகாபதி, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, பொ. விஜயராகவன் மற்றும் என். எஸ். வி. சித்தன் ஆகியோர் ''திருச்சி சிறையில் 30 நீண்டகால கைதிகள், அவர்களுடைய சிறை வாழ்க்கை சம்பந்தமாக 50 கோரிக்கைகளை முன் வைத்து 18.10.83 முதல் கால வரையற்ற உண்ணாவிரதம் மேற் கொண்டதால், திருச்சி சிறையிலும், மற்ற சிறைகளிலும் பொது மக்கள் மத்தியிலும் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க





பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு, அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இதற்குப் பெயர் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதனால் நான் படித்த பட்டியலில் பெயர் வரவில்லை. திரு. ஆர். உமாநாத்.

(முற்பகல் 10-10)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சியிலே ஆரம்பித்திருக்கக்கூடிய இந்த சிறை கைதிகளுடைய உண்ணாவிரதம் இன்றைக்கு மதுரை, வேலூர், கடலூர், பாளையங்கோட்டை போன்ற அநேகமாக 5 சிறைகளில் பரவியிருக்கிறது. எல்லா கைதிகளும் பங்குகொள்ளவில்லையென்றாலும், கைதிகள் ஒவ்வொரு குரூப்பாக சேர்ந்து 60 பேர்கள், 70 பேர்கள் என்ற அளவிலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அநேகமாக மாநிலம் பூராவும் பரவியுள்ள நிலைமைதான் இருக்கிறது. சரித்திரத்திலே பல உண்ணாவிரதங்கள் நடந்திருக்கலாம். ஆனால் ஏககாலத்திலே மாநிலத்திலே உள்ள 4, 5 சிறைகளிலே உண்ணாவிரதம் இருப்பது என்பது இதுதான் முதல் தடவை என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதிலிருந்து மாநிலத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான கைதிகள் மத்தியில் எவ்வளவு கொந்தளிப்பு இருக்கிறது என்பதை இந்த அவை உணரும் என்று நினைக்கிறேன். இந்த அவை விவாதிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினையாக இது ஏன் இருக்கிறது என்றால் அடக்குமுறையின் மத்தியில் கூட அவர்கள் இப்படி துணிந்து போராடுகிறார்கள் என்று சொன்னால் சிறையில் எவ்வளவு மோசமான நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊகித்துக்கொள்ளமுடியும். அரசாங்கத்திற்கு இந்த நிலைமை முன்கூட்டியே தெரியாதா என்று கேட்டால்——நான் என் கருத்தைச் சொல்வேன்——தெரியும், கடந்த இரண்டு வருட காலமாக ஒவ்வொரு சிறையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இப்படி நடந்துகொண்டிருக்கிறது——ஏக காலத்திலே அல்ல-- என்பதை நான் சொன்னேன், இப்படியே விட்டுவிட்டால் மாநிலம் பூராவும் பரவும் என்று 3 மாதங்களுக்கு முன்னால் முதலமைச்சருக்கும் தந்தியடித்தேன், சட்ட அமைச்சருக்கும் தந்தியடித்தேன். குறிப்பாக இது பரவும்பொழுது அபாயமான நிலைமை ஏற்படும் என்று அன்றைக்கே முன்னெச்சரிக்கை செய்தேன். ஆனால் அரசு அந்த முன்னெச்சரிக்கையை உதாசீனப் படுத்திவிட்டது. நான் தெரிவித்ததற்கு எனக்கு முதலமைச்சரிடமிருந்து பதில் கூட இல்லை, அதன் விளைவாக மதுரையிலிருந்து இன்றைக்கு வந்திருக்கிற தந்தியில், 'Madurai: Jail Prison-Korairaj

very serious and five others also very serious. Please take action. என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற சிறைச்சாலைகளிலிருந்தும் வந்திருக்கிறது. திருச்சியிலே உண்ணாவிரதம் இருந்த கைதிகளை எல்லாம் அப்புறப்படுத்த வேண்டுமென்ற முறையிலே என்பிளாக்காக அவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் இருக்கிறார்கள், ஆஸ்பத்திரிக்குப் போனவுடனே போலீஸ் வேனிலிருந்து அவர்கள் இறங்க மறுத்துவிட்டார்கள். உடனடியாக போலீஸ் அவர்களை திரும்ப சிறைக்கு கொண்டுபோய் விட்டார்கள். கொஞ்சம் காலதாமதமாகியிருந்தால் அவர்களை அடிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு சீரியஸான நிலைமை ஏற்பட்டிருக்கும், நான் மிரட்டுவதற்காக சொல்லவில்லை, துப்பாக்கிச் சூடு கூட நடந்தாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

சிறைகளிலே இந்தக் கொந்தளிப்பு என்பது நீண்டகாலமாக இருக்கிற பிரச்சினை. ஆகவே டிஸ்கஷனுக்கு அது வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1978 ஆம் ஆண்டிற்கு முன்னதாக இருந்து ஆயுட் கைதிகளாக இருக்கின்றவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். இது ஒரு பெரிய பிரச்சினை. 10 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறவர்கள் எல்லாம விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு சிலரை மட்டும் விடுதலை செய்துகொண்டிருக்கிறார்கள். 1978 ஆம் ஆண்டிற்கு முன்னாலே உள்ள பிரிசினர்களை அப்படி விடுதலை செய்யலாம். ஆனால் சிலரை மட்டும் விடுதலை செய்துவிட்டு 13, 14, 16 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்தவர்களை விடுதலை செய்யவில்லை, அவர்கள் கைதிகளாக இன்னும் உள்ளே இருந்துகொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போன செஷனிலே சொன்னார்கள், விடுதலை பற்றி பரிசீலனை செய்ய இருக்கக்கூடிய அந்த போர்டு கூட்டம் 15 தினங்களுக்கு ஒரு முறை கூடுவதற்கு உத்திரவிடப்படும் என்று சொன்னார்கள். அந்த உத்திரவுக்குப் பின் இதை துரிதப்படுத்த முடியும் என்று சொன்னார்கள். ஆனால் ஜி.ஓ.தான் பாஸாயிற்றே தவிர அது அமலாக்கப்படவில்லை, அந்த டிரபிள் தீரவில்லை. மினிஸ்டருக்கு அதிலே சிம்பதி இருந்தாலும் அந்த போர்டிலே கலெக்டர் பிரைசைடிங் ஆபீசராக இருக்கிறார், எஸ். பி. அதிலே இருக்கிறார். இதை அமைச்சர் யோசிக்கலாம். 15 நாட்களுக்கு ஒருமுறை கூட வேண்டும் என்று சொன்னாலும் even after passing of the G.O.—நீங்கள் உத்திரவு போட்டபிறகும் அது இன்னும் சரியாக அமுல்படுத்தப்படவில்லை. அதனால்தான் இன்னும் டிலே ஆகிறது. அவர்கள் சிபாரிசு செய்து அதை ஐ.ஜிக்கு ரெக்கமண்டேஷன் செய்து அனுப்பி அதை ஐ ஜி. ஆபிஸிலிருந்து சர்க்காருக்கு ரெக்கமன்டேஷன் செய்து அனுப்பி அதை சர்க்கார் பரிசீலனை செய்து அதில் எல்லாம் வரக்கூடிய டிலே தான். அன்று நீங்கள் சொன்ன அந்த தீர்வு இன்னும அமுலுக்கு வராமல் இருக்கிறது. நீங்கள் போட்ட உத்திரவுக்கு பிறகும்காலதாமதம் ஏற்பட்டதால்தான் மதுரையில் ஏப்ரல்மாதம் இந்த காலதாமத்தை எதிர்த்து ஒரு உண்ணாவிரதம் நடந்தது. அதேநேரத்தில் அவர்களுக்கு வயிற்று எரிச்சல் உண்டாக்கக்கூடிய இன்னொரு விஷயம் நடக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். என்ன



என்றால் பாலகாண்டான் நெம்பர் 3531. செஷன்ஸ் கொடுத்து இருக்கக்கூடிய தண்டனை மொத்தம் போட்டால் 21 வருடம் வருகிறது. ஆனால் 6 வருடத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் அவர். 16 வருடம் அனுபவிக்கிறவர்களுக்கு வயிற்று எரிச்சல் இருக்காதா? Within 6 years, he has been released. 21 வருடம் என்பது பிரச்சனை இல்லை. ஆனால் கைதிகள் என்ன நினைக்கிறார்கள் என்றால் அந்த பையன் திருமலை என்ற சினிமா டைரக்டருடைய மகன். ஒரு பெரிய சினிமா டைரக்டர் சிபாரிசின் பேரில் விடுதலை என்று கைதிகள் நினைக்கிறார்கள். That is the talk. The reason is known to them. அதேமாதிரி கோவிந்தசாமி, கட்டைக்கால் முனுசாமி, சின்னவன் இவர்களுக்கு எல்லாம் ஒரே கேஸ். அவர்கள் ரிலீஸ் செய்யப்பட்டார்கள். அதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் பிரிசினர்கள் என்றால் அதில் ஒருவர் ஆளும் கட்சி எம்.எல்.ஏ-வுக்கு சொந்தக்காரர். இப்படி எல்லாம் பிரிசினர்களுக்கு இம்ப்ரஷன் வந்தால் என்ன நடக்கும். அந்த குற்றவாளிகள் 16 வருடம் வரைக்கும் சாக வேண்டுமா என்று கேட்கிறார்கள். வயிற்று எரிச்சல் வராதா? உண்ணாவிரதம் வராதா? இப்படி இருப்பதை விட செத்தால் பரவாயில்லை என்ற ஒரு சைக்காலஜி அவர்களுக்கு ஏற்படாதா? சுயிசைடு எல்லாம் நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்கள். பலசமயம் ரீவோல்டு, அடிதடி நடக்கிறது. ஆபிஸர்கள் அடிக்கத்தான் செய்கிறார்கள். இந்த சூழ்நிலையில் இருந்தால் Naturally these things will come up. 1978-க்கு முன்னால் இருக்கிற சட்டப்படி 10 ஆண்டுகளுக்கு பின்னால் விடுதலை செய்யலாம் என்று இருக்கிறது. இப்போது ரொம்ப சாவம் ஆகிவிட்டது. இனிமேல் தாமதித்தால் பிரச்சனை இல்லை. அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்வது என்பதுதான் அதற்கு வழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கவனிக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டு கூட ஜென்ம தண்டனைப்பெற்ற ஒரு நாக்சலைட்டு குடும்பத்தை அரசு ரிலீஸ் செய்வதற்கு ரெசிஸ்ட் செய்து விட்டார்கள். சுப்ரீம் கோர்ட் இன்டெபனிட் பரோல் என்று விடுதலை செய்து இருக்கிறது. The Supree Court has taken such a decision. சுப்ரீம் கோர்ட் இப்படி ஒரு நிலைமை எடுத்து இருக்கிறபோது இந்த 10 ஆண்டுகள் பூர்த்தி செய்தவர்களை விடுதலை செய்வது என்பதுதான். இல்லாவிட்டால் நிச்சயமாக அங்கே அசம்பாவிதங்கள் நடக்கும். அவர்களை குற்றம் சொல்லி பிரயோசனம் இல்லை. அவர்கள் வெளியே எதுவும் சொல்லமுடியாதவர்கள்.

அரசு, அதிக உணவுக்கு உத்திரவு போட்டிருக்கிறார்கள். அது அவர்களுக்கு போய் சேரவில்லை. அதிக உணவுக்கு உத்திரவு போடும்போது என்ன ஆகிறது என்றால் அந்த உணவை அதிகம் திருடுகிறவனுக்கு அதிக உணவு கிடைக்கிறது. அத்தனை அதிகாரிகளும் பகல் கொள்ளை அடிக்கிறார்கள். வெட்கம் இன்றி திருடுகிறார்கள். அதை தடுக்க கைதிகள் பஞ்சாயத்து வைத்து இருக்கிறார்கள் சர்க்கார். ஆனால் அந்த அதிகாரிகள் இந்த பஞ்சாயத்து இருக்கும்போது அளவை சரியாக வாங்கி கிச்சனில்

கொடுத்து மேற்பார்வை செய்கிறார்கள். ஆனால் அதே அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் அந்த பஞ்சாயத்துக் காரர்களை ஆசை வார்த்தைக் காட்டி ஸ்பிளிட் செய்வது அல்லது அதில் இருக்கிறவர்களை டிரான்ஸ்பர் செய்வது அல்லது அவர்களை இம்மோபிளைஸ் செய்து பிரிசினர் பஞ்சாயத்துக்களை செயல் அற்று போகும் நிலைமையில் இதில் தலையிட்டால் உங்களை டிரான்ஸ்பர் செய்துவிடுவோம் என்று மிரட்டுகிறார்கள். இதனால் சாப்பாடு மோசமாகத்தான் இருக்கிறது நீங்கள் உத்திரவு போட்டும் என்ன பிரயோசனம். இதற்கு ஒரு நல்ல உதாரணம் கடந்த மாதம் சோறு மோசம் என்று கூறி வேலூரில் ஜெயிலில் உள்ள மரண தண்டனைப் பெற்ற கைதிகள் உண்ணா விரதம் இருந்தார்கள். Those who have to undergo death sentence. What a pitiable thing! தூக்கில் இடப்படுகிற கைதிகளின் சோறை எடுக்கிறார்கள். இவர்கள் மனிதர்களா அல்லது காட்டு மிராண்டிகளா என்று நான் கேட்கிறேன்.

(முற்பகல் 10-20)

வார்டுகளிலே திருட்டு நடப்பதைத் தடுக்க நீங்கள் ஒரு முடிவு பண்ணினீர்கள். சில பிராமிஸ் கொடுத்தீர்கள். வார்டுகளுக்கும் மத்தியானத்திலே அல்லது டியூட்டி நேரத்திலே சோறு போடு கிறோம் என்று சொன்னீர்கள். ஆனால், அதை அமுல் நடத்த வில்லை. இந்தக் கொந்தளிப்புக்கு The main reason is worst corruption. சில அதிகாரிகளை நீங்கள் வீட் அவுட் பண்ண வேண்டியிருக்கும் அடிஷனல் சூப்பரின்டென்டன்ட், மதுரை— அங்கேதான் 'ஓர்ஸ்ட்'—திரு. நயினார் முகமது—நான் சொன்ன அத்தனை திருட்டுகளிலும், அத்தனை மோசமான ஆன்ட்டி சோஷியல் நடவடிக்கைகளிலும் அவர் எக்ஸ்பர்ட்டாக இருக்கிறார்.

அதிலே பரிதாபகரமான விஷயம் என்னவென்றால், பெண் வார்டுகளை சில சமயத்திலே தற்காலிகமாக நியமிக்க வேண்டி வரும். அவர்கள் வந்தால் Very sorrowful thing. இவர் இச்சைக்கு ஆளாவதற்கு அவர்கள் அனுமதித்தால்தான் அவர்களுக்கு அப்பாய்ன்ட்மென்ட். With full sense of responsibility. நான் சொல்கிறேன். விளைவு—பர்மா அகதி ரங்கம்மா. அந்த அம்மாவைக் கெடுத்து, அந்த அதிகாரி வேலை கொடுத்தார்; 3 மாதம் கர்ப்பம். அதோடு கைவிட்டார். அந்த அம்மா தற்கொலை செய்தார்களா என்ன என்று யாருக்கும் தெரியாது. ஆகவே, நான் கேட்கிறேன், கவர்ன்மென்ட் டிஸ்கஸ் செய்ய வேண்டிய விஷயம் இது.

கரப்ஷனைக் குறைக்க, வார்டர்களைக் குறைக்க 6 மாதத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்பது அரசாங்கத் தினுடைய முடிவு. அந்த ஆபீசர்களை, இரண்டு வருஷம், மூன்று வருஷம், ஒரு வருஷம் என்று ஏன் வைத்துக் கொண்டிருக் கிறீர்கள்? இவர்களை மாற்றலாம் இல்லையா? வார்டர்களை 6 மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றலாம் என்று சொன்னால், இவர்களையும் மாற்றலாம் இல்லையா?





சிறை விதிகளை மீறினால் கைதிகளுக்குத் தண்டனைக் கொடுக்கிறார்கள். நாம் தயவுசெய்து டிஸ்கஸ் செய்ய வேண்டிய விஷயம் இது. டிரான்ஸ்பர் என்பதை ஏன் தண்டனையாக வைத்துக் கொடுக்கிறீர்கள்? ஒரு கைதியை டிரான்ஸ்பர் செய்தால் சஃபர் ஆவது கைதி அல்ல. அவனுக்குச் சோறு கிடைக்கிறது. ஆனால் சஃபர் ஆவது மனைவி, குழந்தைகள். 100 மைல் தூரத்திற்கு மேல் உள்ள இடத்திற்கு மாற்றினால், அது அந்தக் கைதிக்குத் தண்டனை அல்ல; குடும்பத்திற்குத்தான் தண்டனை அவர்களுக்குக் காசு இருக்கிறதா? ஆகவே, டிரான்ஸ்பர் என்ற தண்டனை கைதிக்கு அல்ல, குடும்பத்திற்குத்தான்.

அடுத்து நாள் பூரா தண்டனை என்ற முறையில் இன்னொரு தண்டனை. அதுதான் சாலிட்டரி கன்பைன்மென்ட். சிறையிலே தனிக் கூறையிலே வைப்பது. தயவுசெய்து அமைச்சர் யோசிக்க வேண்டும். 'Some declaration must be made.' தனிக் கொட்டகையிலே 48 மணி நேரம் பூட்டி வைப்பதா? இடையிலே குளிப்பதற்குக் கொஞ்சம் நேரம் வெளியே விடுகிறார்கள். பைத்தியம் பிடிக்காதா அவனுக்கு? 'Are they not humanbeings Even if they are criminals. Criminals'. என்றாலும், உங்கள் கஸ்டடியிலே இருக்கிற மனிதர்கள். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. சிறைக்குள்ளே, கைதி ஆனாலும், அந்தச் சிறைக் கட்டுப்பாட்டைத்தவிர, மற்றப்படி அடிப்படை உரிமைகள் அவனுக்கும் உண்டு என்று தீர்ப்பளித்திருக்கிறது. துணைத் தலைவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கும் இது தெரியும். ஆகவே, தனிக் கொட்டகையிலே போடுவது தண்டனை அல்ல; 'Torture should not be a disciplinary action'.

அதே மாதிரி ரேடியோ நியூசைத் திறந்து வைக்கிறார்கள். அதை எல்லாக் கைதிகளும் கேட்கிறார்கள். அதை சென்சார் பண்ண முடியாது. ஆனால். பத்திரிகைகளை சென்சார் பண்ணித் தான் இன்னமும் கொடுக்கிறார்கள். ரேடியோவிலே நியூசை எல்லோரும் கேட்கும்போது, ஏன் பத்திரிகையிலே இருக்கக்கூடிய நியூசைப் படிக்கக் கூடாது. இந்த அரசிலே, இந்த ஆண்டிலே, இந்தக் காலத்திலே இதைச் செய்ய வேண்டுமா?

அவர்களுக்குக் கொந்தளிப்பு அளிக்கக்கூடிய பிரச்னைகளைப் பற்றி நான் சொல்கிறேன். புக்ஸ் அனுமதிக்கவேண்டும். ஆனால், லீகல் புக்ஸ் அனுமதிக்கப்படுகிறதா? அவற்றையும் சென்சாருக்கு ஏன் அனுப்ப வேண்டும்?

அடுத்து, விடுப்பு. வருஷத்திற்கு ஒரு தரம் ஒரு மாதம் விடுப்பு, கொடுக்கப்பட வேண்டுமென்று திரு. நரசிம்மன் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்கள்? 'லைஃபர்ஸ் டென்ஷனை'க் குறைக்க வேண்டுமென்றால், அவர்கள் அடிக்கடி வெளியே ஜனங்களோடு, சமுதாயத்தோடு, பழகுவதற் கான சூழ்நிலை உண்டாக வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, பரோலை லிபரலாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். வருடத்திற்கு ஒரு தடவை ஒரு மாதம் கட்டாய விடுப்பு—இப்பொழுது இருக்கிற விடுப்பு போக கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கைதிகளிலே தப்பு செய்தவர்கள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அரசியல் கைதிகளுக்கு வாதாடினால் அர்த்தம் உண்டு.

THIRU R. UMANATH: I do not differentiate.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா கைதிகளுக்காகவும் நீங்கள் வாதாட ஆரம்பித்தால், இப்படி ஒரு நல்ல வழக்கறிஞர் கிடைத்திருக்கிறார் என்றால் நிறைய தப்புகள் நடக்கும். அதை யோசனை செய்து பேசுங்கள்.

**திரு. ரா. உமாநாத்:** அவர்களும் மனிதர்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயிலில் நானும் இருந்திருக்கிறேன். ஜெயிலில் இருக்கிற கொடுமைகள் சிலவற்றை நீக்க வேண்டுமென்று சொல்வது வேறு. அது வேறு விவகாரம். எல்லோருக்குமே சில சலுகைகளை அளிக்க வேண்டுமென்று பேச ஆரம்பித்தால், வெளியிலே செய்திகள் போகும்போது, குற்றங்கள் அதிகரித்து விடுமோ என்ற பயம் இருக்கிறது.

**திரு. ரா. உமாநாத்:** நான் இப்பொழுது பேசுவது லாங் டெர்ம் பிரிசனர்ஸ் விஷயமாக. அங்கேயுள்ள டிரீட்மெண்ட் எப்படி என்று பார்க்கவேண்டும். அரசியல் கைதிகள் இவர்கள் என்றால், இவர்களும் மனிதர்கள்தான். அந்த முறையிலே இது ஒரு பொதுவான பிரச்னை என்று நான் சொல்கிறேன். உதாரணமாக, உணவு எப்படி இருக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறது. அந்த உத்தரவுப்படி அவர்களுக்கு உணவு கொடுக்கக்கூடாதா? You know that I know my limits.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாங் லைபர்ஸ் (long lifers) என்பவர்கள் கொலை செய்துவிட்டு கூட வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வந்திருக்கிறபோது அவர்களுக்கும் சேர்த்து நாம் வாதாடுகிற மாதிரி கருத்து வந்துவிடக் கூடாது. அந்தக் கருத்து தொனிக்கக் கூடாது என்று தான் சொல்கிறேன்.

**திரு. ரா. உமாநாத்:** லைப் சென்டென்ஸ் பிரிசனர்களுக்குத் தான் இது மெயின் பிரச்னை. சட்டமே என்னவென்றால் 1978 வரைக்கும்....

**மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கொலை செய்யப்பட்டவரின் குடும்பம், அதாவது பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நீதி என்கிறபோது இரண்டு பக்கமும் பார்க்க வேண்டும்.

**திரு. ரா. உமாநாத்:** கொலை செய்தது, குற்றம் செய்தது போன்றவற்றின் மெரிட்சிற்கான அட்ஜெர்ன்மெண்ட் மோஷன் இல்லை இது. லைப் பிரிசினர்ஸ் பொறுத்தவரையில் ட்ரீட்மெண்ட் இன்சைட் தி ஜெயில் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி தான்





இந்தப் பிரச்னை வந்திருக்கிறது. தி ட்ரீட்மெண்ட் இஸ் நாட் ஈவன் ஏஸ் பெர் கவர்ன்மெண்ட் ரூல்ஸ் என்றுதான் சொல்கிறேன். ஆகவே கொலை செய்தது தவறா, இல்லையா என்பதைப் போல வந்து, அந்தக் குடும்பத்தைப் பற்றி டிஸ்கஷன் என்றால் தான் அவர் சொன்னதற்கு வருவேன். ஆகவே தயவு செய்து என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளவேண்டாம்.

இதில் என்ன ஆச்சரியம் என்றால், இப்போது இலங்கை தமிழ் அகதிகளுக்கு பண்ட் கலெக்ட் செய்கிறோம். பல கைதிகள் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பாக்கெட் மணியிலிருந்து நன்கொடை கொடுக்க முன்வந்தால், அந்த நன்கொடையை ஜெயில் அதிகாரிகள் வாங்க மறுக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, அறைக்குள்ளே குறைகளைக் கூறுவதற்கு பெட்டி வைப்பது என்று செய்தார்கள். ஆனால் அதிகாரிகள் அவர்களை மிரட்டி பெட்டிஷன் போட விடுவதில்லை. ஆகவே தமிழ் நாட்டிலிருந்து அந்தப் பிரச்னை இப்போது சுப்ரீம் கோர்ட்டிற்கு போயிருக்கிறது, டிஸ்கஸ் செய்யவேண்டிய மூன்று விஷயங்கள் சீரியசாக இருக்கின்றன. அதிலே சில அறிவிப்புகளை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சொல்லவேண்டும்.

ஒன்று, உண்ணாவிரதம் இருக்கிற அவர்களுக்கு உடனே அரசு என்ன நிவாரணம் அறிவிக்கப் போகிறது? இரண்டாவது, மாநில ரீதியிலே சிறைப் பிரச்னைகளை அடிக்கடி விவாதித்து தீர்வு காண என்ன செய்ய போகிறீர்கள்? என்ன மெஷினரியை உண்டாக்கப் போகிறீர்கள்? மூன்றாவதாக, மாவட்ட சிறைகளில் அரசு உத்தரவுகளை அமல்படுத்த எப்படி உத்தரவாதம் செய்யப் போகிறீர்கள்? இந்த மூன்று இஷ்யூஸ் தான் பிராமினென்டாக இருக்கின்றன, அதில் நான் என்னுடைய யோசனைகளைச் சொல்லி முடித்து விடுகிறேன். ஒன்று, பத்து ஆண்டு பூர்த்தி செய்தவர்களை ரிலீஸ் செய்யப்படும் என்று அறிவித்தால் டென்ஷன் குறையும். அத்துடன் அவர்களுடைய குறைகளை விசாரிக்க அரசு தரப்பும், சட்டமன்ற கட்சிப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரும், அவர்கள் உண்ணாவிரதம் இருந்த ஒவ்வொரு சிறைக்கும் சென்று, உண்ணாவிரதம் இருந்தவர்களை விசாரித்து அவர்களின் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும். இரண்டாவதாக, மாநில ரீதியிலே ஒரு அட்வைசரி கமிட்டி இருக்கவேண்டும். அதிலே சட்டமன்ற கட்சிக்கு ஒரு பிரதிநிதி என்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கவேண்டும். அந்த கமிட்டி மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடினால் பிரச்னைகள் வருகிறபோது, பிரச்னைகள் வெடிப்பதற்கு முன்பே தீர்வு காண முடியும்.

[திரு. ரா. உமாநாத்] [1983 அக்டோபர் 29

அதேமாதிரி மாவட்ட ரீதியிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விசிட்டர்ஸ்ஸாக சிறைகளுக்குச் செல்லும் முறை—முன்பு அந்த முறை இருந்தது. இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் ரெஸ்ட்டோர் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உண்ணாவிரதத்திற்காக யாரையும் பழி வாங்கக் கூடாது; ட்ரான்ஸ்பேர் செய்யவும் கூடாது; 1978–க்கு பின்னாலே தண்டிக்கப்பட்டவர்கள் 14 ஆண்டுகள் இருந்தால் தான் விடுவோம் என்று ஜனதா சர்க்கார் இருந்தபோது ஒரு திருத்தம் கொண்டு வந்தது. அது கூடாது என்று அமைச்சர் அவர்கள் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். நாம் அதை பாஸ் செய்தோம். ஆனால் சென்ட்ரல் கவர்ன்மென்ட் அதற்கு கன்கரன்ஸ் கொடுக்கவில்லை. மீண்டும் அந்தச் சட்டம் கொண்டு வந்து 1978–க்கு பின்னாலே தண்டனை செய்யப்பட்டவர் களுக்கும் 10 ஆண்டுகள் என்று ஒரு திருத்தம் இங்கே கொண்டு வந்து மத்திய சர்க்கார் அதை ஏற்றுக்கொள்வதற்கு வற்புறுத் துகிற நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே முக்கியமான பிரச்னைகளை விவாதிக்க வேண்டியிருப்பதால் மற்ற அலுவல் களை ஒத்திவைத்து இதை விவாதத்திற்கு எடுந்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்சொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறையில் கைதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து, சிறையில் இருக்கிற கைதிகளை மனிதர்களாக, மனிதாபிமானத்தோடு நடத்தவேண்டுமென்கிற கோரிக்கைகளை வைத்து திருச்சி, மதுரை, வேலூர் ஆகிய சிறைகளிலும், இன்னும் இதர சிறைகளிலும் கடந்த 18–ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். சிறைச்சாலை களில் உள்ள கைதிகளுக்கு இழைக்கப்படும் அநீதிகள் எந்த அடிப்படையில் அமைந்துள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும். ஜெயில் மேன்யூவல் என்ற ஜெயில் சட்டமானது வெள்ளையர் காலத்தில் உருவாக்கப்பட்டது. அதிலே எந்தவிதமான மாற்றத்தையும் செய்யாமல் நிலைமையிலே ஏதாவது அபிவிருத்தி செய்வது என்பது நம்முடைய விருப்பமாக இருந்தாலும் நடை முறையில் நிறைவேறாத நிலைமையில்தான் இருக்கிறது.

(முற்பகல் 10-30)

முல்லா குழு, நரசிம்மன் குழு என்று பல்வேறு சீர்திருத்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவைகள் சிபார்சுகளையும் செய்திருக் கிறார்கள். ஆனால் அந்த சிபார்சுகள் இன்றைக்கும் அமல் செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. பத்தாண்டுகள் ஒருவர் சிறையில் இருந்தால் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது.



1983 அக்டோபர் 29] [திரு. இரா. கருப்பையா]

அட்வைசரி போர்டு என்று இருப்பது பெயரளவிலேதான் இருக்கிறது. பஞ்சாயத்து முறை என்று அமல் செய்வதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் அரசு போட்ட உத்தரவை மதுரை சிறையிலே உள்ள கண்காணிப்பு அதிகாரிகள் அமலாக்காத விஷயம் ஒரு ஆண்டு கழித்துதான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பிறகு பஞ்சாயத்து முறையை அமலாக்கினார்கள். பஞ்சாயத்து முறையை அமலாக்கும் விதத்திலே அதில் யாரைப் போடு கிறார்கள் என்று பார்க்க வேண்டும். முறையாகத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும் என்பதற்குப் பதில் அவர்களுக்குத் தேவையானவர்கள் என்று யாரைக் கருதுகிறார்களோ அவர் களைப் பொறுக்கியெடுத்து போட்டு பெயரளவிற்குத்தான் அந்தக் குழுக்கள் இன்றைக்கு இருக்கின்றன. ஆகவே, அது முறையாக அமைக்கப்பட வேண்டுமென்று மதுரை சிறைக் கைதிகள் கேட்டார்கள் என்பதற்காக சமீபத்தில் 15 பேர்கள் அந்தச் சிறையிலிருந்து வேலூர் சிறைக்கும், சேலம் சிறைக்கும், இன்னும் மற்றச் சிறைகளுக்கும் சென்ற 24-9-1983–ஆம் நாளன்று மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

அந்தக் குழுக்களைச் சரியான முறையில் அமைக்க வேண்டும் முறையாக அமல் நடத்த வேண்டுமென்று கோரியதற்காகச் சிறைக் கைதிகளை மாற்றியிருக்கிறார்கள். அவர்கள் வசிக்கின்ற மாவட்டத்திலேயே இருந்தால் உற்றார் உறவினர்கள் அடிக்கடி வந்து பார்த்து அந்தக் கைதிகளை மனம் திருந்தச் செய்வதற் கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உதவியாக இருக்கும். அந்தந்த கைதிகளை அவரவர்களின் மாவட்டத்தில் உள்ள சிறை யிலேயே வைப்பது என்ற கொள்கையை ஏற்று நிறைவேற்று வதற்குப் பதிலாக திருச்சி சிறையிலே உள்ளவர்களை வேலூர் சிறையிலும், வேலூர் சிறையிலே உள்ளவர்களை மதுரை சிறை யிலும் அடைப்பதன் நோக்கம் என்ன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிறைகளில் சுகாதார வசதிகளைப் பொறுத்தவரையில், நவீன கழிப்பிடங்களை அமைக்க வேண்டும், சுத்தமாக அமைக்க வேண்டும், இதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்துகிறோம். இவைகளெல் லாம் சிறையிலே உண்ணாவிரதம் இருக்கின்ற கைதிகளின் அடிப்படைக் கோரிக்கைகளாக அமைந்திருக்கின்றன.

1978–ஆம் ஆண்டுக்கு முன்பு, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுப்பதற்கு முன்பு, 14 ஆண்டுகள் என்ற அந்தச் சட்டத்தை அமல் செய்யவேண்டிய அவசியமில்லை என்ற நிலை இருக்கும் நேரத்தில் அம்மாதிரி கைதிகளைக் கூட இன்றைக்கு விடுதலை செய்ய மறுக்கிறார்கள் என்றால் அதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

திருச்சி, மதுரை, வேலூர் போன்ற சிறைச்சாலைகளிலே பல பிரச்னைகள் வருகின்றன. இப்படிப்பட்ட பிரச்னைகளில் யோசனை கூறுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களைக்கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்து, இதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். ஆனால் இம்மாதிரி குழுவை அமைப்பதற்கு இன்றைக்கும் அரசு தயாராக இல்லை, வேறு பிரச்னைகளில் நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகள் கொண்ட ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன, வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. அங்கே அவர்கள் ஆலோசனைகளைக் கூறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. சிறைச்சாலை என்பதும் நம்முடைய நாட்டில் உள்ள இடம்தான். அங்கேயும் மனிதர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அம்மாதிரி உரிமைகளை வழங்கி ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டும். இல்லையென்றால் விசிட்டர்ஸ் என்ற முறையில் அவர்கள் சிறைச்சாலைகளைப் பார்வையிடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அந்த வாய்ப்பைக்கூட ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் இன்றைக்கும் மறுக்கிறது. இம்மாதிரி காரணங்களால் பிரச்னைகள் தொடர்ந்து முற்றிக்கொண்டே இருக்கின்றன.

இம்மாதிரி குறைபாடுகள் மட்டுமல்ல; சமீபத்தில் திருச்சி சிறைச்சாலையில் உள்ள கைதிகள் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்காக நிவாரண நிதி அனுப்ப வேண்டுமென்று கோருகிறார்கள். அதற்குக் கூட சிறை அதிகாரிகள் மறுக்கிறார்கள். தொழிலாளர்கள் அதிகமாக உழைத்தோ அல்லது ஓய்வு நாளில் உழைத்தோ அதன் மூலம் நிவாரண நிதிக்குக் கொடுக்கிறார்கள்.

ஆனால் சிறையிலே இருக்கின்ற கைதிகள் தங்களுடைய ஒரு நாள் உணவைத் தியாகம் செய்து நாங்கள் பட்டினி கிடந்து அதன்மூலம் கிடைக்கக்கூடிய தொகையை நிவாரண நிதிக்குக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அதைக் கூட அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஆகவே இந்தமாதிரியான நிலைமைகள் தமிழகத்தின் சிறைகளில் இப்போது முற்றி இருக்கின்றது. அதன் காரணமாக இன்றைய தினம் அனைத்து சிறைச்சாலைகளிலும் உண்ணாவிரதம் போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. மதுரை சிறையிலே 59 பேர் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு மிகவும் மோசமான நிலைமை அடைந்திருக்கின்றது. திருச்சி சிறையிலே 18 ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். வேலூர் சிறையிலே 24–ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை ஆபத்தாக இருக்கின்றது. இப்போது சிறைச்சாலையிலே கைதிகளுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளை



எல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்வதற்கு நேரம் இல்லை. பல்வேறு கொடுமைகள் தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இந்த மாதிரியான நிலைமைகளை மாற்றுவதற்குரிய வழிமுறைகள் பற்றி ஆலோசிப்பதற்கு இந்தப் பேரவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இந்தப் பிரச்சினை குறித்து முழுமையாக விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று அவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே உள்ள திருச்சி, மதுரை, வேலூர், சேலம் போன்ற மத்திய சிறைச்சாலைகளில் உள்ள ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருவதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பல்வேறு கட்சிகளின் சார்பிலே கொண்டு வந்திருக்கிறோம்.

6 மாதங்களுக்கு முன்பாக சட்டப் பேரவையிலே இதே மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்து நாங்கள் எல்லாம் பேசினோம். அப்போது நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் விரைவாக இந்தக் குறைகளைப் போக்குவோம் என்ற உறுதியினை எங்களுக்குக் கொடுத்தார்கள். உள்ளபடியே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன், 6 மாதங்களுக்கு முன்பாகப் பேசிய முக்கியமான பிரச்சினை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டாலும் கூட அதிகாரிகளால் அது சரியாக நிறைவேற்றப்படாத நிலைமை இருக்கின்றது. எனவே இது தமிழகத்திலே நிர்வாகம் எப்படி முடங்கிக் கிடக்கின்றது, எப்படி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு முன் உதாரணமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்கள் கூட ஒன்றைச் சொன்னீர்கள். அதை நாங்கள் மதிக்கிறோம். கொலை செய்தவர்கள் கூட ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணருகிறோம். ஆனால் பொதுவாகக் கைதிகள் என்று வந்து விட்டதற்குப் பிறகு அவர்களுக்கு அரசாங்கம் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு என்னென்ன சௌகரியங்களைச் செய்து தரவேண்டுமோ அவற்றை ஜெயிலிலே பணியாற்றுகின்ற உயர் அதிகாரிகள் சரியான முறையிலே செய்து கொடுக்காத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால்தான் இன்றையதினம் இதுபோன்ற நடவடிக்கைகள் ஏற்பட்டிருக்கின்றன. உண்ணாவிரதம் போன்ற நிலைமைகள் வந்திருக்கின்றன. நான் கூட சிறைக்குப் பல முறை சென்றிருக்கிறேன். சிறையிலே உண்ணாவிரதம் என்று சொன்னாலே அங்கேயுள்ள அதிகாரிகள் மிகவும் வற்புறுத்தி எப்படியாவது கைதிகளை உண்ண வைப்பதற்கு முயற்சி செய்வார்கள். அந்த நிலைமைகளை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இன்றையதினம் பல நாட்களாகக் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து உயிர் போகின்ற நிலைமை ஏற்பட்டு அவர்கள் மருத்துவமனைக்கு எடுக்கக்

செல்லப்படக்கூடிய பரிதாபமான நிலைமை ஏற்பட்டதற்கு பிறகும் அங்கே இருக்கின்ற அதிகாரிகளும், அரசாங்கமும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது நியாயமா என்பதை நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் அரசால் நிறைவேற்ற முடியாமல் இருக்கலாம். ஆனால் சிறைச்சாலைகளிலே உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டியவற்றில் ஒன்றிரண்டை நிவர்த்தி செய்தாலாவது அவர்கள் மன நிறைவு பெறுவார்கள். அப்படிச் செய்தால் அவர்களுக்கு அரசாங்கத்தின் மீதும், சட்டப்பேரவையின் மீதும் ஒரு நம்பிக்கை ஏற்படும். சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் நாங்கள் அறிந்த வரையில் உணவு தானியங்களான அரிசி, பருப்பு, மற்றும் மற்ற சாமான்கள் எல்லாம் கான்ட்ராக்ட் முறையிலேதான் வாங்கப்பட்டு வந்தன. இதிலே குத்தகைக்கு விடுகிறார்கள். வாடிக்கையாக யார் அதை எடுக்கிறார்களோ அவர்களுக்குத்தான் அதைக் கொடுப்பார்கள். அதிலே பல விதமான தில்லுமுல்லுகள் நடப்பது வாடிக்கை அதிலே இப்போது ஏதேனும் மாற்றம் செய்து இருக்கிறீர்களா என்பது எனக்குத் தெரியாது. மாற்றம் செய்து இருந்தால் அமைச்சர் அவர்கள் அறிவிக்கலாம். இன்றையதினம் வரையில் மாற்றம் எதுவும் செய்யப்பெறவில்லை என்று சொன்னால், அந்தப் பொருள்களை கூட்டுறவு விற்பனை சங்கங்களிடமிருந்து வாங்கவேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்யலாம்.

(முற்பகல் 10-40)

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 15 நாளைக்கு ஒரு முறை அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு முறை 'கமிட்டி' கூட்டம் நடைபெற வேண்டும் என்று இருக்கிறது. அந்தக் கமிட்டியில் ஆயுள்கைதிகளின் நன்னடத்தையை ஆராய்ந்து, கீழ் மட்டத்திலே இருந்து கிராம அதிகாரிகள், சப்-இன்ஸ்பெக்டர், தாசில்தார் ஆகியோர் இவர் வெளியே வந்தால் வேறு ஒரு குற்றத்தைச் செய்யமாட்டார் என்று அனுப்பிய பரிந்துரைகளை வைத்து ஆராய்ந்து, அந்தக் குழு அவரை விடுதலை செய்யலாம் என்று அரசுக்கு பரிந்துரைத்தால், உடனடியாக அவர்களை ரிலீஸ் செய்யும் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல 1978-க்குப் பிறகு அப்படிப்பட்ட நிலை இல்லை. அது மத்திய அரசாங்கத்தில் காலதாமதம் ஆனாலும், உடனடியாக மத்திய அரசாங்கத்திலிருந்து அந்தச் சட்டத்திற்கு அனுமதி பெறவேண்டும். இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டவேண்டும் என்று சட்டம் இருந்தது. இருப்பினும், என்னுடைய வடாற்காடு மாவட்டத்தில் 7 மாத



காலமாகியும் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கூட்டத்தை கூட்டாமலேயே இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இதை அமைச்சரிடத்தில், அரசாங்கத்திடத்தில் சொல்லியும் அவர் கூட்டாமலேயே இருந்தார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்தையே ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் 7 மாத காலம் ஆகியும் கூட்டாமல் இருந்தார் என்று சொன்னால், சிறையில் இருக்கும் கைதிகளுக்காக மாதத்திற்கு ஒரு முறை 15 நாளைக்கு ஒரு முறை கூட்டப்படவேண்டிய கூட்டம் கூட்டப்படுகிறதா என்பதைக் கேட்பதற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கைதிகளுக்காக எங்களைப்போன்று எதிர்க்கட்சியில் இருக்கின்ற ஓரிரு உறுப்பினர்கள், அல்லது ஓரிரு கட்சிகள் இங்கே எடுத்துக் கூறலாம். ஆகவே, இப்படிப்பட்ட கூட்டங்கள் மாதத்திற்கு ஒரு முறை நடக்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டிய தார்மீகக் கடமை, நியாயம் இந்த அரசுக்கு உண்டு. அப்படி அந்தக் குழு கூட்டப்படுமானால், அந்தக் குழு சிபார்சு செய்யும் பரிந்துரைகளின் அடிப்படையில் நியாயமாக அரசாங்கம் அவர்களை விடுதலை செய்யவேண்டும். பல பேர் பல சூழ்நிலைகளில் கைதிகளாக தண்டனை பற்று இருக்கலாம். ஆனால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறியதைப்போல, எங்களைப்போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள், அல்லது பெரிய அலுவலர்கள், பெரிய மனிதர்கள் ஆகியோரைப் பிடித்துக்கொண்டு வந்தால்தான் சில பேருக்கு விடுதலை கிடைக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. மற்றவர்கள் 14 ஆண்டுகள், 16 ஆண்டுகள் சிறையில் வாடுகின்ற சூழ்நிலையும், அதன் காரணமாக அவர்களுக்கு விரக்தி எற்படுவதும் போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தக் குழுவில் இருப்பவர்கள் அல்லது சிறையில் இருப்பவர்கள் நியாயமான தன்மையின் அடிப்படையில் சிலரை விடுதலை செய்யலாம் என்று பரிந்துரைத்தால் அவர்களை நிச்சயமாக விடுதலை செய்ய அரசு ஆணையிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்படும் உணவு வகைகள் சுத்தமாக இருக்கவேண்டும், கலப்படம் இல்லாமல் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உணவு பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: அவைகள் எல்லாப் நியாயமான முறையில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1983 அக்டோபர் 29

எம். எல். ஏ., எம். பி.-க்கள் போன்றவர்கள் ஏற்கனவே இருந்த விதிமுறைகளில் அடிப்படையில் அடிக்கடி சென்று வர வாய்ப்பு இருந்தது. எம்.எல்.ஏ.க்கள் சிறைக்கு சென்று பார்வையிட்டு வரலாம் என்று இருப்பதாலேயே எல்லா சட்ட மன்ற உறுப்பினர்களும் தங்கள் வேலைகளையெல்லாம் விட்டு விட்டு சென்று பார்வையிடுவார்கள் என்று சொல்ல முடியாது. இப்படி அவர்கள் சென்று பார்வையிடலாம் என்று இருந்தால், அப்படி அவர்கள் செல்கின்ற நேரத்தில், அந்தக் கைதிகளின் குறைகளை அறியவும், அவர்களுக்குத் தேவைப்படுகிற பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்ய முடியும். அரசாங்கத்திற்கு அங்குள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்ல முடியும்.

இப்போது சிறையில் இருக்கும் கைதிகள் எடுத்து வைத்து இருக்கும் கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகள், அவற்றை அரசு ஏற்க வேண்டும் என்று சொல்லி, இந்த அவை இந்தப் பிரச்னை குறித்த இன்னும் விரிவாக விவாதிக்க வேண்டும் என்பதற்காக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டு, இதில் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சிறையிலே, திருச்சிச் சிறையிலே மற்றும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு சிறைகளிலே கைதிகள் உண்ணாவிரதம் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி விரிவாகப் பேசினார்கள். அதனால் நான் சில விஷயங்களை மட்டும் உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சிறையிலே இருக்கக்கூடிய கைதிகள், குறிப்பாக ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் இந்தப் போராட்டத்திலே ஈடுபட வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்பதை நம்முடைய அமைச்சரவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு சிறைகளிலே செயல்படுத்துகின்ற சட்டங்கள் எல்லாம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வகுக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் அன்றைக்கு சுதந்திர போராட்டத்திலே ஈடுபடுகின்றவர்களை ஒடுக்குவதற்காக அவர்கள் வகுத்த சட்டங்கள் இன்றைக்கும் தொடர்ந்து இருப்பது தற்போதுள்ள சூழ்நிலைக்கு கொஞ்சமும் பொருத்தமாக இருக்க முடியாது. ஆகவே, ஒரு புதிய சிறைச்சாலைகள் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மத்திய அரசை இந்த மாநில அரசு வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இந்த மாநில அரசு ஜெயில் மானுவல் என்பது இன்றைய காலத்திற்கு ஒவ்வாதது. அது ஆங்கிலேயர் காலத்தில் வகுக்கப்பட்டது. உச்சநீதிமன்றம் கூட அதுபற்றி சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆகவே, இந்தக் காலத்திற்குப்



1983 அக்டோபர் 29] [திரு. ப. நெடுமாறன்]

பொருத்தமான புதிய விதி தொகுப்பை உருவாக்க வேண்டும். முல்லா குழு, நரசிம்மன் குழு போன்ற பல்வேறு சிறை சீர்திருத்தக் குழுக்கள் அளித்த அறிக்கைகள், அதைப்போன்று இஸ்மாயில் நீதிவிசாரணைக் கமிஷன் அளித்த பரிந்துரைகள் அடிப்படையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அமுல்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சிறையிலே இருக்கக்கூடிய ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள் பல்வேறு மோசமான சட்டங்கள் விளைவாக அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற அநீதிகளை எதிர்த்துப் போராடுகிறார்களே தவிர அரசியல் ரீதியாக இந்த அரசை எதிர்த்துப் போராடவில்லை.

சிறையிலே 'ஹாபிச்சுவல் அஃபென்டர்ஸ்' என்று சொல்லக் கூடிய பயங்கரமான, அபாயகரமான கைதிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது அரசாங்கம் கடுமையாக இருப்பதில் தவறு இருக்கமுடியாது. அதேநேரத்தில் உணர்ச்சி வசத்தால், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் சில குற்றங்களைச் செய்து, உரிய தண்டனை பெற்று சிறையில் இருக்கக்கூடிய பல கைதிகளை என் போன்றவர்கள் சிறையில் இருக்கும்போது சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்போது அவர்களைக் கேட்கும்போது தாங்கள் ஏதோ ஒரு சூழ்நிலையில் உணர்ச்சிவசப்பட்டு செய்யப் பட்ட தவறு காரணமாக தண்டனை பெற்று, குடும்பத்தை இழந்து, தன்னுடைய வாழ்வை இழந்து, தன்னுடைய வாழ்வை சீரழித்துக்கொண்டிருக்கிறோம் என்று ஏங்கிக் கொண்டிருக்கிற நிலைமைகள் தெரியவந்தன. இப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு அதிகமான பேர்கள் சிறையிலே இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைச் சீர்திருத்தம் செய்கின்ற முறையிலே சிறைச்சாலைகள் இருக்க வேண்டும். சிறையில் இருக்கின்ற அதிகாரிகள் இந்தக் குற்றவாளிகளை சீர்திருத்தி அவர்களை நல்லமுறையில் மனிதாபிமானத்தோடு விசாரித்து, அனுப்ப முயற்சியில் ஈடுபட வேண்டுமே தவிர அடக்குமுறை அல்லது கொடுமையான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் நாம் எதிர்ப்பார்க்கின்ற விளைவுகள் நிச்சயமாக வராது. இதை மனதிலே வைத்துக்கொண்டு இந்தப் பிரச்சனையை அரசாங்கம் அணுக வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.

இன்றைக்கு இந்தப் பிரச்சனை அதிக அளவிலே இருக்கிறது. மதுரை சிறையில் மட்டும் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய கைதிகளில் 66 பேர்களுடைய நிலைமை மோசமாகப் போய், அவர்கள் அங்கிருந்து அரசு தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். அதைப்போன்ற நிலைமை திருச்சியிலும் இருக்கிறது. அதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் மதுரை, திருச்சி போன்ற சிறைகளிலே இதுபற்றி விசாரணை நடத்தி, அவர்களை விசாரித்து, அவர்களுடைய குறைகளைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் சிறையில் இருக்கக்கூடிய கைதிகள் எல்லா வகையிலும் இந்த சமுதாயத்தின்

அங்கம்தான். இந்த சமுதாயத்தில் இருக்கிற உணர்வுகள் அவர்களுக்கும் இருக்கிறது. சமுதாயத்தில் இருக்கிற தேசிய உணர்வுகள் அவர்களுக்கும் இருக்கிறது என்பதை பல கட்டங்களில் பார்த்திருக்கிறோம்.

அண்மையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை வந்தபோது மதுரை, திருச்சி சிறைகளிலே இருக்கக்கூடிய கைதிகள் எல்லாம் இரத்தத்தில் கையெழுத்திட்டு எனக்கு கடிதம் எழுதினார்கள். எங்களை இலங்கைக்கு அனுப்பினால் அங்கே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு உதவி செய்கிறோம் என்று எழுதினார்கள். சிறையிலே இருப்பவர்களுக்கும் அந்தகைய உணர்வு இருக்கிறது என்பது இதன் மூலம் தெரிகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மனதிலே வைத்துக் கொண்டு அரசாங்கம் இந்தப் பிரச்சனையை அணுக வேண்டும்.

(முற்பகல் 10–50)

இன்னொன்றையும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லா சிறைச்சாலைகளுக்கும் உள்ளே சென்று பார்வையிடுவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கவேண்டும். ஆலோசனைக் குழுக்களை அமைப்பதைவிட அது உதவக்கூடியதாக இருக்கும். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைகளுக்குள்ளே சென்று கைதிகளுடைய குறைகளைக் கண்டறிந்து வரும் வாய்ப்பிருந்தால்தான் அதிகாரிகள் மத்தியிலே ஒரு அச்சம் இருக்கும். அந்தப் பிரச்சினைகளை சட்டமன்றத்திலே கொண்டுவந்து பரிகாரம் காண்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உரிமையை அரசாங்கம் வழங்கவேண்டும்.

இறுதியாக அமைச்சர் அவர்களே நேரடியாக மதுரை, திருச்சி சிறைச்சாலைகளுக்குச் சென்று இந்தப் போராட்டம் எதனாலே வெடித்தது என்று விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கைகளை உடனே எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி, அதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 18–10–1983 முதல் திருச்சியிலே சிறைக்கைதிகள் உண்ணாவிரதம் இருப்பதைத் தொடர்ந்து இன்றைக்கு அது வேலூர், மதுரை, பாளையங்கோட்டை என்று பல்வேறு சிறைச்சாலைகளுக்குப் பரவி இருக்கிறது. இன்றைக்குப் 11 நாட்கள் ஆகிவிட்டன, அவர்களுடைய உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கான எந்த முயற்சியையும் இதுவரையில் எடுக்கவில்லை. சிறைச்சாலையில் இருப்பவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று சொல்லிவிட முடியாது. சில நிரபராதிகள் கூட சந்தர்ப்ப சாட்சிகளின் காரணமாக குற்றவாளிகளாகக் கருதப்





படலாம். உண்மையிலேயே குற்றம் புரிந்தவர்கள் கூட மனம் திருத்தி நல்ல மனிதர்களாக திரும்பி வருகின்ற அளவுக்கு மாற வேண்டும். ஆனால் தாய்மைக் குணத்தோடு அங்கே அதிகாரிகள் பணியாற்றுகிறார்களா என்றால் அப்படிச் செய்யவில்லை. 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆகியும் விடுதலை செய்யவேண்டும் என்று சொல்கிற நேரத்தில், — நான் மாண்புமிகு அமைச்சரிடம் சென்ற ஆண்டே சொன்னேன், சிவனெழுந்த பெருமாள் என்ற ஆயுள் கைதி பாளையங்கோட்டை சிறையிலே கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக இருக்கிறார். அதேபோன்று பல்வேறு சிறைகளிலே 10 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை அடைந்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். சிலர் விடுதலையாவதும், சிலர் நீண்டகாலமாக சிறையிலே இருப்பதுதான் இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்குக் காரணம்.

அதைவிட இன்றைக்கு நாம் மிகவும் வெட்கப்படக் கூடிய காரணம் என்னவென்றால், மனித உரிமைகள் பாதுகாப்புக் குழு இன்றைக்கு இந்தியாவிலே உள்ள சிறைகளில் கொடுமைகள் நடத்தப்படுகின்ற மாநிலங்களிலே தமிழ்நாடும் ஒன்று என்று குறிப்பிட்டு இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. அதேபோன்று இன்றைக்கு விசாரணைக் கைதிகள் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் வைக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றி இன்றைக்கு சிறைச்சாலைகளிலே உண்ணாவிரதம் இருக்கின்ற அந்தக் கைதிகளுடைய உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காகவும், பல்வேறு விஷயங்களைப் பற்றி சிந்திக்கவேண்டும் என்பதற்காகவும், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே இன்றைக்கு ஆயுள் கைதிகளாக இருக்கின்றவர்களுக்கு நாம் இங்கே பரிந்து பேசுகிறோம் என்று சொன்னால் அவர்கள் சிறைத் தண்டனை பெறுவதற்காக செய்த காரியங்களைச் சரி என்று வாதாடுவதற்கே அல்லது அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்பதற்கோ நாம் இங்கே பேசவில்லை. சிறையிலே அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் செய்த குற்றத்தினாலே பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எத்தகைய குற்றங்களுக்கு ஆளாகி வந்திருக்கிறார்கள் என்று எண்ணித்தான் இன்றைக்கு இந்தத் தீர்மானத்திலே நாம் பேசுகின்றோம்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும் ஏனைய உறுப்பினர்களும் சொன்னதைப் போல, இன்றைக்கு திருச்சியிலே ஆரம்பித்த இந்த உண்ணாவிரதம் தமிழகத்திலே இருக்கின்ற 4, 5 சிறைசாலைகளுக்கு பரவிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் உண்ணாவிரதம் என்று சொன்னால் ஏதோ ஒரு சிறையிலே

ஏதோ ஒரு காரியத்திற்கு என்று சில காலத்திலே இருக்கும். ஆனால் இன்றைக்கு 18–ந் தேதியிலே இருந்து ஆரம்பித்து தமிழகத்திலே ஏறத்தாழ 5 சிறைச்சாலைகளில் இன்றைக்கும் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஜெய் ஹால் அவர்கள் சொன்னதைப் போல ''உலகில் ஒரு மனிதனை சிறைப்படுத்துவது எளிதான செயல். ஆனால் அவனைத் திருப்திகரமான முறையிலே விடுதலை செய்வது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.'' ஜெனிவாவிலே கூடிய ஐக்கிய நாடுகள் காங்கிரஸ் கூட, ''கைதிகளை சிறையிலே அடைத்து வைத்த பிரச்னை சில மிக தீய விளைவுகளை ஏற்படுத்தியதாகவும் அந்தக் கைதிகள் விடுதலையானதற்குப் பிறகு சட்டத்தை மதித்து நடக்கும் உணர்ச்சியை மீண்டும் கடைப்பிடிக்க முடியாதபடி அவர்களை மோசமாக பாதித்ததாகவும்'' குறிப்பிட்டிருக்கிறது என்று சொன்னால், நான் இன்றைக்கு சிறையிலே இருக்கின்ற கைதிகளையும் அவர்களுடைய நிலைமையையும் நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்கு திருச்சியிலே இருக்கின்ற கைதிகள் ஏறத்தாழ 50 கோரிக்கைகளை முன்னே வைத்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக அவர்கள் சிறையிலே சிறைக் கதவுகளுக்குள்ளே அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய குறைகளை நாம் கேட்க முடியாத காரணத்தால்தான் நாம் அவர்களுக்கா இப்போது கூறவேண்டியிருக்கிறது. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னதைப் போல 1978–ஆம் ஆண்டுக்கு முன்னாலே சிறைத் தண்டனை பெற்றவர்கள், 10 ஆண்டுகள் கழிந்ததற்குப் பின்னாலே விடுதலை செய்ய வேண்டும என்ற நிலைமாறி இன்றைக்கு நிறையப்பேர்கள் இன்னும், 10 ஆண்டுகள் 12, ஆண்டுகள், ஏன் 16 ஆண்டுகள் என்று கழிந்த பின்னலேயும் கூட சிறையிலே அவர்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, சிறை இன்றைக்கு ஒரு தனி ராஜ்யமாக இருக்கிறது. வேறு துறைகளிலே ஏதாவது தவறு நடக்குமானால் மக்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு, அல்லது மக்கள் கவனிப்பதற்கு அங்கு எளிதாக இருக்கிறது. ஆனால் சிறை ஒரு தனி கோட்டைக்குள்ளே இருக்கின்ற காரணத்தால் அங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகள நமக்குத் தெரிவதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற முறையிலே தான் இன்றைக்கு அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உணவிலே கூட, சரியான அளவிலே உணவு வழங்கப்படாமல் இருப்பதாகவும், பரோல் வசதிகள் சரியாக கொடுக்கப்படாமலும், செய்தித்தாள்கள் அளிப்பதில் கூட கட்டுப்பாடுகள் இருப்பதாகவும் ஆகிய இந்த மாதிரியான சூழ்நிலைகள் இருக்கின்றன. புத்தகங்கள் அவர்களுக்கு சரியாக கொடுப்பதற்கு முடியாத நிலை இருக்கின்ற காரணத்தால்' எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஒரு மத்திய ஆலோசனைக் குழுவை



அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மத்திய ஆலோசனைக் குழுவைப் போலவே மாவட்டந்தோறும் இருக்கிற சிறைச்சாலைகளுக்காக ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும். முன்பெல்லாம் சிறையிலே இருக்கின்ற உணவு நிலைமையையும் மற்ற நிலைமைகளையும் பார்க்க வேண்டும் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எளிதாக அனுமதி கிடைத்தது ஆனால் இப்போது எல்லாம் சிறைச்சாலைக்குப் போவோமானால் என்ன காரணத்தாலோ அங்கே இருக்கின்ற பெரிய அதிகாரிகளால் நாம் தடுத்து நிறுத்தப் படுகிறோமே தவிர உள்ளே சென்று நிலைமையை பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிற எங்களுக்கு இருக்கிறது. எனவே அதை அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து மக்களுடைய பிரதிநிதிகள் அங்கே செலல், அங்குள்ள நிலலயை கவனிக்க அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நரசிம்மன் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அரசாங்கம் முன்பு நியமனம் செய்தது. பல்வேறு திருத்தங்களை பல்வேறு ஆலோசனைகளை குழு கூறியிருக்கிறது. 3 பாகங்களாக அந்த புத்தகம் வந்திருக்கிறது. அவைகளை அரசாங்கம் விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்றைக்கு சிறையிலே இருக்கிற பெண் கைதிகள் எல்லாம் ஆண்கள் கைதிகள் இருக்கின்ற கொட்டகைக்கு ஒட்டித் தான் அவர்கள் அடைக்கப் படுகிறார்கள். அப்படி எல்லாம் இல்லாமல் அவர்களுக்காக தனியாக மகளிர் நிலையங்களை பெண்களுக்கான சிறைகளை அமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்றும், இன்றைக்கு சிறையிலே வாடுகின்ற கைதிகள் உண்ணாவிரதப் பிரச்னையில் உடனடியாக தலையிட்டு நிறுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அதைப் போலவே பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நாம் இங்கே பேச வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-10–1983 மத்தியம் முதல் திருச்சி மத்திய சிறையில் சில சிறைவாசிகள் 50 அம்ச கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இந்த 50 அம்ச கோரிக்கைகளைப் பற்றி தீக்கதிர் என்ற ஏட்டில் வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் உள்ள சிறைகளில் நிலவி வருவதாக சொல்லப் படும் குறைகளைப் போக்கவும், ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தவும் 50 யோசனைகளைத் தெரிவித்திருப்பதாகக் கூறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரும், சட்டமன்ற மேலவையின் உறுப்பினருமான திரு. நல்லசிவன் அவர்கள் அரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். மேற்படி

50 கோரிக்கைகளும் யோசனைகள் என்றும், அவைகள் ஆராய்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்கள். இந்தக் கோரிக்கைகளில் பல ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்றன. சில கோரிக்கைகள் பரிசீலனையில் உள்ளன. சிலகோரிக்கைகள் ஏற்கத்தக்கவையாக இல்லை.

வேலூர் மத்திய சிறையில் இருந்து மதுரை மத்திய சிறையில் இருந்து ஒழுங்குமுறை நடவடிக்கைகளுக்காக மாற்றலாகி வந்துள்ள 6 தண்டனை சிறைவாசிகள் 21-10-83 முதல் கீழ்க் கண்ட 5 கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். பஞ்சாயத்து முறை அமுல் படுத்தப்பட வேண்டும். அட்வைசரி போர்டு குறித்த காலத்திலே கூட வேண்டும். உரிமைகள் கோருவதற்கு பழிவாங்கப்படுவது நிறுத்த வேண்டும். சிறை மாற்றம் செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும். கைதிகள் கடிதம் எழுதினால் உடனடியாக சம்பந்தப் பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(முற்பகல் 11–00)

பஞ்சாயத்துமுறை எல்லாச் சிறைகளிலும் தற்போது அமுல் படுத்தப்பட்டு இயங்கி வருகிறது. அட்வைசரி போர்டு குறிப்பிட்ட காலத்திலே கூட வேண்டும் என்ற உத்தரவை அரசாங்கம் இட்டு அதை நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு உள்ளன. கைதிகள் பழிவாங்கப்படுவது இல்லை. சிறைக் குற்றங்கள் புரியும் சிறைவாசிகள், மற்றும் திருத்த முடியாத குற்றங்கள் புரியும் கைதிகள் மட்டுமே சிறைமாற்றம் செய்யப்படுகிறார்கள். கைதிகள் எழுதும் கடிதங்கள் உரிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்பட்டு வருகிறது. அது மட்டும் அல்லாமல், நேற்று மாலை 7½ மணியளவில் திருச்சி சிறையிலே உண்ணாவிரதம் இருந்த 16 கைதிகளை மருத்துவமனைக்கு-அவர்கள் கிட்டத்தட்ட 10 தினங்களாக உண்ணாவிரதம் இருக்கிற காரணத்தால் அழைத்துச் செல்ல முயன்ற போது, அவர்கள் கூறியது, நாங்கள் நல்ல உடல்நலத்தோடுதான் இருக்கிறோம், மருத்துவ மனைக்கு நாங்கள் செல்ல விரும்பவில்லை என்று கூறி மீண்டும் சிறைசாலைக்கே செல்ல வேண்டும் என்று சொல்லி, சிறை சாலைக்கே திருப்பியனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது, குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசுகிற போது, இந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்படவில்லை என்றால் துப்பாக்கிச் சூடு கூட ஏற்படக் கூடிய அளவுக்கு சென்று விடும் என்றார். அதற்காக அச்சப்படுகிறேன் என்றும் கூறினார். அந்த நிலை கட்டாயமாக ஏற்படாது என்பதை நான் அரசின் சார்பில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய 50 கோரிக்கைகளில்



பல கோரிக்கைகள் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்படு கின்றன. அதை ஒவ்வொன்றாக சொல்வதற்கு முன்னால், சில கைதிகள் முன் கூட்டியே, 10 ஆண்டுகளுக்கு முன்னாலோ, அல்லது 14 ஆண்டுகளுக்கு முன்னாலோ விடுதலை செய்யப் பட்டும் சில கைதிகள் அவ்வாறு விடுதலை செய்யாமல் இருப்பதும் பாரபட்சமான உணர்வோடு இருக்கிறது என்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. ஏனெனில். அட்வைசரி போர்டு அந்தந்த அனுகு முறைகளை மேற்கொண்டு, கைதிகளை விடுதலை செய்வதிலே வரையறைகளை வைத்துக்கொண்டு அதற்கு உட்பட்டுதான் செய்து வருகிறது, உதாரணமாக Provocation murder என்று சொல்லப்படுகிற கொலையைப் பொறுத்தவரைக்கும், If a murder is committed on provocation or even if a murder is committed on subsisting provocation. என்று அது போன்ற வழிகளில் குற்றவாளிகளாக ஆக்கப்பட்டு, சிறைகளிலே இருப்பவர்களைப் பொறுத்தவரைக்கும், 14 ஆண்டுகளுக்கு முன்னாலே விடுதலை செய்வதற்கு, அட்வைசரி போர்டு. மாவட்ட ஆட்சித் தலைவர், சிறை ஐ. ஜி. ஆகியவர்கள் பரிந்துரை செய்ய வேண்டும். அதற்கு மாறாக If a murder is committed for gain, if a murder is committed cruelly with deep rooted, pre-planned or even cold blooded murder, என்கிற அது போன்ற கொலைக் குற்றவாளிகள் இருக்கிற போதுதான் 14 ஆண்டுகள் ஆனாலும் கூட, சில நேரங்களில் அவர்களை விடுதலை செய்வதில்லை. இன்னும் கூட இதில் ஒரு பிரச்னை இருக்கிறது. 20 ஆண்டுகள் வரைக்கும் சிறையிலே இருக்கலாம் என்று சட்ட ரீதியாகவே இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்குமே தெரியும். ஆனால் 14 ஆண்டுகள் ஆகிறபோதுகூட சில கைதிகளை விடுதலை செய்து அவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் செல்கிற போது, அவர்களுடைய உயிருக்கே ஆபத்தாகக்கூடிய அளவுக்கு, சூழ்நிலைகளோ அவர்கள் ஏற்கனவே செய்திருக்கிற கொலை— அதாவது பல பேர்களை கொலை செய்திருந்தால் அல்லது கொடூரமான முறையில் கொலை செய்திருந்தால், அவர்கள் வெளியே செல்வது அவர்களுக்கே ஆபத்தை விளைவிக்கும் என்ற சூழ்நிலையோ இருந்தால் அதை அட்வைசரி போர்டு பரிந்துரை செய்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டாம் என்று கூறுகிறது.

அது மட்டும் அல்லாமல் நக்ஸலைட்டு பிரிசினர்களைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு, நக்ஸலைட்டுகளை பரோலில் அனுப்புவதற்கு அனுமதி கொடுத்து வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். இதில் அவர்களுடைய பிரச்னைக் குறித்து பலர் உயர்நீதி மன்றத்திலே ரிட் மனுவாக கொண்டு போயிருக்கிற காரணத்தால் அது குறித்து அதிகமாக நான் பேச விரும்பவில்லை.

1978-லே உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஒட்டி, 78-க்கு முன்னாலே சிறைக்கு சென்றவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். அவர்கள் 10 ஆண்டுகளை அங்கே முடித்திருப்பார்களேயானால் என்ற கருத்து உட்பட பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். ஆனால் அது தவறான கருத்து. காரணம் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு 1978—க்கு முன்னால் சிறையில் அடைப்பட்டவர்கள், 10 ஆண்டுகளை பூர்த்தி செய்திருப்பார்களேயானால், அவர்களை விடுதலை செய்யலாமா விடுதலை செய்தால் திருந்தி வாழக் கூடிய அளவுக்கு அவர்கள் மனம் மாறி இருப்பார்களா? பிறகு மீண்டும் கொலைக் குற்றம் அல்லது மற்றக் குற்றங்களில் ஈடுபடாமல் நல்லவர்களாக வாழக் கூடிய அளவுக்கு சுற்றுப்புறச் சூழ்நிலை மனமாற்றம் இருக்கிறதா என்பதை ஆய்ந்தும் செய்த குற்றங்களுடைய தன்மை, கொடூரம் இவைகளை ஆய்ந்தும், அந்த அடிப்படையில் யார் யாரை விடுதலை செய்யலாமோ அவர்களை விடுதலை செய்யலாம் என்றுதான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறதே ஒழிய, 1978—க்கு முன்னால் கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும், 10 ஆண்டுகள் முடிந்து விட்டால், அவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற தீர்ப்பு இல்லை. அட்வைசரி போர்டை பொறுத்தவரைக்கும் அவர்கள் மேற்கொண்டிருக்கிற சில வரையறைகளுக்கும், உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிற ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் தான் இதுகாறும் விடுதலை செய்து வருகிறோமே ஒழிய பத்தாண்டுகள் ஆகிய சிலரை வேண்டும் என்றே விடுததை செய்தும், சிலரை வேண்டுமென்றே விடுதலை செய்ய வேண்டாம் என்றும் வைத்திருக்கக்கூடிய நிலைமை இல்லை என்பதை தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். அட்வைசரி போர்டைப் பொறுத்தவரைக்கும் 15 தினங்களுக்கு ஒரு முறை கூடவேண்டுமென்று அரசு உத்திரவிட்டிருக்கிறது. எங்களுடைய எண்ணம்கூட சிறையிலே இருக்கிற கைதிகள்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல—சில நேரங்களிலே சட்டத்திலே இருக்கிற சந்து பொந்துகளைப் பயன்படுத்தி சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக நிரபராதிகள் கூட குற்றவாளிகளாக சிறையில் இருக்கிறார்கள் என்பதை அரசு மறுக்கவில்லை. அது உண்மையுங்கூட.

அட்வைசரி போர்டு எல்லாப் பிரச்சினைகளையும் மனதிலே கொண்டு— சில நேரங்களிலே 'மர்டர் ஆன் புரவொக்கேஷன்' என்பதை மனைவியை ஒருவன் கற்பழிக்கிறான், கற்பழித்தவனை கொலை செய்ய முயற்சி செய்கிறான், அவன் தப்பி விடுகிறான் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் அவன் இருக்கிறான், ஒரு தினம் இரண்டு தினங்கள் முயற்சி செய்கிறான், உணர்ச்சிவயப்பட்ட நிலையில் 3 வது தினம் கொலை செய்து விடுவானேயானால் It is a murder committed not with provocation என்ற தீர்ப்பை உயர்நீதிமன்றம் அல்லது நீதிமன்றங்கள் வழங்கலாம்—இருந்தாலும்கூட மனைவியோ அல்லது சகோதரியோ



கற்பழிக்கப்பட்டபோது ஒரு நாள் இரண்டு நாட்களுக்கு அவனுடைய கொந்தளிக்கின்ற உணர்வுகள் தொடர்ந்து இருந்து அது போன்ற கொலை நடக்கிறபோது அதை 'சப்சிஸ்டிங் புரவொக்கேஷன்' என்ற அடிப்படையில் பரிசீலிக்கவேண்டுமெண்டு அவர்களுக்குக் கருணை காட்ட வேண்டுமென்ற அடிப்படையில் அது பிரச்சினைககளை அணுகுகிறது. அதேநேரத்திலே 'மர்டர் பார் கெய்ன்' என்ற முறையில் கொலை குற்றத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள், அவர்கள் பணக்காரர்களாக இருக்கிறார்கள், வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள், 'எக்னாமிக் கிரைம்ஸ்' என்ற முறையிலே வருமானத்திற்காக திட்டமிட்டு கொலை செய்கிற்வர்கள் இருக்கிறார்கள். அப்படி உள்ள குற்றவாளிகள் பலர் இன்றைக்கு இருக்கிறார்கள். வறுமையின் காரணமாக கொலை செய்வது என்பது வேறு. வசதிபடைத்தவர்கள்எல்லாம் பணம் சேர்க்க வேண்டுமென்று திட்டமிட்டு 'பிளான்டு மர்டர், மர்டர் பார் கெயின்' என்றெல்லாம் செய்கிறார்கள் என்றால் அவர்களையும் 10 ஆண்டுகள் முடிந்தவுடன் விடுதலை செய்து விடவேண்டுமென்று சொல்வார்களானால் அது சமுதாயத்திற்கு மிகவும் பாதகமாக இருக்கும் என்ற காரணத்தினால் அந்த அடிப்படையில் அட்வைசரி போர்டு சில பிரச்சினைகளில் முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் பரிந்துரை செய்கிற நடைமுறை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் பேசுகின்றபோது 15 தினங்களுக்கு ஒரு முறைஅட்வைசரி போர்டு கூடவேண்டு மன்று சொன்னார்கள். இதுவெல்லாம் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தோம். 10 ஆண்டுகள் ஆனவுடன் விடுதலை செய்யக் கூடிய தகுதி பெற்றிருப்பவர்களானால் விடுதலை செய்ய வேண்டும் என்பதை ஆய்வு செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 2 மாதங்கள் அல்ல, 3 மாதங்கள்அல்ல, 4 மாதங்கள் கூட அட்வைசரி போர்டு கூடாமல் இருந்த நிலைமையை மாற்றி சென்ற சட்ட மன்றக் கூட்டத்தொடரிலே நான் உறுதிமொழி கொடுத்தவாறு 15 நாட்களுக்கு ஒரு முறை அட்வைசரி போர்டு கூடவேண்டும் என்று கட்டாயப்படுத்தியிருக்கிறோம். சில நேரங்களிலே சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 15 நாட்களுக்கு ஒரு முறை—மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல்—பணிகள் பல இருக்கின்ற காரணத்தினால் கூட்ட முடியாமல் போய் விடுகிறது. எந்தப் பிரச்சினை எப்படியிருந்தாலும் 15 நாட்களுக்கு ஒரு முறை கூட்டவேண்டுமென்று மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரைக்கும் கைதிகள் அடங்கிய பஞ்சாயத்து ஒவ்வொரு சிறைக்கும் அமைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு அதையும் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். உணவிலே குறை நடந்தாலும், கலப்படம் நடந்தாலும் மற்ற குறைப்பாடுகள்முறைக்கேடுகள் இருந்தாலும்

எது நடந்தாலும் அதைக்கண்காணிக்கக் கூடிய வாய்ப்புசிறையில் இருக்கின்ற பாதிப்புக்குள்ளாக்கப்பட்டவர்கள் என்று சொல்லப் படுகிற கைதிகளுக்கு இருக்க வேண்டுமென்றுதான் அரசு முடிவுக்கு வந்து அந்தக் கொள்கையின் அடிப்படையில கைதிகளை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் குழு போட வேண்டுமென்று உத்திரவிடப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சில நேரங்களில் கைதிகளை அடக்கிய கண்காணிப்புக் குழு தங்கள் கடமைகளை நிறைவேறறுகிற போது அவர்களை மாற்றம் செய்து விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூட உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அவர்கள் ஒரு தகவலை தந்து நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்பது அவர்களுக்கும் தெரியும், இந்த அவைக்கும் தெரியும். கைதிகள் அடங்கிய கண்காணிப்புக் குழு இன்னும் செம்மையான முறையில் பணியாற்றுகிறபோது இந்த பிரச்சினைகள் வர வாய்ப்பு இல்லை என்பது என்னுடைய கணிப்பு.

(முற்பகல் 11-10)

மதுரையிலே இருக்கிற அடிஷனல் ஜெயில் சூப்பிரண்டென்டென்ட் ஒருவர் தவறான முறையில் நடந்தார். ஊழலில் ஈடுபட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். ஆதாரம் எதையும் கொடுக்கவில்லை என்றாலும்கூட சிறையில் இருக்கிற அதிகாரி தவறு செய்கிறார் என்று ஒரு பொறுப்புமிக்க சட்டமன்ற உறுப்பினர் கூறியிருக்கிறார் என்கிறபோது அதைக் குறித்து ஐ.ஜி. தனித்த முறையிலே விசாரிக்கச் சொல்லி அரசு நடவடிக்கை எடுக்கும். தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் எந்தக் காலத்திலேயும் அவர்களை இந்தஅரசு விட்டு வைக்காது என்பதை நான் உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

மற்றும் விடுப்பைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். விடுப்பைப் பொறுத்த வரைக்கும் மிக தாராள மாக தரவேண்டும் என்று ஒரு முடிவை எடுத்து அந்த அடிப்படையில் செய்கிறோம். முன்பு எல்லாம் அதிகாரிகளே அந்த விடுப்புகளை தந்து கொண்டு இருந்தார்கள். சில நேரங் களில் சில பிரச்னைகள் வருகிறது என்ற முறையில் விடுப்பு கொடுக்கும் அந்த பொறுப்பை கூட அரசு எடுத்து இருக்கிறது. அரசு விடுப்பை மிக தாராளமாக கொடுக்கிறது. சில நேரங் களில் நெக்சலைட்டு பிரிசினர்களுக்கு விடுப்புக்கு கட்டுப்பாடு என்ற பரிந்துரை பல காரணங்களின் அடிப்படையில் இருந்தும் கூட அரசு மனிதாபிமான முறையில்அந்த பிரிசினர்களுக்குக் கூட விடுப்பு தந்து இருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். இதை இன்னும் தாராளமாக எப்படி செயல்படுத்த முடியும் என்பதையும் அரசு ஆராய்ந்து செயல்படுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, கம்பிளைண்டு பாக்ஸ்ஐ பொறுத்தவரைக்கும் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு முன்னாலேயே தமிழ்நாடு அரசு முதல் முதலாக நாங்களே முன்வந்து சிறைச்சாலைகளிலே சிறையிலே இருக்கின்ற அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் வந்த போது கம்பிளைண்டு பாக்ஸ் வைத்து அவர்கள் என்ன என்ன குற்றச்சாட்டுகளை கூற விரும்புகிறார்களோ அது நேரடியாக சம்பந்தப்பட்ட மேல் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கும் அரசுக்கும் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படவேண்டும் என்பதற்காக நாங்களே உத்தரவிட்டு அது நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. அதை பொறுத்தவரைக்கும் பல புகார்கள் வந்து இருக்கின்றன. தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். என்ன என்ன புகார்கள் வருகிறது, என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பது துறை ரீதியான பிரச்னையாக இருக்கிற காரணத்தினால் வெளியில் தெரியாமல் இருக்கலாமே ஒழிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டு வருகிறார்கள். அதில் பலர் மீது துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது கைதிகள் புகார் பெட்டியில் போட்ட குற்றச்சாட்டு மீது இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பேசும் போது முல்லா கமிஷன் ரிப்போர்ட், நரசிம்மன் கமிட்டி ரிப்போர்ட் இவைகளை எல்லாம் ஆராய்ந்து அந்த அடிப்படையில் வெள்ளைக்காரன் காலத்தில் கொண்டுவரப்பட்ட ஜெயில் மெனியூவலை மாற்றாமல் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது தவறு கிட்டத்தட்ட கடந்த ஒரு ஆண்டு காலமாக துரித நடவடிக்கை எடுத்து 'வல்யூமினஸ் ஒன்' மிக அதிகப்படியான அளவில் உள்ள அந்த பணியை 1ஆண்டு காலமாகஇதற்கு தனியாக என்று அதிகாரிகளைப் போட்டு அந்த ஜெயில் மெனியூவல் எல்லாம் புதுப்பிக்கப்பட்டது. எல்லாவற்றையும் நாம் முடித்து விட்டோம். தற்போது அச்சடிக்க கொடுத்து இருக்கிறோம்—அச்சடித்து முடித்தவுடன் விரைவில் அந்த ஜெயில் மெனியூவல் பப்ளிஷ் ஆக இருக்கிறது அந்த புதிய ஜெயில் மெனியூவல் வருகிறபோது சிறையில் நடக்கின்ற பல கட்டுத் திட்டங்கள்—மாண்புமிகு உறுப்பினர்கள் நவநீதகிருஷ்ணன், நெடுமாறன் அவர்கள் சொன்னதைப் போல—சிறையில், ஒரு கைதி குற்றம் செய்கிறான் என்றால் அந்த குற்றவாளி என்றுமே வாழ்நாள் பூராவும் விடுதலைக்கு பிறகும் குற்றவாளியாக இருக்கவேண்டும் என்பது அரசினுடைய எண்ணம் இல்லை. யாருடைய எண்ணமும் இல்லை. அவர்கள் திருந்தவேண்டும். திருந்தி வாழ வேண்டும். அத்தகைய மனமாற்றத்தை பெறவேண்டும். அது சிறைச்சாலையாக மட்டும் இருக்கக்கூடாது. சீர்திருத்த சாலை யாக இருக்கவேண்டும் என்ற எழுச்சியின் அடிப்படையில் தான்

அரசு பிரச்னைகளை ஆராய்கிற காரணத்தால் மற்ற எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு நமது மாநிலத்தில் தான் இந்த குழுக்கள் பரிந்துரைகளை ஏற்று நாம் ஏற்கனவே இரண்டு சிறை நூல்களை முழுமையாக நாம் மாற்றிவிட்டோம். புதியதாக சிறை மெனியூவலை தயார் செய்து அச்சடிக்க தந்து இருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துகிறபோது இந்த பிரச்னையில் கிட்டத்தட்ட 99.9 சதவீதம் பிரச்னைகள் முழுமையாக தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. காரணம் இந்த புதிய சிறை மெனியூவலை திருத்துகின்ற பணியில் நானே தனிப்பட்ட கவனம் செலுத்தி என்ன என்ன மாற்றங்களை செய்ய வேண்டுமோ அவற்றை செய்து நாங்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது எம்.எல்.ஏ.-க்களை எல்லாம் சிறைக்குள் அனுமதிப்பது இல்லை என்று சொன்னார்கள். அப்படி அல்ல. ஏற்கனவே இருக்கின்ற சிறை மெனியூவலின் விதியின்படி அவர்கள் அனுமதிப் பெற்று—சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்—சிறைச் சாலைக்குள் செல்லலாம் என்று இருக்கிறது. புதிய சிறை மெனியூவல் வருகிறபோது மக்களுடைய பிரதிநிதிகளாக இருந்தாலும் அல்லது மற்ற குழுக்களாக இருந்தாலும் சிறைச்சாலை எத்தகைய முறையில் செயல்படுகிறது என்கின்ற பணியினை கண்காணிக்க வேண்டும் என்றும் புதிய சிறை மெனியூவல் சட்டம் அதை ஒட்டிய விதிகளின் கீழ் தக்க நடவடிக்கையை எடுக்க அரசு உத்திரவு இடும் என்பதை நான் கூற விரும்புகிறேன்.

சிறைச்சாலைகளுக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் தனியார்களிடமிருந்து வாங்கக்கூடாது. கூட்டுறவு பண்டக சாலை மூலம் தான் வாங்கவேண்டும் என்ற உத்திரவையும் அரசு போட்டிருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் பிரச்சனையில் சிறை நிர்வாகத்தை செம்மைப்படுத்துவது குறித்து அரசுக்கு அவ்வப்போது ஆலோசனை சொல்லக்கூடிய குழுக்கள் அமைக்க அரசு ஏற்கனவே முடிவு எடுத்து இருக்கிறது என்பதை சொல்லி இந்த பிரச்னைகளைப் பொறுத்த வரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறி இருக்கின்ற பல பிரச்னைகள் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டு விட்டன. உதாரணமாக ஒன்று இரண்டை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

கட்டிட வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டும் என்பது 50 அம்ச கோரிக்கையில் ஒன்று. அதற்காக இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்தில் தான் 8 கோடி ரூபாய் நிதியாக பெற்று இதை அனைத்து சிறைச் சாலைகளுக்கும் நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம். கட்டிடப் பணிகள் தொடர்ந்து நடந்துகொண்டுவருகின்றன.



பூர்த்தி பெறுகின்றபொழுது இந்தப் பிரச்னை முற்றுப் பெற்று விடும் புகார் பெட்டிகள் வைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கனவே வைக்கப் பட்டு விட்டது. கான்டின் அமைக்க வேண்டுமென்பது 50 அம்சக் கோரிக்கைகளிலே ஒன்று. கான்டின் ஏற்கனவே வைக்கப்பட்டிருக் கிறது. கலை கலாச்சார நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிறை ஒன்றுக்கு கலை, கலாச்சார நடவடிக்கைகளுக்காக, ரூ. 750 செலவிட அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதைப் போலவே, பஞ்சாயத்து முறையை எல்லா சிறைகளுக்கும் கொண்டு வரவேண்டுமென்பது 50 அம்சக் கோரிக்கைகளிலே ஒன்று. அது ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா சிறைகளையும் சிறைத் துறையின்கீழ் கொண்டு வர வேண்டுமென்பது ஒரு முக்கியமான கோரிக்கை. கடந்த ஓராண்டு காலத்திற்குள் 70, 80% சிறைகளை ரெவின்யூ டிவிஷன்களிலே இருக்கிற சிறைச்சாலைகளின் கீழே கொண்டு வர ஏற்கனவே நடவடிக்கை எடுத்து விட்டோம். மீதமுள்ள சிறைச்சாலைகளை இந்த ஆண்டே அரசின்கீழ், சிறைத் துறையின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சோப்பு, பற்பொடி, எண்ணெய் போன்றவைகளை ஒவ்வொரு கைதிக்கும் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக் கிறது. அதற்கு அரசு ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது. இது போன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. சில கோரிக்கைகள்தான் நடைமுறைப்படுத்தப்பட முடியாத நிலைமையில் இருக்கின்றன என்று சொல்லி மற்றவைகளைப் பொறுத்தவரைக்கும் மனமாற்றம் பெறவேண்டியவர்கள் என்ற முறையில் அதற்கேற்றாற் போல் நடவடிக்கை எடுக்கிறோம் என்று கூறி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டு அமர் கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிவிப்பு

### பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க, பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.—

| | |
|---|---|
| 31-10-1983 திங்கட்கிழமை | 1. 1983-84 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். |
| | 2. மேற்படி நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். |

(பேரவைத் துணைத் தலைவர்)

3. 1975-76, 1976-77 மற்றும் 1977-78 ஆண்டுகளுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

4. மேற்படி நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (நேரம் இருப்பின்)

1-11-1983 (செவ்வாய்கிழமை) அரசினர் சட்ட முன்வடிவுகள்-ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

பேரவை 1-11-1983 அன்று ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 8-11-1983 அன்று கூடும்.

பேரவை வழக்கம்போல் காலை 9-00 மணிக்குக் கூடும்.

5 அறிக்கை அளித்தல்.

விதி 1?7-ன் கீழ் அவை முன்னவரின் அறிக்கை

மாண்புமிகு டாக்டர் இராநெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 4-4-1983 அன்று இராமநாதபுரம் மாவட்டம், 'சாத்தூர் அருகே உள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த மாட்டு வண்டுகள் மீது பேருந்துகள் மோதியதால் 8 பேர்கள் இறந்து போனதன் விளைவாகப் பொது மக்களிடையே ஏற்பட்ட பதட்ட நிலைமை குறித்து விவாதிக்க இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமா என்பது பற்றி நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பதில் உரை தருகின்றபோது குறிப்பிட்ட கருத்துக்களிலே இரண்டு திருத்தங்கள் மட்டும் நான் கொண்டு வர விரும்புகிறேன்.

அந்த மேற்படி பதிலில் 'சாத்தூர் காவல் துறை இணைக் கண்காணிப்பாளர்' என்று குறிப்பிட்டதை 'சிவகாசி காவல் துறை இணைக் கண்காணிப்பாளர்' என்றும் 'ஈமக் கிரியைக்காக ரூ. 1000' என்று குறிப்பிட்டதை, 'கருணைத் தொகையாக ரூ. 1000' என்றும் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறேன்.

6. கவன ஈர்ப்பு.

திண்டுக்கல் நகரில் கொசுக்களின் தொல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் என். வரதராஜன், ரா. உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். வரதராஜன்: துணைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் நகர் மத்தியில் அரண்மனைக் குளத்தில் சாக்கடை நீர் தேங்குவதால் கொசுத் தொல்லை உள்ளது பற்றிய"



அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, பாய்ன்ட் ஆர்டர். இது நான்-அபிஷியல்டே. நேற்று நடந்திருக்க வேண்டியதை மாற்றி வைத்திருக்கிறோம். நான் அபிஷியல்-டேவிலே ஒரே பிரச்னையைக் கொண்டு வருகிறோம். அதிலே பேசி விட்டு அடுத்தப் பிரச்னைக்குப் போக வேண்டும். மண்டல கமிஷன் அறிக்கையைப் பற்றி பேசவேண்டும். நான் அபிஷியல்-டேவிலே 12 மணி வரையிலும் வேறு பிரச்னைகளை எடுத்துக் கொண்டால் நாங்கள் என்ன செய்வது?

(முற்பகல் 11-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே இதுபற்றி யோசித்து, அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் போன்றவர்கள் சிந்தித்து, ஏன் ஒத்திவைக்க வேண்டுமென்ற காரணத்தை மட்டும் இரண்டு நிமிடத்திற்குள்ளே முடித்து இருப்பார்களானால் இது முடிந்திருக்கும். ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்டு, அதிலே உறுப்பினர்கள் விளக்கமெல்லாம் சொன்னதன் காரணமாகத்தான் இவ்வளவு நேரம் ஆயிற்று. தனிநபர் தீர்மான நாளை சுருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. இதை நான் அப்போதே சொன்னேன். இது நீள நீள மாநில சுயாட்சி தான் குறைந்துகொண்டே வருகிறது என்று சொன்னேன். (சிரிப்பு). ஆகவே தனிநபர் தீர்மானத்தின் மீது இங்கே வாதாடுகிற நேரம் குறைகிறது என்று சொன்னேன். ஆகவே தனி நபர் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதை விரைவாக விளக்க வேண்டும் என்பதற்காகத் தான் விவாதித்து, கொண்டு இருக்கிறோம். இங்கு உறுப்பினாகள் முழுக்க விவாதித்து இன்னொரு நாள் கூட பல உறுப்பினர்கள் விவாதிக்கிற அவசியத்திலே இருக்கிறார்கள். அதனுடைய முக்கியத்துவத்தை உணர்கிறோம், கூடுமான வரையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நேரம் குறைக்கப் படுமேயானால், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்த நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திண்டுக்கல் நகரிலுள்ள அரண்மனைக் குளம், சாக்கடை நீர் வந்து விழுந்து தேங்கி காசு உற்பத்தியாகுமிடமாக இருந்து வருகிறது. இக்குளத்தில் மண்டியுள்ள தண்ணீர்ப்பூண்டு எளிதில் நெருங்கி மருந்தடிக்க முடியாமல் பெருகி வளர்ந்து உள்ளது. குளத்திலிருந்து செடிகளை ஆட்கள் அப்புறப்படுத்த முடியாதபடி ஆழமான சேறு உள்ளது,

(திரு. சு. முத்துசாமி)

[1983 அக்டோபர் 29

குளத்தை ஒட்டியுள்ள காந்தி சாலையில் சாக்கடை வடிகால் கட்டி, சாக்கடை நீர் குளத்தில் விழுந்து தேங்காதவாறு செய்வதற்கு, திண்டுக்கல் நகராட்சி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனைச் செயற்படுத்த அரசின் புறம்போக்கு நிலமும், தனியார் நிலமும் வேண்டியுள்ளது. இந்நிலங்களைப் பெறுவதற்கான நடவடிக்கையையும் நகராட்சி துரிதமாக எடுத்து வருகிறது.

குளத்தில் மருந்தடிக்கவும், பூண்டுகளை அகற்றவும் ஒரு பிளாஸ்டிக் பரிசில் வாங்க நகராட்சி முற்பட்டுள்ளது. தற்போது விசைத் தெளிப்பான்களை பயன்படுத்தி குளத்தில் கொசு ஒழிப்பு மருந்து அடிக்கப் படுகிறது. இதனால் கொசுத் தொல்லை குறைந்துள்ளது.

இக்குளத்தில் உற்பத்தியாகும் கொசுவகை, கடித்துத் தொல்லை தருவனவேயன்றி, நோய் பரப்பும் வகையைச் சேர்ந்தவை அல்ல. எனவே, சுகாதாரக்கேடு எதுவும் விளைவதில்லை.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரமே இன்று கொசுக்களுக்குப் பெயர் பெற்ற திருநகரம் என்றாகி விட்டது. அந்த பிரசித்தி பெற்ற சாக்கடை நீர் விழும் அரண்மனைக் குளம் நகரத்தின் மையத்திலே இருக்கிறது. சாக்கடை நீர் தேங்குவதால் வளர்கின்ற கொசுக்களின் பயங்கரமான தாக்குதலால் சுற்றியிருக்கிற 20 ஆயிரம் மக்கள் இரவில் வீடுகளில் தங்குவதில்லை. தெருக்களில் அலைந்து திரிகிற காட்சியை திண்டுக்கல்லில் பார்க்க முடியும். ஆகவே சாக்கடை குளத்தை அப்புறப்படுத்துவது ஒன்று; உடனடியாக இதற்கு போகிற சாக்கடை நீரை தடுத்து நிறுத்தி நகரத்திற்கு வெளியிலே அப்புறப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? நவீன மருந்து தெளிப்பான்களை கொண்டு வந்து நகரத்தில் இருக்கிற கொசுத் தொல்லையை போக்க நடவடிக்கை எடுக்குமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியபடி காந்தி சாலையில் சாக்கடை நீர் வந்து தேங்கி விடுவதால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கையை நகராட்சி துரிதமாக எடுத்து வருகிறது. அதிலே தனியாருக்குச் சொந்தமான இடத்தை கையகப்படுத்த வேண்டியிருப்பதாலே, அதில் காலம் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு நாம் ஆளாக்கப்பட்டுள்ளோம். அங்கே நவீன தெளிப்பான்களை வைத்து இப்போது மருந்து அடித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் அவர்களுக்கு அறிவுறுத்தும்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இதிலே குறிப்பிடப்பட்டிருப்பது, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு





வருவார்) என்று இருக்கிறது. ஆனால் அவர் இங்கு இல்லாமல் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் பதில் கூறி முடித்து விட்டார்கள். இப்போது அதில் பிரச்னை இல்லை. உட்காருங்கள்.

## 7. அரசினர் சட்ட முன்வடிவு

சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (மூன்றாவது திருத்த சட்ட முன்வடிவு 1983.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்ளே, மெட்ராஸ் போலீஸ் ஆக்ட், தமிழ்நாடு டிஸ்ட்ரிக்ட் போலீஸ் ஆக்ட் ஆகிய இந்த இரண்டு சட்டங்களுக்கும் நம்முடைய அரசு சில திருத்தங்களைக் கொண்டு வருகிறது. இந்த இரண்டு சட்டங்களும் வெள்ளைக்காரன் காலத்திலே கொண்டுவரப்பட்ட சட்டங்கள். இதில் இருக்கின்ற சில பிரிவுகள் நடைமுறைப்படுத்தப்பட முடியாமல் தூக்கியெறியப்பட வேண்டிய பிற்போக்கான பிரிவுகள் ஆகும். காரணம், வெள்ளைக்காரன் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டங்களானதால் இவைகளில் தீமையான சில அம்சங்கள் இருக்கின்றன.

இன்றைக்கு நாட்டிலே உள்ள எவ்வளவு சட்டங்களுக்குத் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. ஆனால் அவைகளுக்கெல்லாம் கொண்டுவராமல் இதற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். குதிரையை யாராவது அச்சுறுத்தினால் அவர்களுக்கு மூன்று மாதம் ஜெயில், 250 ரூபாய் அபராதம் என்ற ஒரு திருத்தத்தை இந்தச் சர்க்கார் ரொம்ப அவசியமாக கொண்டு வந்திருக்கிறது இந்த நாட்டிலே இருப்பவர்களுக்கு வேலை இருக்கிறதா, இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஏதோ ஆயிரக்கணக்கான குதிரைகள் அன்றாடம் போய்க் கொண்டிருப்பதைப் போலவும் கருதி அதைப் பயமுறுத்தினால் கடுமையான குற்றம் என்பது போலவும் குதிரைகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு குதிரைகளை வேண்டுமென்றே அச்சுறுத்தினால் மூன்று மாதம் ஜெயில், 250 ரூபாய் அபராதம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

இதிலே நான் கேட்க விரும்புகிறேன், குதிரையை அச்சுறுத்தினால் இம்மாதிரி மூன்று மாதம் ஜெயில். 250 ரூபாய் அபராதம் என்று சொல்கிறார்களே, யாராவது மாட்டை

அச்சுறுத்தினால் இம்மாதிரி தண்டனை இருக்கிறதா? கழுதையை அச்சுறுத்தினால் இம்மாதிரி தண்டனை இருக்கிறதா? நாயை அச்சுறுத்தினால் இம்மாதிரி தண்டனை இருக்கிறதா? கிடையாது ஆனால் குதிரைக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய சர்க்காரிலே இருப்பவர்களுக்கு அல்லது போலீசுக்கு யாராவது ஒரு ஆளைப் பிடிக்கவில்லையென்றால் அல்லது இலஞ்சம் கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வார்கள் பாட்டில் வைத்திருக்கிறார்கள் என்று இப்பொழுது பிடிக்க, முடியாது. ஏனென்றால் மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கிறது. முக்காட்டு கேஸ், அடிதடி கேஸ் என்று போட முடியாவிட்டாலும், எங்கேயாவது மேய்ந்து கொண்டிருக்கின்ற, சாகப்போகின்ற ஒரு குதிரையைப் பிடித்துக் கொண்டுவந்து இந்தக் குதிரையை இவர் அச்சுறுத்தினார் என்று சொல்லி உள்ளே தள்ளிவிடலாம். அத்தகைய அபாயகரமான சூழ்நிலை இதில் இருக்கிறது.

இதில் இன்னொரு வேடிக்கையும் இருக்கிறது. போலீஸ் கேஸ் போட்டு, வழக்கு நடக்கும். நீதிபதி தீர்ப்பைச் சொல்ல வேண்டும். குதிரையை சம்பந்தப்பட்டவர் அச்சுறுத்தினாரா இல்லையா என்பதற்குச் சாட்சி சொல்வது யார்? குதிரை வந்து சாட்சி சொல்லுமா என்று கேட்டால் சிக்கல்தான். குதிரை வந்து சாட்சி சொல்ல முடியாது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். இன்னொன்றையும் நான் கேட்கிறேன். குதிரையை நாம் அச்சுறுத்தினால் தண்டனை, ஆனால் நம்மைக் குதிரைகள் அச்சுறுத்தினால் அதற்கு என்ன செய்வது? அதற்குக் கேஸ் உண்டா? அதற்கு என்ன தண்டனை? அதுபற்றிய சிந்தனை உண்டா? கிடையாது. மேலும் இதிலே ஆண் குதிரையா, பெண் குதிரையா என்பதற்கான டெபெனஷனும் தெளிவாக இல்லை.

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். பிராணிகளை 'இல் ட்ரீட்மெண்ட்' செய்தால் தண்டனை என்று ஏற்கனவே சட்டம் இருக்கிறது. அப்படிச் சட்டம் இருக்கும் பொழுது இந்தமாதிரி சட்டம் கொண்டுவருகின்ற தேவை இந்த அரசாங்கத்திற்கு என்ன இருக்கிறது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முஸ்லீம் சமுதாயத்திலே இருப்பவர்களும், வட நாட்டில் இருப்பவர்களும் கல்யாணத்தின் பொழுது மாப்பிள்ளையைக் குதிரையில் ஏற்றி ஊர்வலம் வருவார்கள். அவர்கள் போலீஸ்காரர்களைத் தனியாகக் கவனிக்கவில்லையென்றால் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அந்த மாப்பிள்ளையையே உள்ளே தள்ளிவிடலாம். கல்யாணம் ஆன அன்றைக்கே மாப்பிள்ளை ஜெயிலுக்குள்ளே போக வேண்டியதுதான். அவர் முதலிரவைப் பார்க்க முடியாது, மனைவியைச் சந்திக்க முடியாது, அன்றைக்கிரவே மாப்பிள்ளையை ஜெயிலுக்குள்ளே அனுப்பிவிடுவார்கள்.

முஸ்லீம்கள் புனிதமாகக் கருதுகின்ற பஞ்சாவைக் குதிரையிலே கொண்டு வருவார்கள். இந்தச் சட்டத்தின்படி அதுவும் குற்றமாகக் கருதப்படும்.



மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், ஏற்கனவே 50 ரூபாய் அபராதம் ஒரு மாதம் ஜெயில் என்று இருந்தது. இதுவே வெள்ளைக்காரன் தேவையில்லாமல் போட்டிருப்பதாகும். ஆனால் இதுவும் போதாது என்று மூன்று மாதம் ஜெயில் 250 ரூபாய் அபராதம் என்று ஆக்கியிருக்கிறார்கள். அதுமட்டும் அல்லாமல், சென்னையிலே மட்டும் இது அமுலில் இருந்தது. அது போதாது என்று கருதி தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா இடங்களிலும் போலீஸ் இந்த கேஸ்களைப் போடுவதற்கான அதிகாரம் வேண்டுமென்று எக்ஸ்டென்ட் வேறு செய்கிறீர்களே இது நியாயமா, இது அவசியமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

இன்னொன்றையும் சொல்கிறார்கள். ஆட்டோ, லாரி, டாக்சி, மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், கார், பஸ் இவைகளெல்லாம் ஓடுகின்றபொழுதோ, தள்ளினாலோ, இழுத்தாலோ அதிகமாகச் சப்தம் வந்தால் மூன்று மாதம் ஜெயில், தண்டனை, 250 ரூபாய் அபராதம் போடப்படுகிறது. இதிலே போலீஸ் பொய் வழக்கு போடுவதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. டாக்சிக்காரர்கள் மற்றும் ஆட்டோக்காரர்கள் மீது உங்களுடைய வாகனத்திலிருந்து அதிகப்படியான சத்தம் எழுப்பப்பட்ட காரணத்தால் நீங்கள் தண்டிக்கப்படுகிறீர்கள்' என்று சொல்லி அவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற நிலைமை இருக்கின்றது. ஆனால் அதிகப்படியான சப்தத்தை எழுப்பினார்கள் என்பதற்கு என்ன முறை வைக்கப்பட்டிருக்கின்றது, அல்லது குறைவாகத்தான் சப்தம் எழுப்புகிறார்கள் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது அதற்கு என்னென்ன முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியவில்லை.

அடுத்து இன்னொன்றை சொல்ல விரும்புகிறேன். எண்ணூர் ஸ்டீல் என்டர்பிரைசஸ் என்று எண்ணூரிலே இருக்கின்றது. அந்த நிறுவனத்திலே 5 டன் பவர் உள்ள சம்மட்டியைப்போட்டு அடிக்கிறார்கள். அந்தப் பக்கத்திலே குடியிருப்பவர்களின் வீடுகள் எல்லாம் கூட அதனால் அதிர்கின்றன......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் நல்ல ஆலோசனைகளை இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலேயே சொல்ல ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அந்த ஆலோசனைகளை கன்ஸிடரேஷன் ஸ்டேஜிலே சொன்னால் பரிசீலிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

It is being only in an introduction stage. Let us cut short the discussion.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே விவரமாகப் பேச வேண்டியதில்லை. கன்சிடரேஷன் ஸ்டேஜிலே பேசிக்கொள்ளலாம்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே
எண்ணூர் ஸ்டீல் என்டர்ப்ரைஸஸிலே 5 டன் பவர் உள்ள
சம்மட்டிகளைப் போட்டு அடிக்கிறார்களே, அதைத் தடுப்பதற்கு
சட்டம் இல்லை. மற்றவர்களுக்குச் சட்டம் கொண்டுவருகிறீர்
கள். அதாவது குழந்தைகள் பட்டம் விட்டால் அதற்கு
தண்டனை கொடுக்கின்ற அளவில் சட்டம் கொண்டுவருகிறீர்
கள். இப்படி 3 மாத சிறை தண்டனை, 250 ரூபாய்
அபராதம் என்று எது எதற்கோ சட்டம் கொண்டுவரு
கிறீர்கள்......

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர்
அவர்களே, இந்த விவரங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கன்சிடரேஷன் ஸ்டேஜிலே சொன்னால் மிகவும்
உதவியாக இருக்கும். பட்டம் விட்டதனால் செத்தவர்களும்
உண்டு. பட்டத்தைக்காட்டி கொலை செய்யப்பட்டவர்களும்
உண்டு என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இந்த இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே இந்த
பில்லை எதிர்த்து பேசி இரண்டு மூன்று நிமிடங்களுக்குள்
முடித்துவிட வேண்டுமே தவிர விவரமாகப் பேசிக்கொண்டிருக்க
வேண்டியதில்லை.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே,
பட்டம் விட்டால் யாருக்கேனும் ஆபத்து ஏற்பட்டால் 50 ரூபாய்
அபராதம் ஒரு மாதம் ஜெயில் என்பது ஏற்கெனவே இருக்
கின்றது. பட்டம் விடுவது தப்புதான். ஆனால் பெரும்பாலான
குழந்தைகள் பட்டம் விடுகிறார்கள். ஆகவே இதற்கெல்லாம்
இவ்வளவு பெரிய கொடுமையான சட்டங்களை இந்த அரசு
கொண்டுவருகின்றது என்பதைத்தான் நான் சொல்கிறேன்....
(குறுக்கீடு)....இப்படிப்பட்ட கோமாளித்தனமான சட்டங்களை
எல்லாம் கொண்டுவருவதற்கு குறைந்தபட்சம் ஒரு உச்ச
வரம்பாவது இருக்க வேண்டும் என்பதைச் சொல்லி இதற்கு
எனது எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான்கு நாட்களுக்கு முன்னதாக போலீஸுக்கு
அதிகப்படியான அதிகாரம் கொடுக்கக்கூடிய ஒரு சட்டம்
கொண்டுவரப்பட்டது. அதை நாங்கள் எதிர்த்தோம். அப்போது
நான் நினைத்தேன். இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவருவது
என்பது அதோடு நிற்கும் என்று. இதற்கு மேலும் வேறு எந்த
சட்டத்தையும் கொண்டுவந்துவிட முடியாது என்று நினைத்தேன்.
ஆனால் அதற்குப் பிறகும் இப்படிப்பட்ட சட்டங்களைக்
கொண்டுவரலாம் என்று கண்டுபிடித்து கொண்டுவரப்பட்டிருக்
கின்றது. அதாவது குழந்தைகள் பட்டம் விடுவது சம்பந்த
மாகவும், வாகனங்களில் இருந்து எழுப்பப்படுகின்ற சப்தம்
காரணமாக குதிரை மிரளுகின்றது என்பது சம்பந்தமாகவும்



சட்டம் கொண்டுவரப்படுகின்றது. இந்த சட்டத்திற்கு
அமென்ட்மென்ட் கொடுக்கின்ற வகையில் இதை நான் சொல்ல
வில்லை. Absolutely it has nothing to do with reality, என்பதற்
காகத்தான் சொல்கிறேன். குதிரையின்மீது இந்தச் சர்க்காருக்கு
திடீரென்று ஒரு அனுதாபம் எப்போது வந்தது என்பது
தெரியவில்லை. குதிரை மிரளக் கூடாது என்றால் ரோட்டிலே
கார், லாரி, மற்ற வாகனங்கள் போவதே தடை செய்யப்பட
வேண்டும். அப்போதுதான் இந்தச் சட்டம் சரியாக வரும்,
குதிரை பயப்படுகின்றது என்பதற்காக வாகனங்கள் செல்
வதையே தடுக்க வேண்டிவரும். வாகனங்களிலிருந்து வருகின்ற
சப்தங்களைக் கேட்டு குதிரைகள் மிரள்கின்றன என்றால்

You will have to stop the car, bus etc., Can we do that? No
we cannot. That is why I said this has nothing to do with reality
Moreover, if you bring this Act the most affected person will be the
Chief Minister. முதல்வர் அவர்கள் போகும்போது அவருடைய
காருக்கு முன்பாகச் செல்லக்கூடிய பைலட் கார்தான் ஊம்'
என்ற சப்தத்தைப் போட்டுக் கொண்டே செல்கின்றது. நான்
ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். எதிர்க் கட்சிகளைத்தான்
நம்முடைய சர்க்காருக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால்,
குதிரையைப் பிடித்து இருக்கிறது.

குழந்தைகள் மீதும் முதலமைச்சருக்கு ஏன் இவ்வளவு
வருத்தம்? குழந்தைகள் பட்டம் விடுவது நூற்றாண்டுக்காலமாக
இருக்கிறது, அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ, நமக்குத்
தெரியாது. இதனால் என்ன ஆகும் என்று சொன்னால்,
இப்போது சைல்ட் லிப்டர்ஸ் இருக்கிறார்கள். அதனால் மக்கள்
மத்தியில் ஏற்கனவே ஒரு ஸ்கேர் இருக்கிறது. இப்போது
குழந்தைகள் பட்டம் விடுகின்றபோது போலீஸ்காரர்கள்
பிடித்துக்கொண்டு போய் விடுவார்கள். அது பேரன்ட்ஸுக்குத்
தெரியாது. சைல்ட் லிப்டர்ஸ்தான் எடுத்துக்கொண்டு போய்
விட்டார்களோ என்று அச்சப்பட நேரிடும். இதனால் அனா
வசியமான ஸ்கேர்டென்ஷன் உருவாகும். இந்தச் சட்டத்தின்
காரணமாக You are enrolling the Policemen also among the child
lifters. இதோடு நீங்கள நிற்கமாட்டீர்கள். குழந்தைகளுக்கு
பால்புட்டி கொடுப்பதையும் தடைசெய்வோம் என்று சொல்ல
லாம். மனிதர்கள் உடை அணியக் கூடாது என்று சொல்லலாம்.

The whole thing looks petty and childish. உங்களுக்கு
மெஜாரிட்டி இருக்கிறது என்பதற்காக எதை வேண்டுமானாலும்
செய்யலாம் என்பது அல்ல. ஜனநாயக உரிமைகளை பாதுகாப்
பதற்குத்தான் மெஜாரிட்டி பயன்படுத்தப்பட வேண்டும்.
மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறவேண்டும் என்பதற்காக
மெஜாரிட்டி பயன்படுத்தப்படவேண்டும். போலீசுக்கு அதிக
அதிகாரம் கொடுப்பதற்காக அல்ல. You are doing just the
opposite. ஆகவே, இந்தச் சட்டத்தை அமைச்சர் அவர்கள்
இன்டர்டியூஸ் செய்யக்கூடாது என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் சட்டத்தையும், 1889 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டத்தையும் மேலும் திருத்துவதற்காக கொண்டுவரப் பட்டுள்ள சட்ட முன்வடிவை குதிரைப் பாதுகாப்பும், பட்டம் விடுவதை தடுக்கின்ற சட்டம் என்று அதன் தலைப்பு மாற்றப் பட வேண்டும் என்று நான் முதலில் தெரிவித்துக்கொள் கிறேன்.

இந்தச் சட்டத்தை நீங்கள் ஏன் இப்போது கொண்டு வர வேண்டும். இது ஆங்கிலேயர்கள் இருந்த நேரத்தில் ஆங்கிலேயர் கள் சாரட்டில் வருகிறபோது போகிறபோது ஏதோ சத்தம் கேட்டு குதிரை மிரண்டு யாரோ கீழே விழுந்துவிட்டான் என்பதற்காக சட்டம் கொண்டுவந்தார்கள். இப்போது குதிரையைப் பார்க்க வேண்டுமொனால், குழந்தைகளை அழைத்துக்கொண்டு மியூசி யத்திற்குச் சென்றுதான் பார்க்க வேண்டும். ஏதோ இங்கே குதிரைகள் நிறைய இருப்பதைப் போலவும், அதைப் பாதுகாக்க ஒரு சட்டம் தேவை என்பதைப் போலவும் இங்கே இதைக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். இந்தச் சட்டம் ஒரு யாந்திரிக மான சட்டமாக இருக்கிறது! யதார்த்த நிலைக்குப் புறம்பான சட்டமாக இருக்கிறது. இப்படி சட்டம் கொண்டுவருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

தோழர் உமாநாத் அவர்கள் கூறியதைப்போல, சின்னப் பிள்ளைகள் பட்டம் செய்து பறக்க விட்டுக்கொண்டு இருக்கிற போது போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? பெரிய ஆட்களைப் பிடித்துக்கொண்டு போனாலே தெரிவது இல்லை, சின்னப் பிள்ளைகளைப் பிடித்துக்கொண்டு போனால் எப்படித் தெரியும். (குறுக்கீடு) ஆகவே, இந்தச் சிறு பிள்ளைகள் பட்டம் செய்து விடுவதைத் தடுக்கும் சட்டத்தையும் நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம். இது தேவையற்ற சட்டம். இந்தப் பட்டம் விடுவதைத் தடை செய்யும் சட்டத்தை அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, 1888 ஆம் ஆண்டு சென்னை நகர காவல் சட்டத்தையும், 1889 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டத்தையும் மேலும் திருத்துவதற்காக அறிமுகம் செய்யப்படுகின்ற சட்டத்தை அறிமுக நிலையிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கனவே நான் சொன்னதைப்போல இந்தச் சட்ட முன்வடிவை ஆய்வு செய்கின்ற நேரத்தில் இதிலே என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்து தற்போது இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் மற்றும் தமிழ்நாடு மாவட்டக் காவல் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

*தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

*(முற்பகல் 11—40)*

8. தனித் தீர்மானம்.

மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் என்பதுபற்றி திரு. உமாநாத் அவர்கள் 31-7-1980-ம் தேதியன்று முன்மொழிந்த தனித் தீர் மானத்தின்மீது மேலும் விவாதம் தொடரும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: துணைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மத்திய மாநில அரசுகளுடைய உறவு களைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக சர்க்காரியா கமிஷன் அமைத்த பிறகும் இங்கே இந்த விவாதம் தேவையா? அண்மையில் ஸ்ரீநகரில் நடைபெற்றக் கூட்டத்தில் தோழர் உமாநாத் அவர்களுடைய கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு அவர்களும் அதைப்போன்று கர்நாடக மாநிலத்திலிருந்தும் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தும் சென்றவர்களும் கலந்துகொண்டு அங்கே பல்வேறு கருத்துக் களைப் பரிமாறி இருந்தாலும் கூட, மத்திய அரசு சர்க்காரியா கமிஷனை அமைத்து, ஓராண்டுக்குள்ளாக ரிப்போர்ட் பெறப் பட்டு, பாராளுமன்றத்தில் வைக்கப்படும் என்று சொல்லியிருப் பதால், அந்த ரிப்போர்ட் பரிசீலனை செய்யப்பட இருப்பதால் இங்கே இந்த விவாதம் தேவையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவ ரவர்களே, இந்த தனி நபர் மசோதாமீது நடைபெறுகின்ற விவாதம் அண்மையில் மத்திய அரசால் நியமிக்கப்பட்டிருக்கிற சர்க்காரியா கமிஷனுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதால் இதை நாம் தொடரலாம்.

Dr. K. Sowrirajan: One more submission. The same thing can as well be submitted before the Sarkariya Commission itself which will be much more usful to the Commission rather than discussing it here itself.

திரு. ரா. உமாநாத்; கமிஷன் போட்டுவிட்டார்கள் என்று சொல்லி, நம்முடைய உரிமையை ஏன் பறிக்க வேண்டும்? நம்முடைய கருத்தை நாம் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தத் தீர்மானம் 1980-லே கொண்டுவரப்பட்டு இன்று வரையிலும் விவாதம் முடிவடையாமல் இருப்பதற்குக் காரணம் பிற முக்கியமான அலுவல்களை எடுத்துக் கொள்வதற்காக தனியார் அலுவல் நாட்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒத்திவைத்ததுதான். மேலும் இந்தப் பிரச்சனையில் எல்லோருடைய கருத்துக்களையும் அறிவிக்க வேண்டியது ஒரு முக்கியமான பிரச்சனை. இது சர்க்காரியா கமிஷனுக்கும் பயன்படுவதாக அமையும்.

அது மட்டுமல்ல, மத்திய—மாநில அரசுகள் உறவுபற்றி ஆராய மாநில அரசின் சார்பிலே இராம்பிரசாத் ராவ் தலைமையில் ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். அவர்களுக்கும் இது உதவிகரமாக இருக்கக்கூடும். மாநில மக்கள் சார்பில் தெரிவிக்கப்படுகின்ற இந்தக் கருத்துக்கள், மக்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் தெரிந்து கொள்ளவும் இது பயன்படும். அந்த அறிக்கை வந்த பிறகு நம்முடைய எண்ணங்கள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன என்று கண்டுகொள்ள இது பயன்படும்; அவர்களுக்கு உதவி செய்வதாக இருக்கும் என்பதால், சர்க்காரியா கமிஷன் அமைத்துவிட்ட காரணத்தால் நம்முடைய நோக்கம் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இதை கைவிட வேண்டியதில்லை; விவாதத்தைத் தொடர்ந்து நடத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவை விவாதத் திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லட்டும், சர்க்காரியா கமிஷன் இங்கே தெரிவிக்கின்ற கருத்துக்களைப் பின்பற்றினால் பின்பற்றட்டும். ஆகையால் நாம் விவாதத்தைத் தொடரலாம். மூன்று ஆண்டுகளாக இதுபற்றி விவாதித்துக்கொண் டிருக்கிறோம்.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவரவர்களே, இன்றைக் காவது இதற்கு ஒரு முடிவு வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் சுருக்கமாக கருத்துக்களைச் சொல்லி முடித்தார்களானால், இன்றைக்கு விவாதம் முடிந்துவிடும்.



Dr. K. Sowrirajan: All the copies of the proceedings can be sen to the Commission.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இங்கே நடைபெறுகின்ற விவாதங்களை எல்லாம் நாம் சர்க்காரியா கமிஷனுக்கு அனுப்பிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் இங்கே பேசுகின்ற கருத்துக்கள் அவர்களுக்கு 'எக்கோ' அடிக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் சௌரிராஜன் அவர்களும் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொல்லலாம். உதவிகரமாக இருக்கும்.

திரு. ரா. உமாநாத்: அலுவல் ஆய்வுக் குழுவிலேகூட எல்லோரும் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

*திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, கடந்த 3 ஆண்டுகளாக நம்முடைய சட்டப்பேரவையில் விவாதித்து வருகின்ற இந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை குறித்து அதில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்வதற்குள்ளாகவே, இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு வளர்ச்சிகள் இந்த மாநில சுயாட்சித் தத்துவத்திற்கு ஏற்பட்டு இருப்பதைத் தாங்கள் கவனித்திருப்பீர்கள். பெங்களூரிலே கூடிய முதல்வர்கள் மாநாட்டிலேயும், அதைத் தொடர்ந்து ஹைதராபாத்திலே கூடிய மாநில முதல்வர்கள் மாநாட்டிலேயும், அதற்குப் பின்னாலே அண்மையிலே காஷ்மீரில் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயும் இந்தத் தத்துவம் மிக விரிவாக விளக்கமாக விவாதிக்கப்பட்டதை நாம் எல்லோரும் உண்மையிலேயே மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். காரணம் இந்தத் தத்துவத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் முதன் முதலாக அறிமுகப்படுத் தியவர்கள், இதற்காக வரலாற்றிலேயே முதன் முதலாக ராஜ மன்னார் குழு அமைத்தவர்கள் என்ற பாரம்பரியத்தைச் சேர்ந்த வர்கள் நாங்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றைக்கு இந்தியாவின் பூகோள அமைப்பை நீங்கள் பார்ப்பீர்களேயானால் அது ஒரு துணைக்கண்டம். ஆகவே, இயற்கையின் கட்டாயம் மாநில சுயாட்சியை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. இயற்கையின் அடிப்படை பிரிவிலேயே மாநில சுயாட்சியை உடனடியாக வழங்கவேண்டும் என்ற கட்டாயம் இருப்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள், 'தூர இருக்கும் டெல்லி' என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

Distant Delhi. ஆகவே தூர இருக்கிற டெல்லி எதையும் செய்யமுடியாது. சாதிக்க முடியாது. குறைகளை உடனடியாக போக்கமுடியாது. உணர்ச்சிகளை புரிந்துகொள்ள முடியாது என்ற அடிப்படையில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் சொன்ன கருத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டிஅவர்கள் சொல்கிறார்,

The vastness and diversity of the country make it almost impossible for a Central authority in Distant Delhi to deal with the multi farious problems, in different parts of the country promptly and efficiently.

தூரத்தில் இருக்கக்கூடிய டெல்லி நம்முடைய பிரச்சினைகளை விரைவாகவும், திறமையாகவும் முடிக்கமுடியாது என்பதை குடியரசுத் தலைவராக இருந்த சஞ்சீவ ரெட்டி அவர்களே குறிப்பிட்டிருப்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, பெடரலிஸம் அல்லது மையத்திலிருந்த இவ்வளவு பெரிய துணைக் கண்டத்தை ஆட்சி செய்ய முடியாது என்பதை அரசியல் பண்டிதர்கள் பல பேர் வலியுறுத்தியிருக்கிறார்கள். மொழிவாரி மாநிலங்கள் உருவான பிறகு ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தன்மை (individual) Personality ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் மாநில சுயாட்சி வேண்டாமென்று சில பேர் கூறுகிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்க விரும்புகிறேன். மாநில சுயாட்சி தராவிட்டால் வேறு என்ன ஆல்டர்னேடிவ். அதற்குக் கிடைக்கக்கூடிய மாற்றுத்திட்டம் என்ன என்பதை அவர்களால் சொல்ல முடியுமா?

அதோடு மட்டுமல்ல. நான் தொடக்கத்திலே குறிப்பிட்டதை போல இந்தியாவிலேயே முதன் முதலாக ராஜமன்னார் குழு அமைக்கப்பட்டது. பி. வி. ராஜமன்னார் சிறந்த சட்ட மேதை, ஏ. எல். முதலியார் சிறந்த கல்வியாளர். பி. சந்திர ரெட்டி, அவரும் ஒரு சிறந்த சட்ட மேதை. எந்தக் கட்சியிலும் அவர்கள் சேராதவர்கள், நடுநிலையாளர்கள், மேதைகள். அவர்கள் கொடுத்த அறிக்கை it is a Bench work. ஆக ஒரு மகத்தான சாதனை என்று சொல்லக்கூடிய அளவுக்கு மாநில சுயாட்சி வரலாற்றில் ஒரு மைல் கல் என்று எல்லோரும் பாராட்டக் கூடிய அளவிற்கு it is a starting point in the Indian Sub-continent. என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஆனால் அந்தக் குழுவின் அறிக்கை-ஏ. எல். முதலியார், பி. வி. ராஜமன்னார், சந்திரா ரெட்டி அவர்கள் கொடுத்த குழுவின் அறிக்கை-போதாது, அதிகம் தேவை என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து. ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கையைப் பரிசீலித்து அதன் மீது பரிந்துரை வழங்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழு 1971-ஆம் ஆண்டு





கோவையிலே கூடிய போது அது ஒரு துணைக் குழுவை நியமித்தது. முரசொலி மாறன், இரா. செழியன் தலைமையிலேயும், ஒரு துணைக் குழுவை நியமித்தது. அந்தக் குழுவில் நானும் உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றேன். இதுவரையில் ராஜமன்னார் குழுவினர் அளித்த பரிந்துரைகளே போதாது. ஆனால் இருக்கும் சூழ்நிலையையும், நாட்டின் ஒற்றுமையையும் மனதில் வைத்து, அவர்கள் அந்த அறிக்கையை கொடுத்தார்கள். அவர்கள் மூவரும் நடுநிலையாளர்கள், வல்லுநர்கள், நேர்மையானவர்கள், Cream of intelligence of Tamil Nadu.

தமிழகத்தினுடைய அறிவுத் திரட்சி அவர்கள். அந்தக் குழுவிற்கு ஏட்டிக்குப் போட்டியாக இப்போது ராமபிரசாத் ராவ் குழுவை நீங்கள் அவசரம் அவசரமாக நியமித்திருக்கிறீர்கள். இது எதைக் காட்டுகிறது? என்ன நோக்கம் இதற்கு? போட்டி உணர்ச்சியைத் தவிர, பொறாமை உணர்ச்சியைத் தவிர, மாநில சுயாட்சிக்காக ராஜமன்னார் தலைமையிலே அமைத்திருக்கக் கூடிய அந்தக் குழு வரலாற்றுச் சிறப்புமிக்க புகழ் எய்திவிட்டால், அந்தப் புகழ் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கும் அதனுடைய தலைவருக்கும் சென்றுவிடும் என்ற உணர்ச்சியே தவிர, வேறு எந்த நோக்கம் இந்தக் குழுவிற்கு இருக்கமுடியும் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த மாநில சுயாட்சி தீர்மானத்தை எதிரே இருப்பவர்கள் எதிர்த்தார்கள். ஏட்டிக்குப் போட்டியாக ராமபிரசாத் ராவ் குழுவை அமைக்கிறீர்களே இதிலே என்ன அர்த்தம் இருக்கும் என்று நான் கேட்கிறேன்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கைக்கு ஏட்டிக்குப் போட்டியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இப்போது ராம்பிரசாத் ராவ் அவர்களுடைய குழு அமைக்கப்படவில்லை. இங்கேயே இதுபற்றிப் பேசுகின்ற போது ராஜமன்னார் குழுவிலே கொடுக்கப்பட்டிருக்கிற பரிந்துரைகள், மற்றவைகளை எல்லாம் அடிப்படையாக வைத்துத் தான்—இங்கே பேசும்போதுகூட நான் சொன்னேன்—மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற போது ராஜமன்னார் குழுவிலே இருக்கிற அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிற பரிந்துரைகள் போதாது என்ற கருத்து, அதற்குப் பிறகு, திரு. செழியன் அவர்களை, திரு. மாறன் அவர்களை வைத்து ஒரு அறிக்கையை தி.மு.க. தயாரித்தது என்று எல்லாம் கூறினார்கள். ஆகவே இப்போது அமைக்கப்பட்டிருக்கிற ராமபிரசாத் ராவ் குழுவும்கூட ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கை, அதற்குப் பிறகு, செழியன், மாறன் மற்றவர்கள் கொடுத்திருந்த இந்த அரசி

சார்பாக வெளியிட்ட அறிக்கை ஆகிய அத்தனையும் வைத்து, இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப மேற்கொண்டும் ஆராய்ந்து நல்லதொரு அறிக்கையைக் கொண்டுவருவதற்காக, நல்ல முறையிலே பயன்படுகின்ற வகையிலே அறிக்கை அமைய வேண்டும் என்பதற்காகத்தான் ராமபிரசாத் ராவ் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை நாம் அமைத்திருக்கிறோமே தவிர, இது ஏற்கனவே அமைந்திருக்கிற சர்க்காரியா கமிஷனுக்கு இந்த மாநிலத்தில் சார்பாக கொடுப்பதற்கும், அப்படியே இந்த ராம் பிரசாத்ராவ் பரிந்துரையின் அறிக்கை வருகின்றபோதுகூட இந்த அறிக்கையினுடைய பரிந்துரைகளை எல்லாம் வந்ததற்குப் பிறகு இது பற்றி இந்த அரசு ஆராய்கின்ற சூழ்நிலைகள் ஏற்படும்போது. இந்த அவைக்கும் ஆராய்கின்ற தன்மைகளும் அறவே பரிந்துரை செய்கின்ற சூழ்நிலை ஏற்படும். அதற்குத் துணை செய்கின்ற ஒன்று என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, ஏட்டிக்குப் போட்டி என்று எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். வி. என். சோமு:** தலைவர் அவர்களே, இப்போது அவை முன்னவர் அவர்கள் சொல்லுகின்ற எண்ணம் அவருக்கு இருக்குமானால் அந்தக் குழுவை நியமித்தபோதே, ஏற்கனவே அமைக்கப்பட்ட ராஜமன்னார் குழுவினுடைய பரிந்துரையைத் தொடர்ந்து, அதற்குத் துணையாக மேலும் பரிந்துரைகளை வழங்க இப்போது ராம்பிரசாத் ராவ் குழு அமைக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருந்தால் உண்மையிலேயே நாங்கள் எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருப்போம்.

அது மட்டுமல்லாமல், ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கை புத்தகம் நகல் இப்போது கிடைப்பதில்லை, பல பாராளுமன்ற உறுப்பினர்களும், கேட்கிறார்கள். வழக்கறிஞர்கள் கேட்கிறார்கள்; அரசியல் சிந்தனையாளர்கள் கேட்கிறார்கள்; அதை வேறு யாரும் அச்சிட்டு அளிக்க முடியாது. இந்த அரசாங்கமோ, அல்லது அவை முன்னவரோ தயவுசெய்து அச்சடித்து எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் இந்த ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கையை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், இங்கே பேசும்போது. மேலும் அதை விரிவாகச் செய்வதற்காகத்தான். ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கையை விரிவாக்கம் செய்வதற்காகத்தான் நாங்கள் இதை அமைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நல்ல எண்ணம் இருக்கும்போது இந்த அமைச்சரவையின் சார்பிலோ அல்லது ஆளும் கட்சியின் சார்பிலோ ஐதராபாத்திலே நடந்த மாநாட்டிற்கு பிரதிநிதிகளை அனுப்பி இருக்கலாம். காஷ்மீர் மாநாட்டுக்கு யாரையாவது அனுப்பியிருக்கலாம். இந்திய துணைக் கண்டத்திலே மாநில சுயாட்சி குறித்து அரசியல் அலை வீசுகின்ற நேரத்திலே தங்களுடைய சிந்தனையை, கண்ணோட்டத்தை. ஆனால் கட்சியினுடைய எண்ணத்தைச் சொல்வதற்கு அவர்கள் ஏன் பங்கேற்கவில்லை?





மாநில சுயாட்சி கொள்கையிலேயும் இலங்கைத் தமிழர்கள் பிரச்னையிலே குழப்புவதைப்போல் இதிலேயும் ஒரு போட்டி உணர்ச்சி ஏற்படுத்த வேண்டாம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஐதராபாத் மாநாட்டிற்கோ அல்லது காஷ்மீர் மாநாட்டிற்கோ செல்லாத உண்மையான காரணம் என்ன என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் அதை ஆளும் தரப்பிலே இருந்து விளக்கினால் அது எங்களுக்கு நன்மையாக இருக்கும். ஆனால் ஏன் செல்லவில்லை என்றால், நீங்கள் டெல்லிக்குப் பயந்துதான் போகவில்லை என்பதை மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதனுடைய பொருளாளர், சாதிக்பாட்சா அவர்களும் தி.மு.க நாடாளுமன்றக் குழுவின் தலைவர் சி. டி. தண்டபாணி அவர்களும் அந்த மாநாட்டிலே கலந்துகொண்டு திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சார்பாக தங்களுடைய கருத்துக்களை அழகான கருத்துள்ள நான் எடுத்துக் காட்டும் இந்த அறிவுப் புத்தகத்தின் மூலமாக காஸ்மீர் மாநாட்டிலே தரப்பட்டு, காஷ்மீர் மாநாட்டிலே நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சில கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அவர்களும் ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள் என்பதை நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ராஜமன்னார் குழுவிற்குத் துணையாக நியமிக்கப்பட்ட மாறன் குழு திட்டவட்டமான ஒரு கருத்தினை தெரிவித்திருக்கிறது,

National Unity and provincial autonomy must not be thought of as competitors for the citizens allegiance for.

அதாவது தேச ஒற்றுமையோ அல்லது மாநில சுயாட்சியோ குடிமக்களுடைய கடமைக்கும், தன்மைக்கும், விரோதமாக இருக்கும் என்று கருதக்கூடாது என்பதை மாறன் குழுவினர் அறிக்கை தயாரித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

They are but two faces of the same thing, the same federal system.

மாநில சுயாட்சியும் யூனிலேட்டரல் சிஸ்டம் என்பதும், ஒன்றுக்கொன்று முரண்பட்டது அல்ல என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்னொன்றையும் நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது, பி. என், ராவ் அவர்கள்தான் அரசியல் நிர்ணய சபையில் மிகவும் தெளிவாக உட்கார்ந்து இந்தச் சட்டம் யூனிலேட்டரலாக இருக்கவேண்டுமா, பெடரலாக சட்டசபை என்பது இருக்க வேண்டுமா, என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியவர். அவர் எழுதிக் காட்டினார்.

india must be a federation.

பி. என். ராவ் அவர்கள் மிகத் தெளிவாக India shall be a federation என்று குறிப்பிட்டு எழுதிக் காட்டினார்கள். பி. என். ராவ் அவர்களுடைய கருத்து அப்போது இருந்த சூழ்நிலையில் பரிசீலிக்கப்படவேயில்லை.

அதற்குக் காரணம் இந்திய அரசியல் நிர்ணய சபையிலே மதிப்பிற்குரிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், ராஜேந்திர பிரசாத் அவர்களும் மற்ற பெருந்தலைவர்களும் சேர்ந்துக்கொண்டு, பி. என். ராவ் அவர்களின் குரலை அடக்கி விட்டார்கள் அதனாலே 'Federation' கூட்டாட்சி என்ற சொல் நீக்கப்பட்டு, ஒற்றை ஆட்சி Unitary என்ற சொல் சேர்க்கப் பட்டது. அரசியல் நிர்ணைய சபையே சரியாக இயங்கவில்லை என்றுதான், அரசியல் நிர்ணய சபையிலே சரியாக விவாதிக்கவே இல்லை என்றுதான் பல பெரும் தலைவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், ஜெயப் பிரகாஷ் நாராயணன் அவர்கள், அகில இந்தியத் தலைவர் சர்வோதயத் தலைவர், இந்திய விடுதலை அடைய பாடுபட்ட திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள். அரசியல் நிர்ணயச் சபையைப் பற்றி. இந்திய கான்ஸ்டிடியூஸனல் சட்டத்தை, இந்திய அரசியல் சட்டத்தை, உருவாக்கிய, அரசியல் நிர்ணயச் சபை, தேர்ந்தெடுக்கப்பட்ட, மிகவும் வரையறுக்கப்பட்ட ஒரு சபை என்று ஜெயப்பிரகாஸ நாராயணன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தச் சபையிலே உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம் எப்படி எல்லா மாநிலங்களுக்கும் பரவலாக அதிகாரத்தைக் கொடுக்கமுடியும் என்று சிந்திக்க வேண்டும் என்று இந்த அவையைக் கேட்கிறேன்.

அதுமட்டும் அல்ல. சர்ச்சில் இங்கிலாந்து நாட்டு பிரதமராக இருந்தவர்—அவர் அதைப்பற்றிச் சொல்கிறார். "இந்தியாவில் இருந்த ஒரு பெரிய வகுப்பினர் மட்டும் இடம் பெற்ற சபைதான் அந்த அரசியல் நிர்ணயச் சபை அதிலே எல்லோருக்கும் பிரதி நிதித்துவம் இல்லை" என்று சர்ச்சில் அவர்கள் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள், அத்தோடு சைமன் கமிஷனின் தலைவர் சொல்கிறார்–அது இந்துக்களின் சபை, இன வெறியர்களின் இந்து மதத்தைப் பின்பற்றியவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே இருக்கக்கூடிய சபை' என்று சைமன் அவர்கள் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள்.

அத்தோடு மட்டும் அல்ல. அந்த சபைக்கு தலைமை தாங்கி நடத்திய ராஜேந்திர பிரசாத் அவர்கள் எப்படி நடந்து கொண்டார் என்பதை, புகழ்பெற்ற தலைசிறந்த சட்ட மேதையும், வழக்கறிஞருமான அல்லாடி கிருஷ்ணசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ராஜேந்திர பிரசாத் அதைப்பற்றி அவர் கூறியதாவது;" அவ்வப்போது சபை நடவடிக்கைகளில் அவர் குறுக்கிட்டார். அரசியல் சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளில் தன்னுடைய கருத்துக்களை கூறினார். உப்பு வரிச்சட்டம் பரிசீலிக்கப்படும்போது, அவைத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் அவர்கள் உறுப்பினர்கள் எப்படி வாக்களிக்க வேண்டு மென்று சபை அங்கத்தினர்களை நிர்ப்பந்தித்தார்' என்று குறிப் பிடுகிறார்.



இந்தியை ஆட்சி மொழியாக்கும் பிரச்னையில் ராஜேந்திர பிரசாத், தலைவர் என்ற தம்முடைய தகுதிக்குரிய ஓட்டைப் போட்டு–காஸ்டிங் வோட்டு என்று சொல்வார்களே, நம்முடைய அவை முன்னவர் நாவலர் அவர்கள் கூட பல கூட்டங்களில் அதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அப்படி இந்தி மொழி ஆட்சி மொழியாக ஆகும் பிரச்னையில் ராஜேந்திரபிரசாத் அவர்கள் தம்முடைய காஸ்டிங் வோட்டைப் போட்டு, இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஆக்கிய காரணத்தினால்தான், உப்பு வரிபோன்ற பல சட்டங்களின் மீது ராஜேந்திர பிரசாத் தம்முடைய கருத்தை, அன்றைய அகில இந்திய அரசாங்கத் தினுடைய கருத்தை வழி நடத்திச் சென்ற காரணத்தினால்தான், அப்படிப்பட்ட அரசியல் நிர்ணயச் சபையினால் உருவாக்கப் பட்ட சட்டம், நமக்கு போதுமான பாதுகாப்பை அளிக்க வில்லை. எந்த அதிகாரமும் இல்லை.

ஆகையினால்தான் அதிக அதிகாரம் வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகிறது. வற்புறுத்து கிறது. அது மட்டும் அல்ல. அரசியல் நிர்ணயச் சபையிலே உறுப்பினராக இருந்த சேட் தாமோதர பருத் என்பவரும், மௌலானா ஆஸாத் மிலானி என்பவரும், அரசியல் நிர்ணயச் சபையில் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம், வயது வந்த வாக்காளர்களால் புதியதாக தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அரசியல் நிர்ணய சபையால் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவைகளையெல்லாம் பரிசீலிப்பதே பாவம் என்று பலர் கருதினார்கள். அதனுடைய விளைவு, இன்றைக்கு 36 ஆண்டுகள் ஆகியும் கூட, இன்றைக்கு மீண்டும் மாநில சுய ஆட்சி தத்துவத்தை விமர்சிக்கின்ற அளவுக்கு, அரசியல் சட்டம் தேவைதானா என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கும் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம், நிலைமையும் வந்திருக்கிறது.

இந்திய அரசியல் சட்டம் குடும்பங்களுக்கு ஒன்றும் தர வில்லை. இதை நான் சொல்லவில்லை. சொல்வது லோகநாத் மிஸ்ரா என்கிற அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்—ஒரு வட நாட்டு அறிஞர். அவர் சொல்கிறார், இந்திய அரசியல் சட்டம் குடும்பங்களுக்கும் ஒன்றும் தரவில்லை: கிராமங்களுக்கும் ஒன்றும் தரவில்லை, மாவட்டங்களுக்கும் ஒன்றும் தரவில்லை, மாநிலங் களுக்கும் ஒன்றும் தரவில்லை. எல்லாம் மத்திய அரசுக்கே தரப்பட்டுவிட்டன என்று லோகநாத் மிஸ்ரா அவர்கள் அரசியல் நிர்ணயச் சபையிலேயே கூறியிருக்கிறார்கள், என்றால்,

அப்படிப்பட்ட அரசியல் நிர்ணயச் சட்டம் நமக்கு தேவையா அதை மாற்ற வேண்டுமா, வேண்டாமா மற்ற மாநிலங்களுக்கும் அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அது மட்டும் அல்ல, மாநில சுய ஆட்சி கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் தான் கேட்கிறார்கள் என்று அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், ஆகிய அவர்கள் இரண்டு பேர்களும் தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்கிறார்கள், கேட்டிருக்கிறார்கள் என்பது இல்லை. மறைந்த கண்ணியம் மிக்க பெருந்தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களும் அதற்கு விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். Ours is a vast country of great distances and huge population. How ever much the centre may be anxious to accord uniform treatment to the various parts of the country still in the very nature of things there will be drawbacks and shortcomings. It will naturally lead discontent and conflict. It is for this reason that political thinkers have been of the view that a federal type of Government is more suitable than anything else for such a country as ours. I say that the federal system is more suited to the conditions of our country than unitary type, அகில இந்திய முஸ்லீம் லீக்கின் தலைவர், அரசியல் சட்ட நிர்ணய சபையிலே உறுப்பினராகவும் இருந்தவர் சொல்லியிருக்கிறார்கள். காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் சொல்லியிருக்கிறார்கள், நம்முடைய நாட்டிற்கு இந்தியத் துணைக் கண்டத்திற்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கிற நேரத்திலே நமக்குத் தேவை பெடரேஷன் தான், கூட்டாட்சி தான், யூனிட்டரி பார்ம் ஆப் கவர்ன்மெண்ட் அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

மாநிலங்கள் மத்திய அரசாங்கத்திடம் மடியேந்தி பிச்சை கேட்கிற முறையில், தெரு பிச்சைக்காரன் பிச்சை எடுப்பதைப் போல் இருக்கின்றன என்று திரு. ஏ. எல். முதலியார் முதற்கொண்டு பல அறிஞர் பெருமக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ராஜமன்னார் குழு அறிக்கையில் உள்ள இரண்டு உண்மைகளை நாம் மறந்துவிடக் கூடாது. இதை பல வெளிநாட்டுப் பத்திரிகைகள்கூட எழுதி இருப்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். The first of these two quotations is from p.239 of the 1971 report of the Centrel State Relation Committee appointed by the Tamil Nadu Government of which three distinguished persons, Thiru Rajamannar Dr. Lakshmanaswami Mudaliyar and Thiru Chandra Reddy were the Members. "It says, each of the two Governments, Centre and State must have power to raise financial resources necessary to perform its exclusive functions.





The powers of the respective Governments should be independent of each other for if the State Government have to depend substantiallyupon the Central bounty, they might indirectly bedeprived of their autonomy in other matters''. என்று சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தை நிதி மற்ற பிரச்சினைகளுக்காகவும் எதிர்நோக்கி இருக்கிற காரணத்தினாலே நம்முடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அந்தக் குழு அளித்த அறிக்கை நல்ல தரமான, முக்கியமான, தேவையான அறிக்கை என்ற அளவிற்கு தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தின் அட்டார்னி ஜெனரலாக இருந்த செதல் வாட் அவர்கள் மிகச் சிறப்பாக அதைபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "A special Finance Enquiry Commission or the next Finance Commission may examine the question of widening the base of devolution and of prescribing the shares of divisible taxes in the Constitution itself (instead of subjecting them to quinquennial revision by successive and hoc Finance Commission)'' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மாநிலங்களுக்கு இன்ன இன்ன துறைகளிலே நிதி அதிகாரங்கள் உண்டு என்பதையும் மத்திய அரசாங்கத்திற்கு எந்த எந்தத் துறையிலே அவைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பதைப் பற்றித் தீர்மானிக்க ஒரு குழுவை அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்து திரு. கே. சந்தானம் அவர்கள், ஆளுநராக இருந்தவர்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே அமைச்சராகவும் இருந்தவர்கள் அவர்கள் மிகக் கடுமையான வார்த்தைகளிலே சொல்கிறார்கள். Without a definite freedom and initiative no economic issues, State Governments are bound to frustrated and impotent என்று சொல்லியிருக்கிறார்கள், 'இம்போடன்ட்' என்ற வார்த்தையை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிதி வசதிகளைப் பொறுத்தவரையில் மாநில அரசுகளுக்குச் சரியான அதிகாரங்கள் வழங்கப்படாத சூழ்நிலையில் மாநில அரசுகளுக்கு எரிச்சல் மட்டுமல்ல, ஆண்மையற்ற அரசுகளாகவே இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள்.

கூட்டாட்சித் தத்துவமே சிறந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற முறையிலே திரு. கே. சி. வீர் மிக நல்ல முறையிலே சொல்லியிருக்கிறார்கள். It is not enough that the Central Government should be able to finance itself. It is essential also that the Regional Governments should be able to do likewise என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்கு மட்டும் நிதிகளை வசூலிப்பதற்காக நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கான அதிகாரங்கள் இருந்தால் போதாது, மாநிலங்களுக்கும் அந்த அதிகாரங்கள் தேவை என்பதை அருமையாக அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மாநிலங்கள் வலிவிழந்து காணப்படுவதற்குக் காரணம் — தமிழ்நாடு மட்டுமல்ல; அண்டையில் உள்ள ஆந்திர மாநிலமாக இருந்தாலும், கேரள மாநிலமாக இருந்தாலும், கர்நாடக மாநிலமாக இருந்தாலும், வட மாநிலங்களாக இருந்தாலும் — 3 காரணங்கள் இருக்கின்றன. முதல் காரணம் மாநிலங்களுக்கு இருக்கின்ற பொறுப்புகளுக்கு ஏற்ப நிதி ஆதாரங்கள் வழங்கப்படவில்லை, ஆகவே, தங்களுடைய மாநிலங்களுக்காக மத்திய அரசை அவ்வப்போது மானியங்கள் எதிர்பார்க்கும் நிலை இருப்பதால் மாநிலங்கள் நிதிநிலைமை கடினமாகவும், கலங்கக்கூடிய வகையிலும் இருக்கிறது. இரண்டாவதாக திட்டக்குழு 'பிளானிங் கமிஷன்' பல்வேறு ஐந்தாண்டு திட்டங்களை இட்டும்போது மாநிலங்கள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள மத்திய அரசின் தயவை எதிர்பார்க்கவேண்டி உள்ளது. மூன்றாவதாக காங்கிரஸ் கட்சி தொடர்ந்து 30 ஆண்டு காலமாக மத்தியிலும், மாநிலங்களிலும் ஆண்டு வருவதாலும் அவ்வப்போது ஏற்படும் சிற்சில மாற்றங்களைத் தவிர தொடர்ந்து 30 ஆண்டு காலமாக மத்தியிலும், மாநிலங்களிலும் ஆண்டு வருவதால் மத்திய மாநில உறவுகள் என்பது ஒரு கட்சியின் தலைவர் விவகாரமாக மாறி ஆழ்ந்து சிந்திக்கும் தன்மையை தவற விட்டுவிட்டது என்ற 3 காரணங்கள் ஆகும். இந்த குறைப்பாடுகளை நீக்கவேண்டும் என்பதற்கு தான், ஆராயவேண்டும் என்பதற்கு தான் ராஜமன்னார் குழு தன்னுடைய பரிந்துரைகளை தெரிவித்து இருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு தெரியாமல் அரசியல் திட்டத்தில் அனுமதி இல்லாமல் கொஞ்சம் கொஞ்சமாக தொழிற்சாலைகளை அமைக்கக்கூடிய உரிமைகளை மத்திய அரசு எடுத்துக்கொண்டது. எல்லா மாநிலங்களும் இதை கண்காணிக்காமல் விழித்து இல்லாமல் உறங்கிவிட்டதாக புகழ்ப் பெற்ற சட்ட வல்லுநர் பல்கிவாலா அவர்கள் மிக வருத்தத்தோடு தெரிவித்து இருக்கிறார்கள். Without any amendment to the Constituti n அரசியல் சட்டத்தை திருத்தாமல் மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய தொழிற்சாலை அமைக்கக்கூடிய அந்த உரிமைகளை அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டதை திரு. பல்கிவாலா அவர்கள் மிக வேதனையோடு Without any amendment to the constitution, Industries have been nefariously transformed into a Union subject and has ceased to be a State subject. அரசியல் சட்டம் இல்லாமல் நம்மை எல்லாம் ஆளக்கூடிய இந்திய துணைக் கண்டம் அரசியல் சட்டம் திருத்தம் கொண்டு வராமலேயே நம்முடைய பொறுப்புகளை நமக்கு இருக்கக்கூடிய தொழிற்சாலை அமைக்கும் அதிகாரங்களை எடுத்துக்கொள்கிறது என்பதை இதைவிட தெளிவாக யாராலும் சொல்லமுடியாது. Today atleast 93 percent of organised industries in terms of the value of output have been brought under the bailiwick of the Union. இன்றைக்கு 93 சதவீதம் தொழில்கள் வழங்கக்கூடிய உரிமைகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டு இருக்கிறது என்பதை பல்கிவாலா சொல்லி எந்த எந்த தொழில்களை அப்படி அரசியல் சட்டத்தின் அதிகாரங்கள்



எல்லாம் எடுத்துக்கொண்டார்கள் என்பதை பல்கிவாலா விளக்கமாக சொல்கிறார். Even items like razor சவரம் செய்யும் கம்பி, blades பிளேடுகள், paper காகிதம், பசை, தீக்குச்சி, gum, match sticks, வீட்டுக்குத் தேவையான மின்சார சாதனங்கள், household electrical appliances வாசனைப் பொருட்கள், cosmatics சோப்புகள் முதலியன soaps and other toilet requisites துணிகள் மற்றும் காலணிகள் fabrics and foot wear, pressure cookers, cutlery steel, furniture, zip, fasteners, hurrican lanterns, bicycles, dry cells, TV sets, agricultural implements have all been brought under the Centres control. இப்படி எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் சட்டத்தின் அதிகாரம் இல்லாமலேயே அரசியல் சட்ட உரிமைகள் இல்லாமலேயே இவைகள் எல்லாம் மெல்ல மெல்ல நமக்குத் தெரியாமலேயே மாநிலங்களுக்குத் தெரியாமலேயே எடுக்கப்பட்டு விட்டன என்பதை திரு. பல்கிவாலா அவர்கள் கூறியிருக்கிறார்கள். There can be no doubt that this is an indefensible violation of the constitution. அரசியல் சட்டத்தை, பதில் சொல்ல முடியாத அளவுக்கு, தற்காப்புகள் சொல்லமுடியாத அளவுக்கு மத்திய அரசு மீறியிருக்கிறது என்று திரு. பல்கிவாலா குறிப்பிட்டு மேலும் சொல்கிறார் It is imperative that the States should regain their legitimate powers over industries and commerce. It is imperative இது மிக முக்கியமானது. இழந்துவிட்ட அதிகாரங்களை மாநிலங்கள் மீண்டும் திரும்பப் பெறவேண்டும் என்று பல்கிவாலா சொல்கிறார்கள் என்றால் இங்கு இருக்கக்கூடிய எல்லா அரசியல் கட்சி நண்பர்களுக்கும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் திரு. பல்கிவாலா திராவிட முன்னேற்றக்கழகத்தை சேர்ந்தவர் அல்ல. இன்றைக்கு அகில இந்திய அரசியல் சட்ட மேதைகளில் ஒருவராக இருந்து இன்னும் சொல்லப்போனால் அவ்வப்போது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு தன்னுடைய ஆலோசனைகளை வழங்கக்கூடிய ஒரு வழக்கறிஞராக இருக்கிற அவரே சொல்கிறார். மத்திய அரசு 93 சதவிகிதம் தொழில் செய்யும் உரிமைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது என்றால் இதற்கு எப்படி நாம் நிவாரணம் காணப்போகிறோம். எப்படி இழந்த அந்த உரிமைகளை மீண்டும் பெறுவது என்பது நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன், திரு. பல்கிவாலா மேலும் சொல்கிறார் Survival of our democracy and the unity and integrity of the nation depend upon the realisation that constitutional morality is no less essential than constitutional legality. இந்திய அரசியல் கூட்டத்தை சட்டப்படி மட்டுமல்லாமல் மனச்சாட்சி ஒழுக்கத்தின்படியும், மதித்து நடக்க வேண்டுமென்பதே அவரின் கருத்தாகும் என்பதை அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்கு நம்முடைய அண்டை மாநிலங்களில், தொழிற்சாலை இல்லை, வருமானம் இல்லை, நிதி வசதி இல்லை என்றால், மத்தியிலே இருக்கக்கூடிய அதிகாரங்களைச் சட்டத் திருத்தம் கொண்டு வந்து எடுப்பது என்பது வேறு. சட்டத் திருத்தம் கொண்டு

வராமலேயே, மெள்ள, மெள்ள பிடுங்கிக் கொள்வதைப்பற்றி என்பது வேறு. காஷ்மீரிலோ அல்லது விஜயவாடாவிலோ அல்லது பெங்களூரிலோ அல்லது வேறு எந்த நகரிலோ நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டிலோ அல்லது எதிர்க்கட்சிகள் மாநாட்டிலோ, சிந்தனை அலை எழுந்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–10)

அதே போன்று 356-வது ஷரத்து; கண்ட நேரத்தில் கண்ட அரசாங்கங்களை மத்திய அரசு கலைப்பது என்ற ஒரு அதிகாரம் அதில் உள்ளது. அது தேவையற்ற கொள்கை என்பதை நாடாளுமன்றத்திலே எங்கள் குழு உறுப்பினர்—தலைவர் திரு. முரசொலி மாறன் தீர்மான வடிவிலே கொண்டு வந்தார்கள். 356-வது ஷரத்தை அரசியல் சட்டத்திலேயிருந்து நீக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தபொழுது, இங்கே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, அங்கே இருக்கிற பிரதிநிதிகள் அந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள். இது தேவையற்ற ஒரு செயல் என்பதை நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 356-வது ஷரத்து (Democles sword) 'டாமக்கில்ஸ் ஸ்வார்ட்' மாதிரி கத்தியாக மாநில அரசுகளின் தலைமீது தொங்கிக் கொண்டிருக்கிறது. நாளைக்கே கூட மத்திய சர்க்கார் கொண்டு வரலாம். எந்த மாநில அரசாங்கமாக இருந்தாலும், மாநில சுயாட்சி கேட்ட காரணத்தினாலேயே கேட்பவர்களை மனதில் வைத்துக்கொண்டு வேறு காரணங்களைக்கூறி 356-வது பிரிவின்படி உடனடியாகக் கலைக்கலாம். காஷ்மீரிலே கூடியவர்கள் கவர்னர் பதவி தேவையேயில்லையென்று சொன்னார்கள். நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாண்டுகளாக இந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறது. கவர்னர் என்பவர் மத்திய அரசாங்கத்தின் கங்காணியாக இருக்கிறார், அது எந்த கவர்னர் ஆக இருந்தாலும், ஒரு மாநில கவர்னர் மத்திய அரசாங்கத்தின் கங்காணி என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறார். கவர்னர் இல்லாமல் ஆட்சியை நடத்த முடியாதா என்றால் நிச்சயம் முடியும். மேற்கு ஜெர்மனியிலே கவர்னர் இல்லை. கவர்னர் இல்லாமல் மேற்கு ஜெர்மனியில் ஆட்சி நடக்கவில்லையா இன்னும் சொல்லப்போனால், இராஜமன்னார் குழு அறிக்கையிலே, கவர்னர் பதவியைக் குறிப்பிட்டு, The Office of the Governor is a legacy of the British colonial system. The method of appointment of the Governor as provided for in our Constitution makes it an anachronism in a democratic set up is a functionally appointed by and responsible to the Central Government and as such he could not be expected to understand the local conditions and the political situation. The expenditure incurred on the Office of the Governor does not seem to square with the socialistic pattern of society.



வெளி மாநிலத்திலிருந்து வரும் கவர்னரால் அந்த மாநில பிரச்னைகளை புரிந்து கொள்ள முடியாது என்பதோடு, அவர்கள் பதவிக்கு ஆகும் செலவும் மிக அதிகம் என்று குறிப்பிட்டு உள்ளார். கவர்னர் பதவி என்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினுடைய ஏஜண்டு என்பதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தொடக்க நாட்களிலே, 1949-50-ஆம் ஆண்டுகளில் இந்த கவர்னர் பதவி கூடாது என்பதை எடுத்துக்காட்டும்வகையில், யார் கவர்னராக இங்கே வந்தாலும் அவர்களுக்கு எல்லாம் கறுப்புக் கொடி காட்டி வந்தோம். ஜெகஜீவன்ராம் வந்தார்; அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினோம். ஜெயராம் தாஸ் தௌலத்ராம் கவர்னராக வந்தார். அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினோம். திவாகர் வந்தார்- அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினோம். பிஷ்ணுராம் மேதிவந்தார், அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினோம். கே. எம். முன்ஷி வந்தார். அவருக்குக் கறுப்புக் கொடி காட்டினோம். இப்படி கவர்னர்கள் வரும்போது, அந்த கவர்னர் பதவியே கூடாது என்புதை திராவிட முன்னேற்றக் கழகம் அந்த நாளிலிருந்து இந்த நாள்வரை கடுமையாக எதிர்க்கிறது. அன்றைக்குக் கேலி செய்தவர்கள், கிண்டல் பேசியவர்கள், கவர்னர் பதவி தேவை என்று வலியுறுத்தியவர்கள்——இன்றைக்கு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் எங்களுடைய உள்ளம் பூரிப்படைகிறது. அண்ணாவின் கொள்கைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைக்கு, ஏற்பட்டு வரும் வெற்றி குறித்து அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொல்வாரே slowly but steadily என்று மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக வெற்றி கிட்டுகிறது. கவர்னர் பதவி கூடாது என்று காஷ்மீரிலே கூடியவர்கள் பேசியிருக்கிறார்கள் என்றால், இராஜமன்னார் அவர்கள் தனது குழுவின் அறிக்கையில் மிகத்தெளிவாகக் குறிப்பிடுவதைப் போல், கவர்னர் பதவிக்காக நாம் செலவழிக்கின்ற, இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணம் சமதர்ம சமுதாயத்தை நாம் உருவாக்குவோம் என்பதற்கு முரணானதாக இருக்கிறது.

The expenditure is a wasteful one which could well be dispensed with. The Supreme Court in the year 1953, in Ram Shiv Bahadur Singh vs. State of Vindhya Pradesh has held that a Minister is an Officer subordinate to the Governor. இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் கவர்னருக்கு சபார்டினேட்டாக கீழ்ப்படிபவர்களாக இருக்கிறார்கள். கவர்னர் மத்திய அரசால் நியமனம் செய்யப்படுபவர். இங்கேயிருக்கிற முதலமைச்சராக இருந்தாலும், மற்ற அமைச்சர்களாக இருந்தாலும் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒருவர், நியமிக்கப்படுகிற ஒருவருக்கு சபார்டினேட்டாக, கீழ்படிந்து நடக்கக்கூடிய ஒருவராக இருப்பதை உச்சநீதிமன்றம் ஒரு வழக்கிலே சுட்டிக்காட்டியிருப்பதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு

மாநில சுயாட்சியை எப்படி வலியுறுத்துகிறோம் என்பது தான் முக்கியம். இருக்கிற அதிகாரங்களைக் கொண்டு வலியுறுத்துகிறோம். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற போது சேலம் உருக்காலையை ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்க மாட்டோம் என்று மத்தியிலே சொன்னார்கள். இதுபற்றி அன்றைய முதல்வர் எடுத்த முடிவிற்கு ஒரு நூலாசிரியர் பெரிய பாராட்டை சொல்லியிருக்கிறார்.

For instance, the D.M.K. in Tamil Nadu demanded that th union Government should set up a steel plant at Salam in Tamil Nadu. When D.M.K. came to power after the 4th General Elections it made efforts to get more financial help from the Centre for the development of theState the Tamil Nadu Chief Minister Dr. M. Karunanidhi gave an ultimatum to the Centre that unless it announsed finally and firmly its decision to set up a steel plant at Salem, his Government would refuse to give its consent to the4th plan document.

The Chief Minister said that the plan scheme would not yield the desired benefit if powers of formulating them and their implementation were concentrated in the hands of the Centre. He put his views mor plainly by demancing the abolition of the concurrent List in the Consi-titution and recastthe Consti ution in the light of the changed situation where the same Party was not in power at the Centre and in the State சேலம் உருக்காலைத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்காவிட்டால் தன்னுடைய அரசு நான்காவது திட்டத்தை ஒப்புக் கொள்ளாது என்று கலைஞர் திட்டவட்டமாக அறிவித்ததாக அந்த நூலாசிரியர் பாராட்டி உள்ளார். இன்னொன்றையும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். வீரேந்திர பட்டில் இன்றையதினம் மத்திய சர்க்காரிலே அமைச்சராக இருக்கிறார். மிகத் தெளிவாக, தைரியமாக ஒரு கருத்தை அவர் சொன்னார். இன்றைக்கு மத்திய அமைச்சர் அன்றைக்கு அவர் கர்நாடக மாநிலத்தில் அரசியல் தலைவராக இருந்தபோது அங்கே முதலமைச்சராக இருக்கிற போது ஒரு கருத்தைச் சொன்னார். "மாநில சுயாட்சி மாநிலங்களுக்கு வழங்கப்படாவிட்டால் டெல்லியிலே உள்ள மாநிலங்களின் அலுவலகங்கள் ஸ்டேட் பவன்ஸ் — தூதரகங்களாக மாறக்கூடிய நிலை உருவாகும்" அஞ்சா நெஞ்சோடு அப்பேற்பட்ட ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி வழங்காவிட்டால் டெல்லியிலே இருக்கிற ஸ்டேட் பவன்ஸ் எல்லாம் வெகு விரைவிலே தூதரகங்களாக மாறும் என்றால் என்ன அர்த்தம். கர்நாடகம் தனியாகவும், தமிழ்நாடு தனியாகவும், கேரளம் தனியாகவும், வட மாநிலங்கள் தனியாகவும் இருக்கும். அங்கே இருக்கக்கூடிய நம்முடைய மாநில அலுவலகங்கள் தூதுவர் அலுவலகங்களாக மாறும். கர்நாடகத்தின் சார்பிலே ஒரு தூதுவர் தமிழ்நாட்டின் சார்பிலே ஒரு தூதுவர் என்று அன்றைக்கு வீரேந்திர பட்டில் வீர முழக்கமிட்டாரே, அவர் இன்றைக்கு இந்திய யூனியனில் அமைச்சராக இருக்கிறார் என்பதை நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்களுடைய





கட்சியைப் பொறுத்தவரையில் மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்து மாநிலங்களின் மீது ஆதிக்கம் செலுத்தும்படியாக இருக்கக் கூடாது. "மாநில சுயாட்சி மத்திய அரசை பலப்படுத்துமே தவிர பலவீனப்படுத்தாது." என்ற தெளிவான கருத்தை 10 ஆண்டுகளுக்கு முன்னாலே இலண்டன் மாநகரில் எங்களுடையத் தலைவர் கலைஞர் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. மா. சின்னராசு):** பேச்சிலே சந்தேகம் ஏதாவது இருந்தால் கேட்கலாம்,

(பிற்பகல் 12-20)

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நடந்துபோன சம்பவங்கள் மாநில அதிகாரத்திற்குப் பயன் அளிக்காது என்ற விதத்தில்தான், இதற்கென்று கமிஷனே அமைக்கப்பட்டிருப்பதே தென் மாநில முதல்வர்கள் மாநாட்டை மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் கூட்டிய காரணத்தால் தான். எனவே, இனிமேல் நடக்கப்போகும் காரியங்கள் எப்படி இருக்க வேண்டும், இந்தக் கமிஷனுக்கு அவைகள் எப்படிப் பயனுள்ளதாக இருக்க வேண்டும் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. என். வி. என் சோமு:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் சொன்னதை மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினரவர்கள் கவனித்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன் என்ன ந க்க வேண்டுமென்றுதான். காஷ்மீர் மாநாட்டில் எங்கள் கட்சியின் சார்பில் இந்தப் புத்தகத்தில் குறித்து அனுப்பியிருக்கிறோம். இதிலே உள்ள முக்கியமான கருத்துக்களை நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரா ர்களுக்குத் தேவைப்படுமானால் இராஜமன்னார் குழு அறிக்கையையும், இந்தப் புத்தகத்தையும் அளிக்கிறேன், அவர்கள் ஆற அமர அமர்ந்து அவ ற்றைப் படித்துப் பார்த்துத் தெளிவு பெறட்டும்.

இந்தி மொழிப் பிரச்சினையை வைத்துக்கொண்டு, மாநில சுயாட்சிப் பிரச்னையைத் தடுத்து நிறுத்தி, நம்முடைய பிரச்னைகளை வளர விடாமல் தடுக்க நினைக்கிறார்கள். இந்தி மொழியை இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரப்பிவிட்டால் இந்தி பேசாத மக்கள் இரண்டாம்தர மக்களாக ஆகிவிடுவார்கள், அப்பொழுது அவர்கள் மாநில சுயாட்சி கேட்க முடியாத நிலைக்கு வந்து விடுவார்கள் என்ற வகையில் மாநிலத்தின் அதிகாரங்கள் குறைந்திருக்கின்றன.

மகாத்மா காந்தியடிகள் நமக்கு விடுதலை வாங்கித் தந்தவர். அவர் சொன்னார், இந்தப் பிரச்னையிலே நாம் எவ்வளவு பொறுமையாகவும், நிதானமாகவும், அமைதியாகவும் நடக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதை அவை உறுப்பினர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காந்தியடிகள் சொல்கிறார்கள்:

"What the Tamils have don in the struggle no other Indian comm-unity has done. So, I thought that if for no other reason than to show my sincsere gratefulness to them I should Seriously read their books. So, I spent the last months attentively studying their language. The more I studied the more I felt its beauties. It is an intere-sting and sweet language and from what I read I saw that the Tamils had, in their midst in the past and even now, many intelligent, clever and wise persons. Again if there is to be one nation in India those whc live outside the Madras Presidency must know Tamil.

இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமானால், ஒற்றுமைப்பட்ட நாடாக இருக்க வேண்டுமானால், சென்னை இராஜதானிக்கு வெளியே இருப்பவர்கள் (மெட்ராஸ் பிரசிடென்ஸி), அதாவது ஆந்திரம், கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகிய இந்த நான்கு மாநிலங்களுக்கும் வெளியே இருப்பவர்கள் தமிழைப் படிக்க வேண்டும், அதன்மூலம் இந்திய ஒற்றுமையை உருவாக்க முடியும் என்று காந்தியடிகள் சொன்ன அந்தக் கருத்துக்களை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது சர்க்காரியா கமிஷன் அமைத்ததைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர்கூட குறிப்பிட்டுக் கேட்டார், என்ன செய்ய வேண்டுமென்று, நாங்கள் சொல்லக்கூடிய இடத்தில் இருக்கிறோம், செய்யக்கூடிய இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள், அவை முன்னவர் நாவலர் அவர்களுடைய பாஷையில் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். The Opposition Party has its say, but the Ruling party has its way என்று. அதைப்போல நாங்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரும் இடத்தில் இருக்கிறோம்; ஆனால் செய்யக்கூடிய இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்.

மாநில சுயாட்சியைப் பற்றி ஏதாவது வாய் திறந்துவிட்டால் டெல்லியின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற அச்சமோ, பயமோ உங்களுக்கு ஏற்பட்டால் அந்தப் பயத்தைப் போக்குகின்ற வகையில், இந்திய உள்துறை அமைச்சர் திரு. பி.சி. சேத்தி அவர்கள் சொல்லிய கருத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்;

The Sarkaria Commission which is to review the Centre State relations, will not bebarred from considering Constitutional amendments and the State Governments will be free to make suggestions to th s effect. அரசியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று சர்க்காரியா கமிஷன் கருதினால் அது பரிந்துரைகளைச் செய்யத் தயங்காது என்று சேத்தி சொன்னார். எந்தெந்த வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று என்னென்ன யோசனைகளை மாநில அரசாங்கங்கள் வழங்க முடியுமோ அந்த வகையிலே சொல்வதற்கு மாநிலங்களுக்கு உரிமையிருக்கிறதுஎன்று இந்திய உள்துறை அமைச்சர் திரு பி. சி. சேத்தி அவர்கள்



சொல்லியிருக்கிறார்கள். அதை நீங்கள் மனத்திற்கொண்டு, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் நல்ல பரிந்துரைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில சுயாட்சி குறித்து இப்படிப்பட்ட குழுவை அமைத்தது என்பது, அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அவரது அறிவார்ந்த நிர்வாகத்தில் இத்தகைய பிரச்னைகளைத் தெளிவாகக் காண்பதற்கும், எதிர்காலப் பிரச்னைகளை எண்ணிப் பார்த்துச் செயல்பட்டதற்கும் சான்றாக அமைந்திருக்கிறது. இலட்சோப லட்சம் மக்களின் மனத்தில் இடம்பெற்ற மகத்தான தலைவர், மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்பது அவரது தணியாத தாகம், அவரது அர்ப்பண உணர்வு இந்திய வரலாற்றில் ஒரு சிறப்பான காலகட்டமாகும் என்று திரு. இராஜமன்னார் அவர்கள் அந்த அறிக்கையை அளிக்கும்பொழுது சொன்ன கருத்துக்களை இந்த மன்றத்திற்கு நான் காணிக்கையாக ஆக்க விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார், 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் பாதியை நான் தீட்டினேன். மீதியைத் தம்பி கருணாநிதி தீட்டுவார்'' என்று கலைஞர் அவர்களைப் பற்றிச் சொன்னார். அந்த அடிப்படையிலே மாநில சுயாட்சி என்ற அண்ணாவின் கொள்கையை, இலட்சிய தீபத்தை அணையாமல் பாதுகாத்துக்கொண்டிருக்கக்கூடிய கலைஞர் அவர்களுடைய கருத்துக்களை இந்த மன்றம் வலுப்படுத்தி, இத்தகைய தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மூலம் மாநில சுயாட்சித் தத்துவம் அகில இந்தியா முழுவதும் பரவி நாட்டு ஒற்றுமை ஏற்படுவதற்கு வழி கிடைக்கும். அந்த வகையில் நன்மைகள் ஏற்படுகின்ற வகையில் மாநில சுயாட்சித் தத்துவத்தை வலுப்படுத்த வேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: பேரவையின் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை என்ற கருத்தை வற்புறுத்தி நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே என்னுடைய சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்,

எனக்கு முன்னாலே இந்தச் சபையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகின்றபோது மாநிலங்களுக்கு அதிகாரங்கள் எந்த அளவுக்கு இன்னும் தேவை என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை என்ற கருத்தினை பல முறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லி இருக்கின்றது. அதுமட்டுமல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் தேவை என்று மத்திய அரசினிடத்திலே பல முறை வற்புறுத்தியதன் காரணமாகத்தான், விஜயவாடா மாநாட்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் இந்திய அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே கருத்துக்களைச் சொன்னதற்குப் பின்னால்தான் மத்திய அரசு மத்திய

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] 1983 அக்டோபர் 29

மாநில உறவுகளைப் பற்றி ஆராய்வதற்கான சர்க்காரியா கமிஷனை நியமித்திருக்கின்றது என்ற கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்த்து அதன்படி அவர்கள் சர்க்காரியா கமிஷன் நியமிக்கின்ற அளவுக்கு வற்புறுத்தியவரே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர் தான் என்பதை இந்த அவையிலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தேவை என்ற கருத்து தமிழ் நாட்டிலே இருந்துதான் ஆரம்பிக்கப்பட்டது என்ற உண்மையை இந்தியாவில் இருக்கின்ற அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள். தமிழக அரசும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மாநிலங்களுக்கு தற்போது இருக்கின்ற அதிகாரங்கள் போதாது என்று உண்மையிலேயே பல முறை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டி இருக்கின்றது. அது மட்டுமட்டுமல்ல. தமிழக அரசின் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் ஆதரவு வேண்டும் என்றும், மாநில அரசிற்கு அதிக அதிகாரங்கள் தேவை என்ற கருத்தை வலுப்படுத்துகின்ற வகையிலேயும் தக்க காரணங்களோடு மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டி இருக்கின்றது,

மாநிலங்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசின் கைப் பாவையாக மாறக்கூடாது என்ற கருத்து பல ஆண்டுகளாக வற்புறுத்தப்பட்டு வருகின்றது. மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் தேவை என்பதை நாம் பலமுறை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக விவசாய விளை பொருட்களின் விலையினை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மத்திய அரசினிடத்திலே இருப்பதன் காரணத்தால் தமிழகத்தைச் சேர்ந்த விவசாயிகள் பல இன்னல்களை அனுபவித்திருக்கிறார்கள் என்பதை பலமுறை தமிழக அரசு சுட்டிக்காட்டி இருக்கின்றது. ஒரு குவிண்டால் நெல்லின் விலை தற்போது 138 ரூபாய் என்று இருந்தாலும், இந்த அளவுக்கு விலையை உயர்த்துவதற்குக் கூட தமிழக அரசு எத்துணை முறை முயற்சித்தது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த அதிகாரம் மாநில அரசாங்கத்தின் பட்டியலில் இருந்தால், உரிய நேரத்தில், மக்களுக்குத் தேவையான விலையை தமிழக அரசால் கொடுக்க முடியும் என்ற உண்மையையும் இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 12–30)

வட இந்தியாவில் விளையும் கோதுமைப் பொருள்களுக்கு அங்கே கூடுதல் விலையை மத்திய அரசு கொடுக்கிறது. ஆனால் நெல்லுக்குக் கூடுதல் விலை கொடுக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றம் பலமுறை கேட்டபின்பும், காலதாமதம் செய்து இருக்கிறது. தேவைப்பட்ட நேரத்தில் கொடுக்கவில்லை. தேட்ட மெத்தப்பணிவோடு தெரிவிக்கக்கொள்கிறேன். தமிழக அரசாங்கத்



திற்கு அந்த அதிகாரம் இருந்து இருந்தால் உரிய நேரத்தில் அந்த விலையை உயர்த்திக் கொடுத்து இருக்க முடியும். மாநில அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் இல்லாத காரணத்தால்தான் உரிய நேரத்தில் அதைச் செய்ய முடியவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மக்களுக்குத் தேவையான பிற பொருள்களான மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல் போன்ற விலைகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன. அவற்றைக் குறைக்க வேண்டும். அந்த அதிகாரத்தை மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டு இருக்கிறது. நாம் பத்திரிகைகளின் வாயிலாக பார்க்கிறோம், எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளான ஈரான், ஈராக் போன்ற நாடுகள் அந்த டீசல் பெட்ரோல் போன்றவற்றின் விலையைக் குறைத்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தச் செய்தியை நாம் பத்திரிகையில் பார்த்துவிட்டு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றை பாதி விலையில் குறைத்திருக்கிறார்களே என்று எண்ணி வாங்கப்போனால், அந்தப் பொருள்களின் விலை அங்கேதான் குறைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, இங்கே கூடுதலாக்கப்பட்டு இருக்கிறது என்கிற உண்மையை நாம் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. மத்திய அரசு தன்னுடைய அதிகாரத்தை இந்த வகையில் தவறான முறையில் பயன்படுத்துகின்றது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை. மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்கள் உலக நாடுகளில் குறைக்கப்பட்டு இருந்தபோதிலும், நம்முடைய மத்திய அரசு அதைக் குறைக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த அதிகாரங்களைப் பொறுத்தவரையில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களான நெல், மண்ணெண்ணெய், டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கொடுத்து, அந்தந்த மாநிலங்களுக்குத்தேவையான பொருள்களை அவர்களே வெளிநாடுகளில் இருந்து வாங்கிக்கொள்வதற்கான உரிமையையும் மத்திய அரசு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிடம் அதிகாரக் குவிப்பு மாநிலங்களை எந்த அளவிற்குபாதிக்கிறது என்பதற்கு நான் பல்வேறு உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போக முடியும். உதாரணமாக வனத் துறையை எடுத்துக்கொள்வோம். வனத்துறைக்கு என்று தனி இலாகாவும், தனி அமைச்சரும் நம்முடைய மாநிலத்தில் நாம் வைத்து இருக்கிறோம். அந்த வனத்துறை தமிழ்நாடு அரசின் அதிகாரத்திற்குட்பட்டது. ஆனால் அந்த வனப் பகுதியில் ஒரு சாலை அமைக்கவேண்டும் என்று சொன்னால், தமிழ்நாடு அரசு திட்டமிட்டால், அதை உடனடியாகச் செய்துவிட முடியாது. மத்திய அரசாங்கத்திடம் அனுமதி பெறவேண்டும் என்று சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் வனப்பகுதியில் சாலை தேவையா இல்லையா என்பதைப்பற்றி மத்திய அரசு ஏன் சொல்ல வேண்டும் என்ற கேள்வியை நான் இங்கே எழுப்ப

விரும்புகிறேன். ஒரு சாலையை வனத்துறையில் போட வேண்டுமானால், ஒரு புதிய அணையை (டாம்) வனப்பகுதியில் கட்ட வேண்டுமானாலும், அந்த இடங்களில் நிலங்களைக் கையகப் படுத்த வேண்டும் என்று சொன்னாலும், அதற்கு மத்திய அரசின் அனுமதியை நாம் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல முடியும். 1980 ஆம் ஆண்டில் நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் என்னுடைய தொகுதியான கன்னியாகுமரி பகுதியில் கடலையாறு திட்டம் நிறைவேற்றுவதற்கான அனுமதி அளிக்கபபட்டது.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. மா. சின்னராசு); தொகுதிப் பிரச்சினையைப் பற்றி இதிலே பேச வேண்டாம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: உதாரணத்திற்குச் சொல்கிறேன். அந்த கடலையாறு திட்டத்திற்காக ஆய்வு நடத்தி, அதற்காக தமிழக அரசு பணம் ஒதுக்கிய பின்னாலும், மத்திய அரசு அதற்கு அனுமதி கொடுக்காததால், அந்தத் திட்டம் அப்படியே தடை பட்டு இருக்கிறது. அதன் காரணமாக உரிய நேரத்தில் மக்களுக்கு அதன்பயன் கிடைக்கவில்லை என்ற உண்மையையும் இங்கே நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால், இந்த அரசு நல்ல முறையில் திட்டமிட்டு, நாட்டு மக்களுக்கு உதவிட வேண்டும் என்ற வகையில் திட்டங் களைத் தீட்டி, சட்ட மன்றத்தின் ஒப்புதல் பெற்று, நிதி ஒதுக்கம் செய்து, அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு இருந்தால் உடனடியாக அதைச் செய்ய முடியும். ஆகவேதான் மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்களைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய நாட்டிலே நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. அந்த நெடுஞ்சாலையில் ஒரு பகுதியில் இருந்து மற்றொரு பகுதிக்கு பைப் போடவேண்டும் என்று சொன்னால், அந்தப் பைப் போடுகின்ற அதிகாரம் கூட மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. மாநில அரசுக்கு இல்லை. நெடுஞ்சாலைப் பக்கத்திலே ஒரு சிறிய குழாய் அமைப்பதற்குக்கூட மாநில சர்க்காருக்குஅதிகாரமில்லைஎன்பதைநான்மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் தேவையான அதிகாரத்தை, தேவையான நேரத்தில் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்றுதான் இரயில் விடும் திட்டமும் இருக்கிறது. இரயில்வே இலாகா என்றாலும் மத்திய அரசு போக்குவரத்துத் துறை என்று வைத்துக் கொண்டாலும் இரயில் சர்வீசை ஏற் படுத்தும்போது சம்பந்தப்பட்ட மாநில அரசை கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்போது அந்த நடவடிக்கை இல்லை. உதாரணத்திற்குஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.



கல்கத்தாவுக்கு அருகிலுள்ள கோங்கோவா இரயில் நிலையத் திலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு இரயில் விடும் திட்டம் மத்திய அரசில் இருந்தது; அல்லது மத்திய அரசின் அனுமதிக்காக இருந்தது. அதைப்போன்று குஜராத்திலிருந்து அகமதாபாத் வழியாக கன்னியாகுமரிக்கு ஒரு இரயில் விடும் திட்டம் இருந்தது. இந்த இரண்டு இரயில் சர்வீஸ்களைத் தொடங்கி தமிழ்நாட்டை வட இந்தியப் பகுதிகளுடன் இணைக்கும் திட்டம் இருந்தது. ஆனால் அவர்கள் தமிழக அரசை கலந்து ஆலோசிக் காமல் கோங்கோவா இரயில் நிலையத்திலிருந்து வரும் இரயிலை கன்னியாகுமரிக்கு விடாமல், திருவனந்தபுரத்தோடு நிறுத்தி விட்டார்கள். அதைப்போன்று குஜராத்திலிருந்து பம்பாய், அகமதாபாக், பெங்களூர் வழியாக கன்னியாகுமரிக்கு வரும் இரயிலையும் திருவனந்தபுரத்தோடு நிறுத்திவிட்டார்கள். இமயம் முதல் குமரிவரை என்று சொல்கிறோம் ஆனால் அந்த இரயில் களை குமரிவரை விடுவதற்கு மாநில அரசை கலந்தாலோசிக்காத நிலையில் திருவனந்தபுரத்தோடு நிறுத்தி விடுகின்ற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அதுபற்றி தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, தமிழக அரசு இன்று மத்திய அரசோடு வாதாடுகின்ற நிலையில், நேற்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருப்ப தாக அறிகிறேன். இப்படி மத்திய அரசு மாநில அரசை கலந்து ஆலோசிக்காமல் செய்கின்ற பல காரியங்களால் தேவையில்லாத பிரச்னைகள் ஏற்படுகின்றன என்பதை எடுத்துக்கூற கடமைப்பட் டிருக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை, இதைப்போன்ற பணிகளை எல்லாம் சீர்தூக்கிப்பார்த்து மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை கண்டிப்பாக கொடுக்கவேண்டும், அதற்கு இந்த சர்க்காரியா கமிஷன் நல்ல வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

இங்கேமாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல சர்க்காரியா கமிஷன் கூடியது என்ற அளவில் இல்லாமல், தேவையான கருத்துக்களை எடுத்துச்சொல்லி' மாநில அரசுக்கு உரிய பங்குகளைக் கொடுக்கக்கூடிய காரியத்தைச் செய்ய வேண்டு மென்று இந்த மாமன்றத்தின் மூலமாகச் சொல்லி, விடைபெறு கிறேன். வணக்கம்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தனித் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதலிலே நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டை, இறையாண்மையை ஓங்கச் செய்வதிலே தனக்குள்ள திடமான உறுதிப்பாட்டினை நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பல கோணங்களிலே பல இடங்களிலே அழுத்தம் திருத்தமாக அறிவித்திருக்கிறார்கள் என்பதை முதன் முதலாக இங்கே நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டினுடைய பொருளாதார, சமூக முன்னேற்றம் விரைவில் ஏற்பட வேண்டுமானால் உண்மையான கூட்டாட்சி முறையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குகின்ற முறையிலே நாட்டினுடைய அரசியல் அமைப்பு அமைவதுதான் சாலச்சிறந்ததாகும், சாத்தியமாகும் என்ற கருத்தை நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச்சொல்லியிருககிறார்கள் என்பதை இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அறிவுரை கூறுகின்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய நாடு பல்வேறு மொழிகளும், பண்பாடுகளும், வரலாற்றுச் சிறப்புகளும் கொண்ட மக்கள் வாழும் மிகப் பெரும் நிலப்பரப்பாக இருக்கிறது. அதனுடைய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி தேவைகளும் பிரச்சனைகளும் உள்ளன. எனவே மாநிலங்கள் இடையூறின்றி, தடையின்றி செயல்படுவதன் மூலம்தான், நாட்டினுடைய ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் முன்னேற்றம் அடைய சட்டத் திட்டங்களை இயற்றுவது மூலம்தான், மாநிலங்கள் தேவைப் படும்அதிகாரங்களைப பெற்றிருப்பதன்மூலம்தான் பிரச்சனைகள் இல்லாமல் மாநிலங்கள் முன்னேற்றமடைவதற்கு வழிவகை ஏற்படும். இவை அனைத்தும் ஒரு கூட்டாட்சி முறையில்தான் சாத்தியம் ஆகும் என்ற கருத்தினை இங்கே பல்வேறு கட்சி களைச் சேர்ந்தவர்களும் எடுத்துச் சொல்லியிருந்தாலும் இதனுடைய நியாயமான கருத்தை மறுக்கக்கூடியவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதை நான் ஆணித்தரமாக எடுத்துக்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

ஆனால் பல நேரங்களிலே அரசியலமைப்புச் சட்டங்களை தனக்கு என்று பிரித்துக்கொண்டவர்களை, இன்று மாநிலங் களுக்குத் தேவையான அதிகாரங்கள் தனிப்பட்ட ஒவ்வொரு சுதந்திர மனிதனுடைய தரமும் இந்த நாட்டிலே உயர வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்கள், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற சூழ்நிலை இருந்தாலும் கூட, அரசியல் சட்டத்தை திருத்துகின்ற அந்த வாய்ப்பினை பல்வேறு கோணங்களிலே பெற்றிருந்தாலும் கூட, மத்தியிலே தாங்களே ஆளவேண்டும் மாநிலங்களிலே பாடுபட்டவர்கள் சில





நேரங்களில் ஆளுகின்றார்களே. என்ற எண்ணத்தை கொண்டிருந்ததன் விளைவாகத் தான் இன்று அதிகாரங்கள் தேவை என்று தாங்கள் உணர்ந்திருந்தாலும் கூட, இந்த நிலைமையினை உருவாக்குகின்ற சூழ்நிலையை சுதந்திரம் அடைந்த இத்தனை நாட்கள் வரையில், இந்த நிலைமை இந்த நாட்டிற்கு மாநிலங்களுக்கு, அதிக அதிகாரங்கள் கேட்கின்ற சூழ்நிலை இல்லாமல் இருந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் மிக்கவேதனையோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமட்டுமல்ல. பல அறிஞர்கள், பல தலைவர்கள், எந்த அளவிற்கு மாநிலங்களுக்கு அதிகாரங்கள் தேவை என்பதையும், மாநிலங்களுக்கு இப்படிப்பட்ட அதிகாரங்கள் கொடுப்பதன் மூலமாகத்தான் நாட்டிலே ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும், மத்தியிலே ஒற்றுமையை நிலைநாட்ட முடியும் என்ற கருத்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் மிக்க பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய நாட்டினுடைய கூட்டாட்சி எவ்வாறு அமையவேண்டு மென்பதை அகில இந்திய காங்கிரஸ் கட்சி 1945-லே இந்திய மக்கள் முன் வைத்த தேர்தல் பிரகடனத்தில் தெளிவாக இருக்கின்றது இந்தியக் கூட்டாட்சி என்பதை அதன் பல்வேறு பகுதிகள் விரும்பி இணையும் ஒன்றியமாக இருக்கவேண்டு மென்பதே தான் நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்னாலே எந்த சுதந்திரம் அடைய வேண்டுமென்று பாடுபட்டோமோ அந்த காங்கிரஸ் கட்சி 1945-ஆம் ஆண்டிலே கூறியிருக்கின்றது என்பதை கடந்த 37,38 ஆண்டு காலமாக நாம் மெத்தனமாக அந்த உணர்ச்சிகளை எல்லாம் மதிக்கத் தவறியிருந்திருக்கிறோம் என்பதையும், இப்போதாவது புரிந்து கொண்டு அமைக்கப் பட்டிருக்கிற சர்க்காரியா கமிஷனிலே அதிகாரங்கள் கேட்கின்ற சூழ்நிலையில் இங்கே இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அதன் உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, 1972-ஆம் ஆண்டு மைசூர் மாநில காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

The Congress is fighting in a determind manner for greater autonomy for the States and against the discriminatory and step-motherly treat-ment by the Centre.

மத்திய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மை பாரபட்சம், இவற்றுக்கு எதிராகவும் மாநிலத்திற்கு அதிகமான சுயாட்சி பெறுவதற்காகவும், காங்கிரஸ் கட்சி உறுதியாகப் போராடும் என்ற ஒரு நிலையினை அவர்கள் 1972 ஆம் ஆண்டு வைத்திருக்கிறார்கள் என்பதை இது நாள் வரையில் மறந்துவிட்டவர்களுக்கு இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளாக வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அரசியல் நிர்ணயச் சபையிலே அனுமந்தையா அவர்கள் சொன்ன வார்த்தையை இந்த நேரத்தில் நான் பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"The strength of the Centre, if I understand correctly consists in having a strong Army, a Strong Navy and a strong Air force and in possession of sufficient money for these purposes." என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதிலே நாட்டிற்காக உழைத்தவர்கள், தேசத்திற்காக உழைத்தவர்கள், இந்தியாவின் எந்தப் பகுதியிலே தனிமனிதர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் உயர வேண்டுமென்பதற்காக பாடுபட்டவர்கள் சொல்லிய கருத்துக்களை இந்த நேரத்திலே மத்தியிலே இருப்பவர்கள் மறந்துவிடக் கூடாது என்பதை மட்டும் என்னுடைய தாழ்மையான கருத்தாக எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்திலே நம்முடைய மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை இங்கே நான் மீண்டும் நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். நிதி திரட்டுதல், நிதி ஒதுக்குதல், திட்டத்திற்காக பணம் செலவிடும் முறை இவை அனைத்தும் மத்திய அரசு ஏற்றுள்ள அதிகாரங்கள், மாநிலங்களைக் கையேந்தி நிற்கும் நிலைக்கு தள்ளிவிட்டன என்று ஒரு கருத்தினை நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொல்லியதை நான் இங்கே நினைவுபடுத்திக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, உண்மையான கூட்டாட்சி அமைப்பில் நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து தொடர்புகள். நாணயச் செலாவணி ஆகியவை குறித்த அதிகாரங்கள் மட்டும் மத்திய அரசிடத்திலே இருக்கவேண்டும். ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் எஞ்சிய அதிகாரங்களுடன் மாநிலங்களுடன் இருக்கவேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் தமக்குள்ள அதிகார வட்டத்திற்குள் சுயேட்சையாக செயல்பட வேண்டும், இத்தகைய கூட்டாட்சி முறை நிலவினால்தான் நாடு முழுவதுமாக நலம்பெறும், அதுவே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நம்பிக்கையாக இருந்து வந்தது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிப்பது என்னுடைய தாழ்மையான கடமையாகும். ஆனால் இதை நிறைவேற்ற வேண்டியவர்கள் மாநிலத்திற்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டியவர்கள் பல்வேறு கோணங்களிலே அவர்களோடு ஒன்றுபட்டவர்கள் இந்தச் சமுதாயம் முன்னேற வேண்டும் என்று பாடுபட்ட பெரும் தலைவர்கள் கூட அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லிய பின்பும் கூட, சுதந்திரம் அடைந்த 38 ஆண்டுகள் ஆன பின்னாலும், இந்த நாட்டிலே வறுமை நீங்கவில்லை, மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. தன்னிச்சையாக செயல்பட முடியவில்லை. அந்த அளவிற்கு





சுதந்திரம் கூட பறிபோகின்ற நிலைமை இருக்கிறது என்பதை தெரிந்துவைத்திருந்தும் கூட, மத்தியிலே கூட்டாட்சி வேண்டும் என்று சொன்னவர்கள் மாநிலத்திலே சுயாட்சி வேண்டும் என்று சொன்னவர்கள் கூட சில நேரங்களிலே அவர்களை எல்லாம் ஆதரித்து தங்களுடைய கொள்கை எல்லாம் விட்டுக் கொடுத்ததன் விளைவாகத்தான் அவர்களுக்கு செய்யவேண்டும் என்று நிலைமை இருந்தும்கூட செய்து தரவேண்டும், அதுதான் நியாயம் என்று உண்மையிலே உணர்ந்திருந்தும் கூட மத்திய அரசிலே இருப்பவர்கள் செய்யத் தவறியிருக்கிறார்கள். என்பதை இந்த நேரத்திலே நான் மெத்த பணிவன்போடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசுகின்றபோது நம்முடைய மதிப்பிற்குரிய எஸ். வி. என், சோமு அவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டிலேயே சுயாட்சியைக் கேட்டு ஒரு வரலாற்றை உருவாக்கியதே எங்களுடைய கலைஞர்தான் என்று சொல்லி, அதற்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை இந்த நேரத்திலே மறைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே அவருக்கு பணிவன்போடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இவற்றை எல்லாம் பேசுகிறீர்களே என்று கேட்டு, இன்று தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருப்பவர்கள் சில நேரங்களிலே பயப்படுகிறீர்களே, ஏன்?, எதற்காக? என்று கேட்டு இருக்கிறார்கள். அவருக்கு நான் பணிவன்போடு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இங்கே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன், இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நீங்கள் மாநிலத்திற்கு உண்மையிலேயே அதிக அதிகாரம் கிடைக்கவேண்டும் என்றுதான் சொல்லுகிறீர்களா, இல்லை, மாநிலத்தில் ஆண்டு கொண்டு இருக்கின்ற புரட்சித் தலைவருடைய அரசும் மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற இந்திய நாட்டின் அரசும் மோதிக்கொண்டால் இரண்டு ஆடுகள் மோதிக்கொள்ளும்போது, நடுவிலே வருகின்ற ஓநாயாகத்தான் இன்று அவர்கள் காட்சி அளிக்கிறார்களேயொழிய உண்மையிலேயே மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற நிலைக்குத் தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்களா? என்பதை இந்த நேரத்திலே நான் சந்தேகிக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969–ஆம் ஆண்டு "ஹோம் ரூல்" என்ற ஆங்கில ஏட்டிலே கடைசியாக அன்புள்ள தம்பிக்கு எழுதிய கடிதத்தினுடைய சில வாசகங்களை அவர்களுக்கு படித்துக் காட்ட ஆசைப்படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுகின்றார்கள். "நான் பதவியைத் தேடி வைத்தியம் பிடித்து அலைபவனும் அல்ல, காகிதத்தில் கூட்டாட்சியாகவும், நடைமுறையில் மத்தியில் அதிகாரக் குவிப்பும் கொண்டதாகவும் இருக்கிற ஒரு அரசியல் சட்டத்தின் கீழ்

முதலமைச்சராக இருப்பதற்கு மகிழ்ச்சி கொண்டு இருப்பவனும் இல்லை" அதற்காக மத்திய அரசுக்கு எரிச்சல் ஏற்படுத்துவதும், டெல்லியோடு சண்டை போடுவதும்தான் என்னுடைய நோக்கம் இல்லை என்று சொன்னார்கள். மீண்டும் அறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் நாள் புதுடெல்லியில் செய்தியாளர்கள் கூட்டத்திலே பேசுகிறார்கள். மாநிலங்களுக்கு போதுமான அதிகாரங்களை வழங்கிவிட்டு, நாட்டின் ஒற்றுமையை ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பதற்கு எவ்வளவு அதிகாரங்கள் தேவையோ, அவைகளை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொண்டால் போதும் என்றுசொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

நான் பணிவோடு சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். எந்த ஒரு காரியத்தை வைத்துக் கொண்டும், அதிகாரம் கேட்டு, சுய ஆட்சி கேட்டு' மத்திய அரசோடு மோதுவது அல்ல எங்களுடைய கொள்கை என்று அவர்கள் இருக்கிற நிலைமையை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த அரசியல் நிர்ணய சபைக்கு, அந்தச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் அன்று அவர்கள் ஆட்சியை நடத்தினார்கள் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

இன்று தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், அழுத்தமாக சொல்கிறேன், பல்வேறு கோணங்களில், தமிழர்களுக்கு தீங்கு ஏற்பட்ட போது, தமிழ்நாட்டிற்கு இங்கு ஏற்பட்டபோது, மத்திய அரசோடு போராடி, உரிமைகளைப் பெற்றுத் தந்தவர் என்கிற பெருமையை கொண்டிருக்கிறார் எங்கள் புரட்சித் தலைவர் என்றும், அந்தப் பெருமை முழுவதும் அவருக்கே சாரும் என்பதையும் நான் ஆணித்தரமாக இந்த மன்றத்திலே வைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் அவர்களை கேட்க விரும்புகிறேன். மாநிலத்திலே சுய ஆட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று மாநில சுய ஆட்சி பற்றி பேசிவிட்டு, 1980 ஆம் ஆண்டிலே கொள்கையை விட்டு, விட்டு, மத்தியிலே ஒரே ஆட்சி மாநிலத்திலே கூட்டாட்சி என்று சொல்கிற அளவுக்கு விட்டுக் கொடுத்தார்கள். தேர்தலை சந்திக்கின்றபோது ராஜமன்னார் கமிட்டியினுடைய அறிக்கையையும் மறந்துவிட்டார்கள். அப்போது அந்த அறிக்கை என்ன ஆனது? இன்று இந்த திருத்தம் கொண்டு வருவதற்கெல்லாம் இந்தக் கொள்கைகள் இங்கே எடுக்கப்படுவதற்கெல்லாம் நீங்கள் தான் காரணம், எங்கள் கலைஞர் தான் காரணம் என்று சொல்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தை பார்த்துக் கேட்கிறேன். அந்த அளவுக்கு அப்போது விட்டுக் கொடுத்தீர்களே, அப்போது கொள்கையை எங்கே அடகு வைத்தீர்கள் யாருக்கு பயந்தீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) ஐ யாம் நாட் யீல்டிங்.



திரு ஜே. எஸ். இராசு; மாண்புமிகு மாற்றுச் தலைவர் அவர்களே, அவர் ஒரு குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார். தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார், அதற்கு விளக்கம் கொடுப்பதற்கு எங்களை அனுமதிக்கத்தான் வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1980லே நடை பெற்ற பாராளுமன்ற தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் ஒன்றாக இருந்து பணியாற்றியதைத்தான் சொல்கிறார் என்று கருதுகிறேன். மாநில சுய ஆட்சியை மறந்து விட்டு, ராஜமன்னார் குழு அறிக்கையை மறந்துவிட்டு, மத்தியிலே ஒரே ஆட்சி, மாநிலத்திலே எங்களுக்கு ஆட்சி என்று கலைஞர் சொன்னதாகச் சொல்கிறார். அப்போது இந்த நிலைமையிலே, மத்தியிலே நிலையான ஆட்சி வேண்டும் என்று, 'நேருவின் மகளே வருக நிலையான ஆட்சியைத் தருக' என்று சொன்னாரே தவிர, மாநில சுய ஆட்சியை விட்டுக் கொடுக்கிறோம் என்று அப்போதும் சொல்லவில்லை, இப்போதும் சொல்லவில்லை. இனி எப்போதும் சொல்லப்போவதும் இல்லை. இதை அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துக் கொண்டு, தொடர்ந்து பேசினால் நலம்.

(குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. மா. சின்னராசு) பேசுகிற உறுப்பினர் பதில் சொல்லிக் கொள்வார். குறுக்கீடுகள் வேண்டாம்.

திரு. சி. கோபால்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஏதோ புரிந்துக் கொள்ளாமல் பேசியதாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அருமை சகோதரர் ராஜு அவர்கள் குறிப்பிடுகிறார்கள் நான் புரிந்துக் கொண்டு தான் பேசுகிறேன். அந்த அளவுக்கு, நிலையான ஆட்சி என்று அதை மாற்றி சொன்னாலும் கூட, கொள்கையை அந்த அளவுக்கு விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை வந்த காரணத்திற்காகத்தான் சொல்லப்பட்டது என்று சொன்னேனே தவிர, மற்ற எந்த அர்த்தத்திலும் அல்ல என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகிறபோது, அருமை நண்பர் என். வி. என். சோமு அவர்கள் பேசுகிற நேரத்தில் நீங்கள் மாநில சுய ஆட்சியை மட்டும் தானே கேட்கிறீர்கள், நாங்கள் கவர்னரே வேண்டாம் என்று சொல்கிறோம் என்று சொல்லி பேசுகிற வகையிலே காஷ்மீருக்கு நாங்கள் சென்றிருந்தோமே, இந்த நாட்டினுடைய முதல்வர் ஏன் வரவில்லை? ஐதராபாத்துக்கு போனோமே ஏன் வரவில்லை என்று கேட்டார்கள். அதற்கு என்ன பயம் என்று கேட்டார்கள். நான் எங்களுடைய கட்சியினுடைய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய, டாக்டர் முதல்வர் அவர்கள் பேசிய கருத்தைத்தான் அவர்களிடம் எடுத்துச்

சால்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று அவர்கள் பேசுகிற போது கூட, நீங்கள் பேசுகிற பேச்சு ஒன்றும், செய்கிற செயல் ஒன்றுமாக இருக்குமானால், மக்களிடத்திலே நீங்கள் போக வேண்டிய நிலை வரும், மக்களிடத்திலே போவீர்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் நான் அவர்களுக்கு பதிலாக சொல்ல விரும்புகிறேன்.

நான் அவர்களைக் கேட்கவிரும்புகிறேன். 1969 ஆம் ஆண்டிலேயிருந்து 1976 ஆம் ஆண்டு வரை கலைஞர் அவர்கள் ஆண்டார்களே. அப்போது, கவர்னர் அங்கே இருக்கிறபடியால் நாங்கள் ஆள மாட்டோம் என்று நீங்கள் சொல்லியிருந்தீர்களே யானால், நீங்கள் உங்கள் மாநில சுய ஆட்சி கொள்கைக்கு மதிப்பு தருகிறீர்கள், உங்களுடைய கொள்கையை நாட்டிலே நிலைநிறுத்துவதற்காக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்று நாங்கள் எல்லாம் பெருமை படுவோம். ஆனால் இந்த நேரத்திலே ஒன்றை மட்டும் நான் சொல்லி முடிக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி இலங்கையிலே ஏற்பட்ட தமிழர்கள் பிரச்சினையைக் குழப்பி ஏதாவது ஒரு பிணம் விழுந்தால் அரசியல் நடத்தலாம் என்று நினைக்கிறதோ அப்படிப்பட்ட சூழ்நிலையிலேதான் மாநில சுயாட்சியைச் சொல்லி வாழவேண்டிய காலகட்டத்திலே அவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்; பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேண்டுகோள் என்ற முறையிலே இந்த அவைக்கு ஒரு கருத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாநில சுயாட்சி வேண்டும், மாநில தன்னாட்சிக்குக் கூடுதலான அதிகாரங்கள் வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துப் பேசுகின்றபோது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதை இந்தத் தரப்பிலே உள்ளவர்களும் அந்தத் தரப்பிலே உள்ளவர்களும் ஆதரிக்கிற வகையில் கருத்துக்களைச் சொல்கிறபோது கூறுகிற கருத்துக்களுக்கு வலிவூட்டுகின்ற முறையிலே ஆதாரங்களை கூறவேண்டுமே தவிர மற்றப் பிரச்சினைகளை, கருத்துவேறு பாடுகளை நமக்கு இருக்கிற பிரச்சினைகள் குறித்து பேசினால் அதனால் கருத்துக்கள் பலவீனப் டுமேயன்றி வலிவுபெறாது. ஒருவருக்கொருவர் இருக்கின்ற கருத்துவேறுபாடுகளைப்பற்றிப் பேசுவது—விவாதத்திற்கு என்று வரும் போது வேண்டுமானால் அதைப் பேசலாமே தவிர—சரியல்ல, மாச்சரியங்களைப்பற்றி யெல்லாம் பேசுவது சரியல்ல. ஒருமித்த கருத்து நமக்குள்ளே வருகிறபோது அந்தக் கருத்துக்களுக்கு வலிவூட்டுகின்ற முறையிலே ஆதாரங்களைத் தெரிவிக்க வேண்டும். கருத்துக் களுக்குத்தான் முக்கியமே தவிர, அதிலிருந்து பிரச்சினை வேறு இடத்திற்குப் போய்விடுவதன் காரணமாக கருத்துக்களுக்கு



136551
600 008.

வலிவற்ற தன்மை ஏற்பட்டுவிடக் கூடாது. மாநில சுயாட்சிக்கு அதைப்பற்றிப் பேசுகின்றவர்கள், அதற்கு ஆதரவாக பல தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களைச் சொல்கிறார்கள். மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தால் அவைகளைத் தெரிவித்தால் அவைகளை அவர்கள் கருத்துக்கு ஆதாரமாக் காட்டமுடியாது. அவரவர்கள் கருத்துக்களுக்கு அவரவர்கள் காட்டுகின்ற முறையிலே சொன்னால் இந்த மன்றத்திலே நல்ல முறையிலே கருத்துக்கள் சொல்லப்பட்டு இந்த மன்றம் வேறு மன்றங்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இரண்டு சாரார்களுக்கும் நான் இந்தக் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. கு. ரமணி: அவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்கள் குழுவினுடைய உபதலைவர் தோழர் திரு. உமாநாத் அவர்கள் இந்த அவையின் முன் வைத்துள்ள தீர்மானத்தின் மீது தொடர்கிற இந்த விவாதம் தொடரப்பட்டு நீண்ட நாட்களாகிறது. ஆகியும் நல்ல பலனுள்ள தீர்மானமாக வருகிறது. சரியான நேரத்திலே இந்தத் தீர்மானத்தை நாம் முன்வைத்திருந்தாலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே இந்த நாட்டின் வளர்ச்சிப் போக்கில் என்ன என்ன மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதைப் பரிசீலித்து இப்போதுள்ள நிலைக்குசரியான உருப்படியானதீர்மானமாக இதை முன்வைத்திருக்கிறோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானத்தை இந்த அவையில் வைத்து விவாதிப்பதன் மூலமும் அகில இந்தியா முழுவதும் ஒரு விவாதம் மாநில சுயாட்சி பற்றி ஏற்பட வேண்டும். நல்ல முறையில் அந்த விவாதம் வளர்க்கப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில் இன்றைக்கு நாம் முன்னேறி வருகிறோம் என்பதிலே நாங்கள் மகிழ்ச்சி கொள்ள உரிமை உண்டு.

மத்திய மாநில உறவு பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று வந்திருக்கும் கோரிக்கையை மறுக்கமுடியாமல் மத்திய அரசாங்கம் ஒரு கமிஷனை, சர்க்காரியா கமிஷனை நியமித்து அதனுடைய பரிசீலனைக்கு இந்த விஷயத்தை உட்படுத்துவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் சர்க்காரியா கமிஷனை நியமித்து விட்டதனால் அது சகலத்தையும் முடித்துவிடும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விவாதத்திலே பங்கெடுத்துக் கொண்டிருக்கின்ற அத்தனை கட்சிகளுமோ கருதவில்லை. இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டு இருக்கும்படியான சூழ்நிலையிலே மாநில சுயாட்சியை பெற்று வளர்த்துக்கொண்டு போய் ஒரு பெடரல் ஸ்டேட் இந்த நாட்டிலே உருவாகக் கூடிய முறையிலே மத்திய அரசு செயல்படுவதற்கு இந்தக் கமிஷனால் மட்டும் செய்துவிடக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்று நான் கருதவில்லை. ஆனால் அதைப் பலப்

படுத்துகின்ற முறையிலே என்ன என்ன விஷயங்களை விவாதிக்க வேண்டுமென்றும் மாநில சுயாட்சியைப் பெறுவதற்கும் அதிக அதிகாரங்களைப் பெறுவதற்கும் நிதிவசதிகளைப் பெறுவதற்கும் என்ன என்ன முறையிலே கமிஷன் ஆலோசனை செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு இந்த நாடு முழுவதிலும் உள்ள அத்தனை கட்சிகளும் போராட வேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

அந்த கமிஷனுக்கு முன்னால் விவரங்களைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அதை ஒரு சரியான இடத்திற்கு கொண்டு செல்ல முடியுமா என்று பார்க்க வேண்டும். அதுதான் எங்களுடைய கருத்து. தேசம் எங்கும் இன்றைக்கு ஒரு பெரிய வாத பிரதிவாதம் வந்துவிட்டது. இப்படிப்பட்ட பரவலான தேசம் தழுவிய விவாதங்கள் கோடிக்கணக்கான மக்கள் மத்தியில் எழுப்பப்பட்டு இந்த மாநில சுயாட்சி பற்றிய பல்வேறு மாநிலத்திற்குள் அதனுடைய விளக்கங்கள் விவாதங்கள் நடை பெற வேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து ஆகும். அது தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இதில் ஒரு பின்னணி இருக்கிறது. இவைகள் திடீர் என்று ஆரம்பித்து இருக்கிற விஷயம் அல்ல. எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சரித்திரத்தினுடைய பல்வேறு பகுதிகளில் உள்ள அவர்களுடைய பார்வைக்கொப்ப பல விஷயங்களை முன் வைத்து இருக்கிறார்கள். ஆனால் ஒரு விஷயம் இது நீண்ட நாட்களாகவே இந்த பிரச்சினை உருவாகி வந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக இந்திய நாட்டுக்கு விடுதலை பெறுவதற்கு முன் மக்களை திரட்டிய பெரிய இயக்கமாக வளர்ந்து வந்த விடுதலை இயக்கம் அதை தலைமை தாங்கிய காங்கிரஸ் கட்சி மொழி வழி மாநிலங்களுடைய அமைப்பிலே, இந்த நாட்டினுடைய அரசியல் அமைப்பிலே ஒரு பெடரல் அமைப்பாக அமைய வேண்டும் என்பதை எத்தனை தரம் வற்புறுத்தியிருக்கிறீர்கள். தொடர்ந்து அதை முன் வைத்து இருக்கிறீர்கள் என்பது நாடறியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடிய அனைத்து மொழி வழி மாநிலங்களிலும் உள்ள மக்களுடைய தேசிய ஒற்றுமையை உருவாக்குவதற்கு உழைப்பாளி மக்கள் மற்றும் அனைத்து மக்களுடைய ஒற்றுமையை உருவாக்குவதற்கு அப்படிப்பட்ட கோஷங்களை முன் வைத்து போராட வேண்டியிருந்தது. ஆகவே அந்த உதாரணங்களை எல்லாம் இன்றைக்கு எடுத்துப் பார்க்க வேண்டும். ஆகவே இதனுடைய பின்னணி ரொம்ப விரிவானதும், அரசியல் சட்டப்படி ஒரு பெடரல் அரசாங்கமாக மத்திய அரசு நடக்க வேண்டும் என்பதாகும். ஆனால் அது நடக்கவில்லை. அது நடக்காமல் இருந்தால்தான் கடந்த 35 ஆண்டுகளாக அதிகாரங்கள் முழுமையாக மத்தியில் குவிப்பது எல்லா விதமான வகையிலும் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கிடைப்பதை சுருக்கி வந்து எந்த அளவுக்கு



மாநிலத்தின் அதிகாரங்களை குறைக்க முடியுமோ அதை குறைப்பதற்கு நடவடிக்கைகள் இன்றைக்கும் தொடர்கிறது. அந்த முறையில் நடந்து கொண்டிருக்கிறது. சுருக்கச் சொன்னால் மாநில அரசுகள் எல்லாம் அவர்களுடைய ஏஜென்சியாக இருந்து அவர்கள் இடுகின்ற கட்டளைகளை சிரம் மேல் தாங்கி நிறைவேற்றுவது அல்லாமல் மாநிலங்கள் மக்களுக்கு கடமைப்பட்டவர்கள், பதில் சொல்ல வேண்டியவர்கள் மக்களுடைய சகல பகுதிகளிலும் மாநிலங்கள் தான் திட்டமிட்டு காரியங்களை மக்களுக்கு நேரடியாக செய்து பதில் சொல்லக்கூடியன என்ற தன்மை மாறி மத்திய அரசினுடைய ஏஜென்சியாக மாநில அரசுகள் செயல்பட வேண்டும் என்ற முறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். திகாரங்கள் இன்றைக்கு மேலும் மேலும் மத்தியில் குவிக்கப்பட்டு அது எந்த இடத்திற்கு வந்து இருக்கிறது என்றால் பரிபூர்ணமான ஒரு அத்தாரிடேரியன் ஆட்சியாக மத்தியில் உட்கார்ந்து கொண்டு, ஒரு சர்வாதிகார ஆட்சியாக மத்தியில் உட்கார்ந்து கொண்டு செயல்படுகின்ற நிலை இருக்கிறது. அது இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் எந்தக் காரணத்தைக் கொண்டும் பயன்படாது என்பதை நாம் உணர்ந்து கொள்வது அவசியமாக இருக்கிறது.

அதனால்தான் நாங்கள் சொல்கிறோம் இந்த அத்தாரிடேரியன் வளர்ச்சியைப் போக்க இந்த டிரண்டை எதிர்த்து போராட வேண்டும் என்கிறோம். அதற்கு தான் இன்றைக்கு அரசியலிலே பலவிதமான வேற்றுமைகள் இருந்தபோதிலும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கையும் அதிக நிதி வசதி வேண்டும் என்ற கோரிக்கையும் வைத்து இருக்கிறோம். மக்களுடைய முன்னேற்றத்திற்கு அதைத் தவிர வேறு வழி கிடையாது. ஒரு உண்மையான ஃபெடரல் செட்அப் ஆக மத்திய அரசு இருக்க வேண்டும் என்ற அந்த கோரிக்கைக்கு விளக்கமான, கருத்து உள்ள, அரசியல் உள்ள, அடிப்படை உள்ள கட்சிகள், பிராந்திய கட்சிகள், அகில இந்திய கட்சிகள் இன்றைக்கு சேர்ந்து, இந்திய நாட்டின் இவ்வளவு நெருக்கடி குழப்பங்களுக்கு மத்தியில் ஒரு ஒற்றுமை உருவாக்கப்பட்டு வளர்ந்து வருகிறது. அந்த உண்மைகளை உணர வேண்டும். அந்த இயக்கத்தினுடைய நடவடிக்கைகளின் அடிப்படை என்ன? மாநிலங்களுக்கு அதிக அதிகாரம், அதிக நிதி வசதி, அதிக சுயாட்சி உரிமைகள் இவைகளை திட்டவட்டமாக கொடுத்துத் தீர வேண்டும். இதைத் தள்ளிப் போடுவதற்கோ, காலம் கடத்துவதற்கோ இனி நிலைமை இல்லை.

யாருடைய எந்தச் சர்வாதிகாரத்தின் கீழும் அடிபணிந்து மக்கள் இங்கே வாழ மாட்டார்கள், எந்த மக்களும் அதற்கு உட்பட மாட்டார்கள் என்ற நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. அதனுடைய ஆரம்பம்தான் இப்பொழுது ஸ்ரீநகரிலே நடந்த மாநாடு. அந்த மாநாடு மட்டுமல்ல, அதற்கு முன்பாக 1983 மே கடைசி வாரத்தில் அகில இந்திய கட்சிகளும், பிராந்தியக் கட்சிகளும், 6 மாநிலங்களுடைய முதலமைச்சர்களும்

(திரு. கு. ரமணி) 1983 அக்டோபர் 29]

ஒன்றுகூடி விஜயவாடாவிலே ஒரு மாநாடு நடத்தினார்கள். அந்த மாநாட்டிலே அதற்கு வேண்டிய சில தயாரிப்புகள், சில அடிப்படைகள் உருவாக்கப்பட்டன. அதற்கடுத்து, டெல்லியிலே மாநாடு கூடியது. விஜயவாடா மாநாட்டில், தமிழகத்தை ஆளுகின்ற ஏ.டி.எம்.கே. கட்சியினுடைய முதலமைச்சர் அவர்களும் பங்கெடுத்தார்கள். அடுத்த மாநாடு டெல்லியிலே கூடியது; அது இரண்டாவது மாநாடு. அந்த மாநாட்டிலே ஒன்றிரண்டு அகில இந்திய கட்சிகள் பங்கெடுத்துக் கொள்ள வில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிற்குப் போகவில்லை. என்ன காரணம்? ஏன் அவர்கள் போகவில்லை? அவர்கள் மாநில சுயாட்சிக்காக நிற்கிறார்களா? இல்லையா?

மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் பேசும்போது, ரொம்பத் தெளிவாக, நல்ல விஷயங்களை எடுத்து முன்வைத்தார். நாம் வரவேற்கத்தக்க விஷயம். அந்தக் கண்ணோட்டமும் கருத்தும் இருக்கும் மாநில சுயாட்சிக்காகப் போராடும் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் ஏன் அந்த மாநாட்டிற்குப் போகவில்லையென்பது கவலையோடு கவனிக்க வேண்டிய விஷயம். அவர்களே அதைத் தெளிவாக்கட்டும்.

அதற்கடுத்த மாநாடு ஸ்ரீநகர் மாநாடு. ஸ்ரீநகர் மாநாடு மிக முக்கியமான, அடிப்படையான பல காரியங்களைச் செய்திருக்கிறது. நல்லமுறையிலே அதனுடைய விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த மாநாட்டிலே தெளிவாக ஆரம்பத்திலே சொன்னார்கள். அந்த மாநாட்டிற்கு அழைக்கும் போது சொன்னார்கள். இது கட்சியிலே இருக்கிற அரசியலை வைத்து, மத்தியிலே இருக்கிற சர்க்காரை வெளியேற்ற வழி முறைகளைவகுப்பதற்கு வேண்டி, அரசியல் கண்ணோட்டத்தோடு அங்கே போய் விவாதம் செய்து, எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து எலக்‌ஷனுக்குத் திட்டம் போடுகிற மாநாடு அல்ல என்று தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே பங்கெடுத்துக் கொண்ட பல்வேறு கட்சிகளும், மற்றவர்களும் இதைச் சொன்னார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இந்த மாநாட்டினுடைய நோக்கம் ஒரே ஒரு விஷயம்தான். அதுதான் அந்த மாநாட்டிலே பேசப்பட்டது. மத்திய மாநில உறவுகளைப் பற்றி என்ன என்ன மாறுதல்கள் நாட்டிலே கொண்டு வரப்பட வேண்டும், அரசியல் சட்டத்திலே கொண்டு வரப்பட வேண்டும், நிதி பங்கீடு நடவடிக்கைகளிலே கொண்டு வரப்பட வேண்டும், மத்திய அரசாங்கக் கொள்கையிலே கொண்டு வரப்பட வேண்டுமென்ற விஷயம்தான் பொதுவான விஷயமாக வைக்கப்பட்டு அந்த மாநாடு ஸ்ரீநகரிலே கூட்டப்பட்டு வெற்றிகரமாக நடந்தது. அது இந்த மாதம் 5, 6, 7 ஆகிய மூன்று தினங்கள் நடை பெற்றது. ரொம்ப விரிவான தயாரிப்புகளுடன் அந்த மாநாடு



1983 அக்டோபர் 29] (திரு. கு. ரமணி)

நடந்தது. அதனால்தான் மிகவும் பயனுள்ள முறையில் நல்ல செழுமையான, ஒரு கான்சென்சஸ் டாக்குமெண்ட்—எல்லா கட்சிகளும், அதிலே பங்கெடுத்த கட்சிகள் அத்தனையும் ஒத்துக் கொள்ளக்கூடிய, ஒன்றுபட்ட தன்மையோடு, ஒரு டாக்குமெண்ட்டை உருவாக்கினார்கள். அந்தக் கட்சிகளுக்குள்ளே ஒருவருக்கொருவர் கருத்து வேற்றுமை உண்டு. அது நீடிக்குமா என்றால் நீடிக்கும். அவர்களுக்குள் அடிப்படை வித்தியாசங்கள் இருக்கின்றனவா என்றால் இருக்கும். ஆனால், ஒரு விஷயத்தில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், மத்தியிலே அதிகாரக் குவிப்பு கூடாது, ஒரு பெடரல் செட்அப்பான மத்திய அரசாங்கம் இருக்க வேண்டும் என்ற விஷயத்திலே அந்தக் கட்சிகள் அத்தனையும் ஒன்று சேர்ந்து ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அவர்கள் தங்களுடைய டாக்குமெண்ட்டைத் தயாரித்திருக்கிறார்கள். முடிவை வெளியிட்டிருக்கிறார்கள். அது இதற்கு ஓர் அடிப் படையான அம்சமாக வந்துள்ளது. எங்களைக் கேட்டால், இது கிட்டத்தட்ட ஒரு ஆரம்பம் மட்டுமே. ஆரம்பத்திற்கே இவ்வளவு வேலைகள் செய்ய வேண்டியிருந்தது; இவ்வளவு விவாதங்கள் டெலிபரேஷன்ஸ் நடக்கவேண்டியிருந்தது இதனுடைய அடிப்படையிலே நாடு முழுவதும் ஒரு பிரம்மாண்டமான விவாதத்தைக் கட்டவிழ்த்துவிட இந்த விவாதங்கள் தொடர்ந்து செல்ல வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உள்ள நிலைமைகள்—நாம் பழைய சரித்திரத்திற்குப் போவதெல்லாம் இருக்கட்டும், உண்மையான நிலைமைகள்—நாடு முழுவதும் மக்கள் கோபாவேசம் பொங்கி, வாழ வசதியில்லாமல், விலைவாசி ஏற்றம், நிலச்சீர்திருத்தம் இல்லாத நிலையில், கோடிக்கணக்கான மக்கள் அவல நிலையில் இருப்பதும், வேலையில்லாத்திண்டாட்டம் நிலவுவதும், தொழில் வளர்ச்சியில் பின் தங்கியிருக்கும் நிலைமையிலும் எல்லாம் நாட்டிலே பிரமாதமான அளவுக்குப் போராட்டங்கள் நடக்கின்றதைப் பார்க்கிறோம்.

(பிற்பகல் 1—10)

அந்தப் போராட்டங்களின் மூலம் நாட்டு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த, சர்வாதிகார மத்திய அரசாங்கத்தினுடைய தவறான கொள்கைகளுக்கும், போக்கிற்கும் எதிராக நடவடிக்கை எடுக்க, மாநில அரசாங்கங்களுக்கு அதிகப்படியான அதிகாரம் பெற வேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைத்து, நிதியுதவியும் கிடைத்து, மத்திய சர்க்காரின் தாக்குகளின் கீழ் அவர்கள் இல்லாமல், அவர்களுடைய ஏஜென்சியாக இல்லாமல் செயல்படுகிற நிலைமை உருவானால்தான் மக்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு, நல்ல முறையில் காரியங்களைச் செய்வதற்கு இயலும் அதற்கு மக்களுடைய இயக்கங்கள் நாடு முழுவதும் வளர வேண்டும். அப்படிப்பட்ட இயக்கங்கள் வளர்ந்து வருகின்றன. ஆகவே மாநிலங்களில் ஆளுகின்ற அரசாங்கங்களும், மாநிலங்களை ஆளுகின்ற பிராந்திய

கட்சிகளும், அகில இந்தியக் கட்சிகளும் சேர்ந்து இப்படிப்பட்ட
முடிவிற்கு வரவேண்டும். வேறு மார்க்கம் கிடையாது. நாட்டிலே
பல இடங்களில் சட்டம், ஒழுங்கு அமைதியாய் நடத்த முடியாத
நிலை மத்திய சர்க்காருக்கு ஏற்பட்டு, அதனுடைய அதிகார
பலத்தைக் கொண்டு அல்லது போலீஸ் இராணுவ பலத்தைக்
கொண்டு அடக்கி நாட்டை ஆள்வதாக நினைத்துக் கொண்டு
காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால்
உண்மை நிலை அதற்கு மாறுபட்டதாக மக்கள் மத்தியிலே
வளர்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட
சூழ்நிலைகளில் ஸ்ரீநகர் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிற்கு
நம்முடைய மாநிலத்தின் முதலமைச்சர் போகவில்லை. அவர்
ஏன் போகவில்லை என்ற கேள்வியை அவரைச் சிலர் கேட்ட
நேரத்திலே, அதுபற்றி கடிதங்கள் எழுதியிருக்கிறோம். பதில்
வரட்டும் என்று அவர் பதில் சொன்னதாக எனக்கு ஞாபகம்.
ஆனால் அது மட்டும் போதாது. ஏன் போகவில்லை என்பதை
அவர்கள் விளக்க வேண்டும். மாநில சுயாட்சிக்கு ஒரு அஸ்தி
வாரமாக நல்ல முடிவை எடுக்கக்கூடிய அளவில் ஐந்து மாநிலங்
களுடைய முதலமைச்சர்களும் இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு
அதிகமான கட்சிகளும் சேர்ந்து பேசியிருக்கிறார்கள். ஒரே ஒரு
விஷயம், மத்திய மாநில உறவுகள் என்ற விஷயத்தை மட்டும்
பேசியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடக்கக்கூடிய
விவாதங்களில் நீங்கள் பங்கெடுத்திருக்கவேண்டும் என்பது
எங்களுடைய கருத்து, எங்களுடைய கட்சியினுடைய சார்பிலே
நாங்கள் ஒரு தீர்மானத்தை வெளியிட்டு ஏன் நம்முடைய
முதலமைச்சர் போகவில்லை என்றுகூட நாங்கள்—தீர்மானத்தின்
மூலமாக—ஒரு வினாவை விடுத்தோம். அந்த முறையிலே நீங்கள்
போயிருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து.
அப்படிப்பட்ட நிலையில் ஸ்ரீநகர் மாநாடு நடை
பெற்றுள்ளது. நமது அரசு இந்தத் தீர்மானத்தின் மீது நல்ல
விவாதம்செய்துஇறுதி முடிவிற்கு வருகிறபோது அவர்களுடைய
கருத்தைச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அந்த
மாநாட்டில் எடுத்திருக்கிற முக்கியமான முடிவுகளில் சிலவற்றை
கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் என்பவர் மாநிலத்தில் ஆளுகின்ற தலைமைட்
பாத்திரத்தைப் பெற்றவர். அதுபற்றி மாநாட்டில் உருவான
கான்சென்சஸ் டாக்குமென்டிலிருந்து சில விஷயங்களைச் சொல்
கிறேன். மத்தியிலே ஆளும் கட்சியின் நலன்களைக் காக்க
கவர்னர் பயன்படுத்தப்படுகிறார். அதுமட்டுமல்லாமல், அரசியல்
சட்டத்திலே நடுநிலையாக இருந்து காரியங்களைச் செய்யக்
கூடிய (head of the state) மாதிரி அவர்கள் இன்றைக்குச்
செயல்படக்கூடிய நிலையில் இருக்கவில்லை. மத்திய அரசாங்கத்
தினுடைய, மத்தியிலே ஆளுகின்ற கட்சியினுடைய விருப்பத்தை
நிறைவேற்றுகின்ற ஆளாக இன்றைக்கு இருப்பது கவர்னர்
என்ற பதவி. அது அப்படித்தான் பயன்படுகிறது. அப்படி
யானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? மாநிலத்தில்
கவர்னரை நியமிப்பது ஜனாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்ட



தென்றாலும், மாநில கவர்னராக யாரை நியமிப்பது என்பதை மாநில முதல்வரோடு கலந்துபேசி, அவருடைய ஆலோசனையைப் பெறவேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பேனலை, ஒரு பெயர்ப் பட்டியலைக் கொடுத்து, அப்பட்டியலிலிருந்து ஒருவரை நியமிப்பது சரியாக இருக்கும். அவர்கள் கொடுக்கிற பட்டியலிலிருந்து ஒருவரை கவர்னராக நியமிக்கும்படியான அதிகாரத்தை பாராளுமன்றத்திலே சட்டம் இயற்றுவதன் மூலமாக, இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டு வருவதன் மூலம், அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி கடமைப்பட்டவராக ஆக்கப்பட வேண்டும். கவர்னர் என்ற ஒரு பதவி இருக்கலாமா? கவர்னரே இருக்கலாமா என்ற பிரச்சினை இருக்கிறது. அது மிகப்பெரிய பிரச்சினை.

அரசியல் சட்டத்தினுடைய 356-வது பிரிவு, 357—வது பிரிவு ஆகியவைகளை மாற்றியமைக்க வேண்டும். அதிலே சட்ட சபையைக் கலைப்பது, மாநில அரசை நீக்குவது என்பதற்கான அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்த நிலை இருக்கக்கூடாது. இதைப்பற்றி எத்தனையோ முறை திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது. ஆனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள்? அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒரு மாநிலத்தில் உள்ள அரசு வேலை செய்ய முடியாமல் போய் விட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டாலும்கூட அதை ஜனநாயக முறையில் சமாளிக்கின்ற தன்மையில் நடந்துகொள்ள வேண்டுமே தவிர, மக்கள் தாங்கள் இஷ்டப்பட்டு தங்களுக்குப் பிடித்த ஒரு அரசை வைத்திருக்கும்பொழுது, கவர்னரின் மூலமாக எப்பொழுது வேண்டுமானாலும் அதைக் கவிழ்க்கும் காரியங்களைச் செய்யக் கூடிய நிலைமை வரக்கூடாது. அதனால் அந்த ஷரத்துக்களை மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து அவைகளை மாற்றி அமைக்க வேண்டும் அல்லது கை விட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மிகவும் நியாயமான ஆலோசனை.

அரசியல் சட்டத்தினுடைய 200—வது பிரிவு, 201-வது பிரிவு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலப் பட்டியலின்படி சட்டம் இயற்ற சட்டசபைக்கு மட்டும்தான் அதிகாரம் உண்டு. அதில் மத்திய அரசு தலையிடக்கூடாது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசுக்கு என்று ஒரு பட்டியலும், மாநில அரசுக்கு என்று ஒரு பட்டியலும், மத்திய அரசு மாநில அரசு என்ற இரண்டுக்கும் சேர்த்து ஒரு பட்டியலும் இருக்கின்றன. மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற பட்டியலில் உள்ள விஷயத்திலே சட்டம் இயற்றுவதில் மாநில சட்டசபைதான் சுப்ரீம் பாடி, இதுதான் உயர்ந்த சபை. நமது மாநில மக்கள் தேர்ந்தெடுத்துள்ள இந்தச் சபையை மீறி இதில் யாரும் தலையிடக் கூடாது, மத்திய அரசும் தலையிடக் கூடாது என்ற முறையில் அரசியல் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர வேண்டு மென்று குறிப்பிடுகிறார்கள்.

(திரு. கு. ரமணி) [1983 அக்டோபர் 29

என்ன சட்டங்களை நாம் இந்தச் சபையிலே நிறைவேற்றி னாலும்கூட அந்தச் சட்டங்கள் மத்திய அரசாங்கத்திற்குச் சென்று அங்கே காத்துக் கிடக்க வேண்டும். அவர்களுக்கு இஷ்டமில்லையென்றால் அதற்கு ஒப்புதல் தராமலேயே அவற்றைத் திருப்பி அனுப்பிவிடலாம். இப்படிப் பல சட்டங்கள் திரும்பி வந்திருக்கின்றன. நிலச் சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட வரைக்கும் நம்முடைய அனுபவம் அப்படித்தான் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. இது மாநிலத்தின் செயல்படும் திறனையும், மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் திட்டவட்டமாகக் குறைக்கும். எனவே, இதை மாற்றியமைக்க வேண்டும்.

அரசியல் சட்டத்தின் பிரிவு 249 என்பதைப் பொறுத்த வரையில் பார்ப்போமேயானால், தேசீய முக்கியத்துவம் என்ற பெயரில் மாநிலப் பட்டியலில் உள்ளவற்றில்கூட மத்திய அரசு சட்டமியற்றுவதற்கு இது அதிகாரத்தை அளிக்கிறது. இந்த ஷரத்தை நீக்கியாக வேண்டும். தேசீய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை யார் தீர்மானிப்பது? மத்திய அரசாங்கத்திற்கு அந்த அதிகாரத்தைக்கொடுத்திருக்கும்பொழுது அவர்கள்தான் அதைத் தீர்மானிப்பார்கள். இப்படி மாநிலப் பட்டியலில் இருந்தாலும் அதையும் மீறி மத்தியிலே இருப்பவர்கள் சட்டம் இயற்று வதற்கான அதிகாரத்தை இது கொடுக்கிறது. இப்படி மாநிலப் பட்டியலிலிருந்தாலும் அதன் மீது எவ்வளவோ தாக்குதல்கள் என்க்ரோச்மெண்ட் செய்ய இடம் அளிக்கிறது. எனவேதான் இந்தப் பிரிவை அகற்ற வேண்டும்.

அரசியல் சட்டத்தின் பிரிவு 263-ஐப் பொறுத்தவரையில் அனைத்து முதலமைச்சர்களையும், பிரதம மந்திரியையும் கொண்ட கவுன்சில் அமைக்கப்பட வேண்டும். அந்த அதிகாரத்தை மேன்டேட்டரியாக ஆக்கி அனைத்து முதல்வர்களையும், பிரதமரையும் கொண்ட கவுன்சில் அமைக்கப்பட வேண்டும். அதற்கு இந்தச் சட்டத்தின்கீழ் ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடைக்கிறது. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினை களையோ அல்லது மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளையோ பற்றிப் பரிசீலித்து விவாதம் செய்து ஒப்புதலான முறையில், உகலிசரமான முறையில் முடிவு செய்ய வேண்டும். மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை, உரிமைகளை மத்திய அரசாங்கம் பறித்தால் அப்படிப்பட்ட நிலைமைகளுக்குப் பரிகாரம் காண்பதற்காக மாநில முதலமைச்சர்களும், பிரதமரும் உட்கார்ந்து விவாதிக்கக் கூடிய, அதில் தீர்வு காணக்கூடிய வகையில் முயற்சியெடுக்கக் கூடிய கவுன்சிலாக அது இருக்க வேண்டும்.



1983 அக்டோபர் 29] (திரு. கு. ரமணி)

(பிற்பகல் 1—20)

இது கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டப்படி ஜனாதிபதிக்கு பணிக்கப்பட வேண்டிய விஷயம். ஆகவே அவர் இஷ்டத்திற்குச் செய்வது என்பதில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற தேசிய அபிவிருத்தி கவுன்சிலைப் போன்றதல்ல. தேசிய அபிவிருத்தி கவுன்சில் என்ற ஒன்றும் தனியாக இருக்கின்றது. அதிலும் முதலமைச்சர்களும் இருக் கிறார்கள். நமது நாட்டின் பிரதம அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அந்தத் தேசீய அபிவிருத்தி கவுன்சில் இருந்தும் கூட இன்றைக்குத்திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கீடு செய்யப்படுவ தில்லை தொழில்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. நிலச் சீர்திருத்த வரவில்லை. பல தேவையான சட்டங்கள் கொண்டு வரப்படவில்லை. அங்கே போய் பேசினாலும் ஒன்றும் நடக்காது. அந்தக் கவுன்சிலின் நிலைமையும் மத்திய ஆட்சியிலே இருப்பவர்களை நம்பிக்கொண்டு இருப்பதுதான் என்ற அளவில் இருக்கின்றது. அதுவல்ல நாம் சொல்வது. எல்லா மாநிலங்களின் முதலமைச்சர்களும், மத்திய அரசிலே இருக்கின்ற பிரதம அமைச்சர் அவர்களும் கூட்டாக இருந்து விவாதித்து, இருக்கின்ற பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணக்கூடிய வகையில் முடிவுகள் உருவாக்க வேண்டும். அதைத்தான் நாம் சொல்கிறோம்.

அடுத்து செக்ஷன் 360 என்பது அரசியல் சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும். அதாவது மாநிலங்களின் நிதி நிலைமையில் பாதிப்புகள் ஏற்படுகின்றன என்றால் ஜனாதிபதி தலையிடுகின்ற அதிகாரம்அது, அதாவது மாநில அரசுக்களுக்குரியஅதிகாரங்களைக் குறிக்கின்ற பட்டியலில் பல விஷயங்கள் இருந்தபோதிலும் ஒரு மாநிலத்தினுடைய நிதிநிலைமை சரியில்லை என்றால் ஜனாதிபதி தலையிடுகின்ற அதிகாரம் இது. ஒரு மாநிலத்தினுடைய நிதி நிலைமை சரியில்லை என்றால் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட கவுன்சில் மூலமாக அதற்கு என்னென்ன பரிகாரங்களைக் காண வேண்டும் என்பது பற்றி விவாதித்து முடிவு காண வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு அரசாங்கத்திலே பணம் இல்லை என்பதால் ஜனாதிபதி தலையிட்டு இந்த அரசாங்கத்தை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்பதற்கான நிலைமை இருக்கின்றது என்பதற்கு பல உதாரணங்களை இந்த அவையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னது என்னுடைய நினைவுக்கு வருகின்றது. வங்கிகளிலிருந்து மக்களுக்காக கடன் கொடுக்கப்பட்டிருக்கின்ற பணத்தைத் திருப்பிக் கட்டவில்லை என்றால் நம்மைக் கறுப்புப் பட்டியலிலே சேர்த்துவிடுவார்கள் என்று சொன்னார்கள். மாநிலங்களுக்குத் தேவையானஅரிசியினை வாங்க வேண்டுமென்றால் மாநிலத்திற்குத் தேவையான பணத்தை வாங்க வேண்டுமென்றால் நம்மை கறுப்பு லிஸ்டிலே போடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள்.

மத்திய சர்க்கார் நமக்குத் தரக்கூடிய கடன்களைக் கறாராகத் திருப்பிக் கட்டவில்லை என்றால் கறுப்பு லிஸ்டுக்குப் போய்விடுவோம் என்று சொன்னார்கள். எனவே இப்படி நாம் என்னென்ன விஷயங்களிலே திண்டாடுகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி என்றால் என்ன அர்த்தம்? மாநிலங்களாகிய நம்மை பயத்திலேயே அவர்கள் எப்போதும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறபடிதான் செய்ய வேண்டும். இப்போதே வசூலித்துவிடு என்று சொன்னால் உடனே வசூலித்து விட வேண்டும். வசூலிக்க வேண்டாம் என்று சொன்னால் வசூலிக்கக்கூடாது. ஓவர் ட்ராஃப்ட் வாங்கக் கூடாது என்று சொன்னால் ஓவர் ட்ராப்ஃட் வாங்கக் கூடாது. இப்படிப் பல்வேறு தொல்லைகளை நாம் அனுபவிக்க வேண்டி இருக்கின்றது. அதாவது எட்டுக்கால் பூச்சி எப்படிப் பல வலைகளைப் பின்னி மற்ற பூச்சிகளைப் பிடிக்கின்றதோ அந்த மாதிரி வலைப் பின்னல்களுக்குள் மாநில அரசுகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மீறி ஒரு மாநில அரசு நிதி வசதி இல்லாமல் வந்து விட்டால் உடனே ஜனாதிபதி நேராகத் தலையிட்டு தானே செய்வது என்ற வகையில் இருக்கின்ற காரணத்தால் இந்த செக்‌ஷன் நீக்கப்பட வேண்டும்.

அடுத்து செக்‌ஷன் 365-ன் படி, மத்திய அரசின் ஆணைகளை மாநில அரசு நிறைவேற்றாவிடில் மாநில அரசை டிஸ்மிஸ் செய்யலாம் என்று இருக்கின்றது இவ்வாறு அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யக்கூடிய அளவில் இந்த ஷரத்து இருப்பதன் காரணத்தால் இதனைத் திருத்த வேண்டும், இதிலே அவர்களுக்கு இருக்கின்ற ஃபார்முலா என்னவென்றால் மேலெழுந்தவாரியாகக் கவர்னரிடத்திலே இருந்து ஒரு அறிக்கையைப் பெறவேண்டும். அந்த அறிக்கையிலே கவர்னர் என்ன எழுதி இருக்கிறார் என்பதைப் பற்றி மத்திய மந்திரி சபை கூடி முடிவு செய்ய வேண்டும். இந்த முடிவின்படி ஜனாதிபதிக்கு உத்தரவிட்டு அந்த மாநில சர்க்காரை அவர் டிஸ்மிஸ் செய்து விடுவார் என்பதுதான். இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது என்றால் தேர்தல் எதற்காக நடக்கின்றது? அடிப்படை உரிமை பாதுகாக்கப்பட வேண்டாமா? மாநில அரசினை மக்கள் நம்பிக்கையோடு தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்கள். அதனை இஷ்டப்படி கலைத்துவிட்டால் என்ன அர்த்தம்? எனவே அப்படிச் செய்வதன் காரணத்தால் மக்களின் அடிப்படை உரிமையே போய்விடுகிறது. மக்களாட்சி என்ற அடிப்படையையே தகர்த்து எறிகின்ற காரியமாக அல்லவா அது இருக்கின்றது. எனவேதான் அதாரிட்டேரியன் செயல் என்ற முறையிலே இது போன்ற நிலைமைகளைக் கொண்டு வருவதை எதிர்க்கிறோம்.

இதுபோன்ற பல ஷரத்துக்களை அரசியல் சட்டத்திலே உள்ளவைகளை மாற்ற வேண்டும். அவ்வளவையும் இப்போது சொல்வதற்கு அவகாசம் போதாது. ஸ்ரீநகரிலே அனைத்துக் கட்சிகளும், 5 முதலமைச்சர்களும் சேர்ந்து உருவாக்கிய கான்செஸஸ் டாக்குமெண்டிலே அரசியல் சட்டத்தின் பல ஷரத்துக்களை மாற்ற வேண்டும் என்றும் பல ஷரத்துக்களை





நீக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள் அவற்றிலே முக்கியமான சிலவற்றை மட்டும் நான் எடுத்துக் கூறினேன்.

அடுத்தபடியாக, இன்னும் சில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். நீதித்துறைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். நீதித் துறையிலே அரசியல் தலையிடக்கூடாது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட நீதிக்குழு அமைத்து, நீதித் துறையின் பரிபாலனத்தை அரசியல் சட்டத்தின் அடிப்படையில் அவர்கள் வழிகாட்டி நடத்த வேண்டும். உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகளை நியமிக்க சிபாரிசுகளைக் கொடுக்க அந்தக் குழுவுக்கு உரிமை இருக்க வேண்டும். அந்தக் குழு, மாநில, மத்திய அரசு, உச்சநீதி மன்றம், உயர்நீதி மன்றம் தலைமை நீதிபதிகளைக் கலந்து ஆலோசித்து நீதிபதிகளை நியமனம் செய்யும் காரியங்களை அவர்கள் சிபாரிசு செய்ய வேண்டும். அந்தக்குழுவின் ஆலோசனை ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தும் என்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும். இல்லையென்றால், நீதித் துறையில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)*

ஏனென்றால், முதலில் பேசப்பட்டது. பின்னர் அது கொள்கையாக வளர்ந்து, அதை அவர்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அது என்னவென்றால் 'கமிடெட் ஜுடிசியரி'. மத்திய அரசு எந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்து தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிப் பீடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறதோ அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக நீதிமன்றம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 'கமிடெட் ஜுடிசியர்' இருக்க வேண்டும் என்பதாகும். அப்படி வந்தால், நீதித்துறை எந்த விதமான தலையீடோ, மற்ற நிபந்தனைகளோ இல்லாமல் தனித்தன்மை பெற்று இயங்கக்கூடியது என்ற ஜனநாயகத்தின் மையமான சாராம்சத்தைக் காற்றிலே பறக்கவிடுவது என்று அர்த்தம். அதுதான் 'கமிடெட் ஜுடிசியரி'. நான் இதைச் சொல்லவில்லை. மத்திய அரசில் ஆளும் பொறுப்பில் இருக்கும் பாரதப் பிரதமர் அவர்கள் வாயாலே சொல்லப்பட்ட விஷயங்கள் இவை.

அதனால்தான் ஒரு மாநிலத்தில் இருக்கிற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை மற்றொரு மாநிலத்திற்கு இஷ்டம்போல் மாற்றலாம் என்று கொண்டு வந்தார்கள். நான் அதனுடைய லீகல் டிஸ்கஷனுக்குப் போக விரும்பவில்லை. பீகாரிலே இருக்கும் நீதிபதியை இங்கே கொண்டு வந்து போட்டு இருக்கிறார்கள்? தமிழ் மொழியை அவர் புரிந்து கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்கு நீதி பரிபாலனம் செய்ய முடியுமா? தமிழ்நாட்டு மக்களுக்கு நீதியைத் தருவதற்கு உதவி செய்ய முடியுமா. கேரளாவில் இருக்கும் நீதிபதியை குஜராத் மாநிலத்திற்கு மாற்றினார்கள். அவர் குஜராத்து மொழி, இந்தி மொழி படித்து நீதி வழங்க முடியுமா? குஜராத்தில் இருக்கிற நீதிபதியை

சிக்கிமிற்கு மாற்றினார்கள். சிக்கிம் மாநிலத்தில் சிக்கி மொழி இருக்கிறது என்று நினைக்கிறேன். அதைத் தெரிந்து அவர் நீதியைத் தர முடியுமா? அப்படியானால் அந்த மாநிலத்திற்குச் சென்ற நீதிபதிகள் நீதித்துறையில் ஜனநாயக முறையில் நின்று நீதியை வழங்குகின்ற முறையில் வேலைகளைச் செய்ய முடியாது என்று வருகிறது. இந்த நீதிபதிகள் மாறுதலைப் பல நீதிபதிகள் எதிர்த்தார்கள். ஆகவே, இந்த முறையில் நீதிபதிகளை மிரட்டுவது என்பது மட்டுமல்ல, அதனால் அவர்களுக்குக் கொஞ்சம் பயமும் ஏற்படுகிறது. இதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் மாநில சுயாட்சி அல்லது மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் என்பதை யாந்திரிகமாகச் சொல்லவில்லை. கொஞ்சம் பணம், கொஞ்சம் அதிகாரம் கிடைத்து விட்டால் போதும் என்று நாம் சொல்லவில்லை. மல்டி லிங்குவல், மல்டி ரிலிஜன், என்ற தன்மையில் இருக்கும் இந்த நாட்டிலே பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டுள்ள இந்த நாட்டிலே, கிட்டத்தட்ட ஓரளவிற்குச் சமமான வளர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு இருக்கும் இந்த நாட்டிலே, ஒரு ஒற்றுமை உணர்வை நிலைக்கச் செய்ய வேண்டாமா? இன்றைக்கு மத்திய அரசாங்கத்தால் ஒற்றுமையை உருவாக்க முடியவில்லை. பல இடங்களில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க முடியவில்லை. கலவரப் பகுதிகள் என்று பகுதி பகுதியாகப் பிரகடனப்படுத்தப்படுகின்றன. அங்கே ராணுவத்தை அனுப்பி அடக்கும் நிலைமையேற்படுகிறது. எனவே, இந்த நாட்டிலே தேசிய ஒற்றுமையைப் பராமரிக்க முடியவில்லை. என்பதை நாம் பார்க்கிறோம். சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆன பின்பும், நாம் இந்திய மக்களை ஒன்றுபடுத்த முடியவில்லை. இந்த உண்மையை காங்கிரஸ் நண்பர்கள் நிச்சயமாகப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அதற்காக அவர்கள் காங்கிரஸ் கட்சியிலே இருந்து போராட வேண்டும். அதனால் நான் சொல்கிறேன். இந்த மாநில சுயாட்சி என்பது ஏதோ மெக்கானிக்கலாக கொஞ்சம் பணம் கிடைத்து, நமக்குச் சில அதிகாரங்களின் துண்டு, துணுக்குகள் கிடைத்து மத்திய சர்க்காரின் தொல்லையில்லாமல், இப்படியே சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டு, இந்த மாநிலத்திலே ஆட்சி நடத்தினால் போதும் என்பதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ரமணி அவர்கள் தொடர்ந்து தன்னுடைய பேச்சை அடுத்து வரும் தனியார் அலுவல் நாளன்று பேசலாம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31-10-1983 காலை 9-00 மணிக்கு, பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

191. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1981-ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

192. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

33. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (ஆங்கிலம்).

34. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 100 வரை).

## இணைப்பு I.

(1-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 81 க்கான விடையைக் காண்க.)

தமிழ் நாட்டில் பால் உற்பத்தியைத் தீவிரப்படுத்த அரசு பல முறைகளை மேற்கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தைப் பால் பெருக்கும் துறையும் பால் உற்பத்தியாளர்கள் இணையமும் செயல்படுத்தி வருகின்றன.

### 1, பால் பெருக்குத் துறையின் பணிகள்:

அ. தமிழ்நாடு அரசின் பால்வளத் துறை 1958-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது, அவைகளைப் பதிவு செய்வது மற்றும் மேற்பார்வையிடுவது ஆகியவை இத்துறையின் முக்கிய பணிகளாகும். பால் பெருக்குத் திட்டம் (Operation Flood) செயல்படாத மாவட்டங்களான தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில பால் பெருக்கப் பணிகளை இத்துறை கவனித்து வருகிறது.

ஆ. பால் பெருக்குத் திட்டம் செயல்படாத மாவட்டங்களில் கிராம அளவில் கூட்டுறவுச் சங்கங்களையும் மாவட்ட அளவில் உற்பத்தியாளர் ஒன்றியங்களையும் அமைக்கும் பணிகளை இத்துறை செய்து வருகிறது. பால் பெருக்குத் திட்டம் செயல்படும் மாவட்டங்களிலும், மேற்படி திட்டம் செயல்படாத மாவட்டங்களிலும் பால் உற்பத்தியாளர் சங்கங்களைப் பதிவு செய்தல், செயல்படாத சங்கங்களைக் கலைத்தல், பால் வழங்கும் சங்கங்களை உற்பத்தியாளர் சங்கங்களா மாற்றி அமைத்தல், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களை அமைத்தல், மாவட்டங்களில் அமைந்துள்ள பால் வழங்கும் ஒன்றியங்களை நுகர்வோர் ஒன்றியங்களாக மாற்றியமைத்தல் முதலான நிர்வாகப் பணிகள் பால்வளத் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

இ. பால் சேகரிப்பு:

அதிக அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்காக தஞ்சாவூர், புதுக்கோட்டை, கரூர், தேவகோட்டை, கோவில்பட்டி, நாகர்கோவில் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் ஏழு பால் சேகரிப்பு குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் கிராமங்களில் ஆய்வு நடத்தி பால் கிடைக்க வாய்ப்புள்ள கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை பால்வளத் துறை மூலம் அமைத்துக் கொடுக்கின்றன,

ஈ, நடமாடும் கால்நடை மருந்தகங்கள்:



தற்போது பால்வளத் துறையில் பன்னிரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்படுகின்றன. 1983-84-ல் மேலும் ஐந்துநடமாடும் கால்நடை மருந்தகங்கள்ஏற்படுத்தஉத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கால்நடை மருந்தகங்கள் குறிப்பிட்டநேரங்களில் பால்உற்பத்தியாளர் சங்கங்களுக்குநேரில்சென்றுஉறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கின்றன. அவ்வமயம் அறிவியல் முறைப்படி கால்நடைகளை இனவிருத்தி செய்தல், தீவனம் அளித்தல், பராமரித்தல் முதலியன பற்றி உறுப்பினர்களுக்கு விளக்கப்படுகிறது.

### II. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் பணிகள்:

செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம்—I மூலம் பால் பெருக்குத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு 1972 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பால்வள நிறுவனம் அமைக்கப்பட்டது. பால்வளத் துறையின் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. இதன் மூலம் பால் உற்பத்தி மற்றும் பால் சேகரிப்பு ஆகியவற்றில் நிலையான முன்னேற்றம் காண முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அ. பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்:

தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய நிறுவன அமைப்பு பற்றிய கொள்கை ஒன்றை 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமிழ்நாடு அரசு வகுத்தது. வருங்காலத்தில் அமைக்கப்படும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் கிராம அளவில் 'பால் உற்பத்தியாளர் சங்கமாகவும்' மாவட்ட அளவில் 'பால் உற்பத்தியாளர் சங்கங்களைக் கொண்ட ஒன்றியமாகவும்', இறுதியாக மாநில அளவில் உற்பத்தியாளர் ஒன்றியங்களைக் கொண்ட மாநில இணையமாகவும், அமைப்புகளை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு தீர்மானித்தது. பால் உற்பத்தியை அதிகரிக்க 'மூன்று நிலைகளைக் கொண்ட கூட்டுறவு அமைப்பு என்ற தமிழக அரசின் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் நிறுவப்பட்டு 1-2-1981 முதல் செயல்படத் துவங்கியது. அதுவரை தமிழ்நாடு பால்வள நிறுவனம் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் 1-2-1981 முதல் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு மாற்றப்பட்டன.

—

[1983 அக்டோபர் 29

ஆ. பால் சேகரிப்புக் குழுக்கள்;

'பால் பெருக்குத் திட்டம்' அமுலில் உள்ள மாவட்டங்களில் 21 பால் சேகரிப்புக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக் குழுக்கள் கிராமங்களை ஆய்வு செய்து பால் உற்பத்திக்கு வாய்ப்புள்ள கிராமங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைக்கின்றன. இதுவரை 3246 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இக்குழுக்களால் அமைக்கப் பட்டுள்ளன.

இ. கால்நடை மருத்துவம்;

'பால் பெருக்குத் திட்டம்' செயல்படும் மாவட்டங்களில் 47 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வாரத்தில் ஒருநாள் குறிப்பிட்ட நேரத்தில் நேரில் சென்று சிகிச்சை அளிக்கிறது. அவசர சிகிச்சை தேவைப்படும்போது, தகவல் கிடைத்ததும் அவசர சிகிச்சைப் பிரிவு அக்கிராமத்திற்குச் சென்று நோய்வாய்ப் பட்டுள்ள கால்நடைக்குச் சிகிச்சையளிக்கிறது. அவசர சிகிச்சைகளுக்கு நியாயமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதுபோன்ற 28 அவசர சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன.

ஈ. செயற்கை முறை கருவூட்டல்;

செயற்கை முறை கருவூட்டல் திரவ விந்து அல்லது உறை விந்து மூலம் மேற்கொள்ளப்படுகிறது. நீலகிரி மாவட்டம் உதக மண்டலத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கருவூல ஜெர்சி மற்றும் பொலிகாளைப் பண்ணையிலிருந்து தேவையான ஜெர்சி இன உறைவிந்து பெறப்படுகிறது. மேற்கண்ட பண்ணையில் மிக உயர்ந்த வம்சாவழிகளைக் கொண்ட 36 ஜெர்சி பொலிக் காளைகள் உள்ளன. இது தவிர பால் பெருக்குத் திட்டம் அமுலில் உள்ள மாவட்டங்களில் 8 செயற்கை முறை கருவூட்டல் நிலையங்கள் உள்ளன.

உ. கால்நடை கலப்புத் தீவனம் மற்றும் பசுந் தீவனம்:

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் நாளொன்றுக்கு 100 டன் கலப்புத் தீவனம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட கால்நடை தீவன ஆலை ஒன்று மாதவரத்தில் உள்ளது. இதே அளவு திறன் கொண்ட கலப்புத் தீவன ஆலையொன்றை வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூரிலுள்ள ஆம்பூர் சர்க்கரை ஆலையிடமிருந்து தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் குத்தகை அடிப்படையில் எடுத்துக்



1983 அக்டோபர் 29]

கொண்டுள்ளது. மாதவரம் மற்றும் ஆம்பூர் கால்நடைத் தீவன ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் கலப்புத் தீவனம் பால் உற்பத்தியாளர்களுக்கு பால் சங்கங்கள் மூலம் நியாயமான விலையில் விநியோகிக்கப்படுகிறது.

ஊ. பால் பெருக்குத் திட்டம்—2:

"பால் பெருக்குத்திட்டம்-1", 3-3-1982-ல் முடிவடைந்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் பால் பெருக்குத் திட்டம்-1 செயல்பட்ட அதே ஒன்பது மாவட்டங்களில் "பால் பெருக்குத்திட்டம் —2" ஐச்செயல் படுத்தத் துவங்கியது. "பால் பெருக்குத் திட்டம் 2" ரூபாய் 40 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

எ. சிறப்புத் திட்டங்கள்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டம், சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் செயல்படும் கன்று வளர்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

மேற்கூறிய திட்டங்களின் மூலம் 1972 ஆம் வருடத்தில் தினமும், 40,000 லிட்டர் கொள்முதலோடு துவங்கிய இந்த இயக்கம் 1982 ஆம் வருடத்தில் தினமும் 4 இலட்சம் லிட்டர் கொள்முதல் செய்யும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

## இணைப்பு II.

(திரு. என். பழனிவேல், அவர்களின் உடுக்குறி) யிடாத 12—வினா எண்.5311-க்கான விடையைக் காண்க.)

தமிழகத்தில் அனைத்துவகை நிருவாகங்களின் கீழும் (அரசு உள்ளாட்சி மன்றம், தனியார்) உள்ள ஆரம்பப் பள்ளிகளும் தற்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய ஆசிரிய-மாணவர் விகிதத்தை நிர்ணயித்துள்ள கல்வித்துறை நிலை ஆணை 250, நாள் 29—2—1964-ன்படி தரப்பட்டுள்ளது.

2. எந்த நிருவாகமும் அந்த விகிதப்படி தானாகவே கூடுதல் ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள இயலாது, ஒவ்வோராண்டும் நிதி நிலை இடம் தருவதற்கேற்ப கூடுதலாக சில ஆயிரம் ஆசிரியர் பதவிகளை அரசு ஏற்படுத்தி வருகிறது. அவ்வெண்ணிக்கைக் குட்பட்டு வெவ்வேறு பள்ளிகளின் தேவைக்கேற்ப பள்ளிக் கல்வித்துறை கூடுதல் ஆசிரியர் பதவிகளைப் பள்ளிகளுக்கு பகிர்ந்து அளிக்கிறது. அவ்வாறு பகிர்ந்தளிக்கும் பதவிகளின் எண்ணிக்கைக்கு உட்பட்டுத்தான் எந்த நிருவாகத்தின் கீழ் உள்ள பள்ளியும் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க அனுமதி உண்டு.



நிலை ஆணை எண் 250, கல்வித்துறை, நாள் 29-2-1964

பொருள் : தொடக்கக் கல்வி—ஆசிரியர்-மாணவர் விகிதம்—திருத்திய ஆணை.

இம்மாநிலம் முழுவதிலும் உள்ள அனைத்துவகை நிர்வாகங்களின் கீழும் உள்ள (ஆதாரப் பள்ளிகள் உள்ளிட்ட) எல்லா தொடக்க (முதல் நிலைப்) பள்ளிகளிலும், உயர்தொடக்க (நடு நிலைப்) பள்ளிகளிலும் இருக்கவேண்டிய ஆசிரியர்-மாணவர் விகிதம் சம்பந்தமாக—இவ்விஷயத்தில் ஏற்கெனவே வெளியிட்டுள்ள ஆணைகளை ரத்து செய்து அரசாங்கம் பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது.

### தொடக்கப் (முதல்நிலை) பள்ளிகள் (1-5 வகுப்புகள்)

(1) ஓராசிரியர் பள்ளிகள்—யாதொரு தொடக்கப் பள்ளியையும் தொடர்ந்து நடத்த குறைந்தபட்சம் சராசரி மாணவர் வருகை 20 ஆவது இருந்தாக வேண்டும். ஒரு பள்ளியில் ஒரு மாதத்தில் 20 மாணவர்களுக்கும் குறைவாக சராசரி மொத்த வருகை இருக்குமானால், அந்த மாதத்திற்கு எந்த ஆசிரியருக்கும் அரசு மானியம் எதுவும் கணக்கிட்டு வழங்கப்படமாட்டாது. அப்பள்ளியில் மொத்தச் சராசரி வருகை 30 அல்லது அதற்கு மேலும் இருக்கும் பட்சத்தில் இரண்டாவது ஆசிரியர் ஒருவர் அனுமதிக்கப்படுவார். பிற பள்ளிகளுக்கு விதித்துள்ள சாதாரண ஆசிரியர்-மாணவர் விகிதத்தைப் பின்பற்றி அப்பள்ளிக்கு மூன்றும் அதற்கு மேலும் ஆசிரியர்களை அனுமதிக்கப்படுவார்கள்.

(2) ஓராசிரியர் பள்ளியல்லாத பிற பள்ளிகளில், வகுப்புக்களை ஒன்று சேர்த்துக் கணக்கிடுதல்—இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகுப்புகளை ஒன்று சேர்த்துக் கணக்கிடுவதற்கு ஓராசிரியர் பள்ளியல்லாத பிற பள்ளிகளைப் பொறுத்த வரையில் அனுமதிக்கத்தக்க ஆசிரியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருக்கும்:—

ஒன்று சேர்த்த வகுப்புகளின் சராசரி வருகை 30-ம் அதற்கு மேலும் இருக்குமானால், இரண்டு ஆசிரியர்கள்.

ஒன்று சேர்த்த வகுப்புக்களின் சராசரி வருகை 55-க்கு அதிகமானால் மூன்று ஆசிரியர்கள்.

ஒன்று சேர்த்த வகுப்புகளின் சராசரி வருகை 75-க்கு அதிகமானால் நான்கு ஆசிரியர்கள்.

ஒன்று சேர்த்த வகுப்புகளின் சராசரி வருகை 95-க்கு அதிகமானால், ஐந்து ஆசிரியர்கள்.

(3) வகுப்புக்களை பகுத்தல்—ஒரு வகுப்பானது பின்வருமாறு பிரிவுகளாகப் பகுக்கப்படலாம்:—

அவ்வகுப்பின் சராசரி வருகை 35 வரை இருக்குமானால் ஒரு பிரிவு.

அவ்வகுப்பின் சராசரி வருகை 36-க்கும் 70-க்கும் இடைப்பட்டால், இரண்டு பிரிவுகள்.

அவ்வகுப்பின் சராசரி வருகை 71-க்கும் 105-க்கும் இடைப்பட்டால், மூன்று பிரிவுகள்.

அவ்வகுப்பினர் சராசரி வருகை 106-க்கும் 140-க்கும் இடைப்பட்டால், நான்கு பிரிவுகள்.

அவ்வகுப்பின் சராசரி வருகை 141-க்கும் 175-க்கும் இடைப்பட்டால், ஐந்து பிரிவுகள்.

அவ்வாறே சராசரி மாணவர் வருகை ஒவ்வொரு 35-க்கும் ஒரு பிரிவு வீதம் பகுக்கப்படலாம்.

(4) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ள வகுப்புகள் தனி யூனிட்டுகளாகக் கொள்ளப்படும், அத்தகைய வகுப்புகளுக்கு அனுமதிக்கப்படுகிற ஆசிரியர்களின் எண்ணிக்கையானது மேலே (3)-ல் சொல்லப்பட்டதை அனுசரித்துத் தீர்மானிக்கப்படும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளாகப் பகுக்கப்படாத வகுப்புகள் அனைத்தும் ஒன்று சேர்த்து கருதப்பட்டு அவற்றிற்கு அனுமதிக்கத்தக்க ஆசிரியர்களின் எண்ணிக்கையானது மேலே (2)-ல் சொல்லப்பட்டிருப்பதை அனுசரித்துத் தீர்மானிக்கப்படும்.

நடுநிலை (உயர் தொடக்கப்) பள்ளிகளை சார்ந்த நடுநிலை (உயர்தொடக்க) வகுப்புகள்—வகுப்புகள் 6—8.

(5) சராசரி மாத வருகை 20-க்குக் குறையாமல் உள்ள ஒவ்வொரு உயர்தொடக்க வகுப்பும் தனி யூனிட்டாகக் கருதப்படும்.



(6) உயர் தொடக்க வகுப்புக்களை பிரிவுகளாகப் பகுத்தல்:—

ஓர் உயர் தொடக்க வகுப்பு பின்வருமாறு பிரிவுகளாகப் பகுக்கப்படலாம்:—

அந்த வகுப்பின் சராசரி வருகை, 35 வரை இருந்தால் ஒரு பிரிவு.

அந்த வகுப்பின் சராசரி வருகை 36-ம் அதற்கு மேற்கொண்டும் இருந்தால், இரண்டு பிரிவுகள்.

அந்த வகுப்பின் சராசரி வருகை 61-ம் அதற்கு மேற்கொண்டும் இருந்தால், மூன்று பிரிவுகள்.

அந்த வகுப்பின் சராசரி வருகை 81-ம் அதற்கு மேற்பட்டும் இருந்தால், நான்கு பிரிவுகள்.

இவ்வாறே சராசரி மாணவர் வருகை ஒவ்வொரு 20-க்கும் ஒரு பிரிவு என்று வகுக்கப்படலாம்.

(7) வகுப்புக்களை ஒன்று சேர்த்துக் கணக்கிடுதல்—உயர் தொடக்க வகுப்புகள் எவற்றிலாவது சராசரி வருகை 20-க்கும் குறையும் உயர் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இரண்டு அல்லது மூன்று வகுப்புக்களை ஒன்று சேர்த்துக் கணக்கிடலாம். ஒன்று சேர்க்கப்பட்ட வகுப்புக்களின் சராசரி வருகை 30-ம் அதற்கு மேலும் இருந்தால் இரண்டாம் ஆசிரியர் ஒருவர் அனுமதிக்கப்படுவார்; ஒன்று சேர்க்கப்பட்ட வகுப்புகளின் சராசரி வருகை 55-க்கு அதிகப்படுமானால், மூன்றாம் ஆசிரியர் ஒருவர் அனுமதிக்கப்படுவார்.

(8) ஆறு அல்லது 7-ம் வகுப்பை உயர்ந்தவகுப்பாகக் கொண்டு முற்றுப் பெறாமல் உள்ளனவும், 6, 7 வகுப்புகளின் சராசரி வருகையைக் கூட்டினாலும், 20 அளவுகூட இல்லாதனவுமான உயர் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அந்த உயர் தொடக்க வகுப்புக்களின் சராசரி வருகையை, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளாக பகுக்கப்படாத தொடக்கப் பள்ளி நிலை வகுப்புக்களின் மொத்தச் சராசரி வருகையுடன் ஒன்று சேர்த்துக் கூட்டி அந்தப் பள்ளிக்கு அனுமதிக்கத்தக்க ஆசிரியர்களின் எண்ணிக்கை மேலே (2)-ல் சொல்லப்பட்டுள்ளதை அனுசரித்து, தொடக்கப் பள்ளி நிலை வகுப்புக்களுக்கான ஆசிரியர்-மாணவர் விகிதப்படி நிர்ணயம் செய்யப்படும். இந்த எண்ணிக்கையில் உயர் தொடக்க வகுப்புக்காக/வகுப்புகளுக்காக இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் ஒருவர் அனுமதிக்கப்படுவார்.

(9) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ள ஓர் உயர் தொடக்க வகுப்பானது, ஒரு தனி யூனிட்டாகக் கருதப்பட்டு, அதற்கு அனுமதிக்கத் தக்க ஆசிரியர்களின் எண்ணிக்கை மேலே (6)-ல் சொல்லியுள்ளதை அனுசரித்து நிர்ணயம் செய்யப்படும்.

(10) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளாகப் பகுக்கப்படாத உயர் தொடக்க வகுப்புகள் அனைத்தும் ஒரு தனி யூனிட்டாகக் கருதப்படும். அவற்றுக்கு அனுமதிக்கத்தக்க ஆசிரியர்களின் எண்ணிக்கையானது மேலே (7)-ல் சொல்லியுள்ளதை அனுசரித்து நிர்ணயம் செய்யப்படும்.

2. (1) மேற்கண்ட ''பார்முலா'' வை அனுசரித்து, ஒவ்வொரு பள்ளிக்கும் ஆண்டுதோறும் அனுமதிக்கத்தக்க ஆசிரியர்களின் எண்ணிக்கையானது, அரசினர் மற்றும் உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தின் கீழுள்ள பள்ளிகளின் விஷயத்தில் ஜூலை மாத சராசரி வருகையின் அடிப்படையிலும், தனியார் பள்ளிகளின் விஷயத்தில் ஜூன் 21-ம் தேதி முதல் ஜூலை 20-ம் தேதி முடியவுள்ள காலத்தின் சராசரி வருகையின் அடிப்படையிலும், மாவட்டக் கல்வி அதிகாரியால் ஒவ்வோர் ஆண்டும் நிர்ணயம் செய்யப்படும்.

(2) கூடுதலாக மாணவர்கள் சேர்வதன் காரணமாகக் கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்வதும் 1-ம் வகுப்பை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளாகப் பகுப்பதும் விஜயதசமி வருகிற மாதம் வரை மாவட்டக் கல்வி அதிகாரியால் அனுமதிக்கப்படலாம்.

(3) மாவட்டக் கல்வி அதிகாரியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கையானது, அடுத்தபடி, மறு நிர்ணயம் செய்யப்படும் வரை தொடர்ந்து இருந்து வரவேண்டும்; அதற்குத் தேவைப்பட்ட வருகையானது எப்போதும் தொடர்ந்து இருந்து வருமாறு உறுதியாகக் கவனித்துக் கொள்ள வேண்டியது ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் உள்ள பொறுப்பாகும். யாதொரு மாதத்திலாவது சராசரி வருகையானது குறையுமானால், பணி மூப்பில் மிகக் குறைந்த ஆசிரியருக்கு அல்லது ஆசிரியர்களுக்கு உரிய மானியத்திற்கு அனுமதி மறுக்கப்படும்.

3. தொழிற்கல்வி (ப்ரிவொகேசனல்) ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் போன்ற தனிப்பயிற்சி ஆசிரியர்கள் எண்ணிக்கை இந்த ஆணையின் வரம்பிற்கு உட்படமாட்டாது. அத்தகைய ஆசிரியர்களும் 3-5 வகுப்புகளுக்கு ஆங்கிலம் கற்றுத்தரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களும், எந்த வரன்முறைப்படி அனுமதிக்கலாம் என்பது குறித்து முன்னமே அமுலில் உள்ள, விதிகள் ஆணைகளை அனுசரித்து நியமிக்கப்பட வேண்டும்.



4. பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளைக் கொண்ட முதல் நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை கூடுதலாக ஓர் ஆசிரியருக்கு—முதல்நிலைப் பள்ளியானால் ஹையர் கிரேடு ஆசிரியருக்கும் நடுநிலைப் பள்ளியானால் செகண்டரி கிரேடு ஆசிரியருக்கும்—மானியம் அனுமதிக்கலாம்,

5. எந்தப் பள்ளியிலும் அதில் உள்ள வகுப்புகள் அல்லது பிரிவுகள் எண்ணிக்கை அல்லது அந்தப் பள்ளியில் உண்மையில் பணி செய்யும் ஆசிரியர் எண்ணிக்கை—இவ்விரண்டில் எது குறைவோ அந்த எண்ணிக்கைக்கு அதிகமான ஆசிரியர்களுக்கு மானியம் கணக்கிடப்பட மாட்டாது.

6. இந்த வீதத்தின்படி கணக்கிட்டுப் பார்க்கும்போது ஆசிரியர்கள் அனுமதிக்கத்தக்க எண்ணிக்கையைவிட மிகையாக பணி செய்யும் ஒவ்வொரு பள்ளியிலும், யாதொரு பதவியிலாயினும் (விடுப்பு, ராஜினாமா, பதவியிலிருந்து ஓய்வு பெறல், கூடுதல் மாணவர் சேர்ப்பு போன்ற காரணங்களினால்) காலி ஏற்படுமானால், மிகையாக இருப்பது சரியாகும் வரை புதிய நியமனங்கள் எதுவும் செய்யப்படக்கூடாது. ஆயினும் தற்போது முறையாகப் பணியில் உள்ள ஆசிரியர்களில் மிகையாகக் காணப்படுபவர்கள் வருங்காலக் காலியிடங்களில் அவர்களை நியமித்து மிகையைச் சரிசெய்யும் வரை அவர்களைத் தொடர்ந்து அலுவலில் வைத்து வரவேண்டும்.

7. ஆசிரியர்—மாணவர் விகிதப்படி தேவைக்கும் அதிகமாக அதாவது உபரியாக உள்ள ஆசிரியர்களை (Supernumerary teachers) அந்தந்த வருவாய் மாவட்டத்திற்குள் ஏற்படும் புதிய காலியிடங்களில் விரைவில் நியமிப்பதற்கு தக்க கட்டளைகள் கல்வித் துறை நெறியாளர் வெளியிடவேண்டும்.

8. தொடக்கக் கல்விக்காக அரசுப் பட்ஜெட்டில் செய்ய இயலும் நிதி ஒதுக்கீட்டுக்கு உட்பட்டுத்தான் (திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு உட்பட) இவ்வாணைகளை அமுலாக்க வேண்டுமென்று கல்வித் துறை நெறியாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாணைகளை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட வேண்டிய புதியகூடுதலான பதவிகளின் மாத்ர எண்ணிக்கையானது, (i) ஏற்கெனவே இருந்து வரும் ''தேவைக்கு அதிகமான'' (சூப்பர்நியூமெரரி) பதவிகளின் எண்ணிக்கை, (ii) 1963-64-ம் ஆண்டில் 6—14 வயதுச் சிறாரைக் கூடுதலாகப் பள்ளிகளில் சேர்க்க பட்ஜெட் நிதி ஒதுக்கத்தின்படி ஏற்படுத்தவிருக்கும் கூடுதல் ஆசிரியர் பதவிகளின் எண்ணிக்கையான 8,000; ஆகிய இரண்டு எண்ணிக்கைகளின் மொத்தத்திற்கு அதிகமாக ஆகக்கூடாது.

9. வரவு-செலவுத் திட்டத்தில் (திட்டப்பணிகள் உட்பட) செய்யும் நிதி ஒதுக்கத்திற்கு உட்பட்டு தொடக்க கல்விச் செலவை கட்டுப்படுத்துவதற்கு கல்வித் துறை இயக்குநரைப் பொறுப்பாக்க வேண்டுமெனில் அவருக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் பிற பகுதிகளிலும் புதிதாகப் பள்ளிகள் திறப்பது சம்பந்தமாகவும், கூடுதலான ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துவது சம்பந்தமாகவும் தக்க அதிகாரங்கள் தருவதன் அவசியத்தை அரசாங்கம் உணர்கிறது. கல்வித் துறை இயக்குநர் வகுக்கும் வரன்முறைகளுக்கு உட்பட்டே எந்த ஊராட்சி ஒன்றியமும் இனிமேல் புதிதாக பள்ளிகள்திறக்கவோ கூடுதலான ஆசிரியர்கள் பதவிகளை ஏற்படுத்தவோ இயலும் வகையில் ஏற்கெனவே இதுபற்றி ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரங்கள் அளித்துள்ள அரசாணைகள் தக்கவாறு திருத்தப்படும். இதுபற்றித் தேவையான ஆணைகள் தனியே வெளியாகின்றன.





(திரு. எம். ஜான் வின்சென்ட், அவர்களது உடுக்குறியிடாத 22-வினா எண். 6486-க்கான விடையைக் காண்க).

விளையாட்டின் முன்னேற்றத்திற்கும் சிறப்புக்கும் அடிப்படையான வாய்ப்பு வசதிகளைப் பெருக்கி ஊக்குவித்து ஏராளமான மாணவர், மாணவரல்லாத விளையாட்டு வீரர்/வீராங்கனைகளை தோற்றுவிக்கு முகத்தான் விளையாட்டு இயக்குநர் குறிப்பாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளார்:—

1. இளமையில் மற்றும் மிக இளமையில் தெரிந்தெடுக்கும் போட்டிகள் நடத்துதல்.

2. விளையாட்டுப் பள்ளிகளும், விடுதிகளும் நடத்துதல்.

3. ஊரக விளையாட்டு மையங்கள் அமைத்து அதன் வாயிலாக பட்டி தொட்டிகளில் விளையாட்டு மேம்பாட்டுக்கு அடிகோலுதல்.

4. பல்கலைக் கழகங்களுக்கான விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம்.

5. நாட்டு நலப் பணித் திட்டம் (National Service Scheme)

6. தலைசிறந்த வெளிநாட்டு வீரர்களைக் கொண்டு தமிழ் நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்.

7. விளையாட்டுக் காட்சிக்கூடம் (Pavilion) அமைத்து பொதுமக்களுக்கு விளையாட்டின்மீது ஆர்வத்தை ஏற்படுத்துதல்.

8. மாவட்ட தலைநகரந்தோறும் படிப்படியாக நீச்சல் குளங்கள் மற்றும் விளையாட்டரங்கங்கள் அமைத்தல்.

9. அகில இந்திய அளவிலான (Palk Straight) "பாக் கடலிடுக்கு நீச்சல் போட்டிகள்" நடத்துதல், மற்றும் மிதிவண்டிகளில் உலகம் சுற்றும் இளைஞர்களுக்கும், மலையேறும் இளைஞர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்.

10 வெற்றிவாகை சூடும் வீரர்/வீராங்கனைகளைப் பாராட்டும் வகையில் விருதுகள் வழங்கும் பல்வேறு திட்டங்கள்.

11. வயோதிகமடைந்து வறுமையில் வாடும் தலைசிறந்த முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு ஆயுட்கால முழுவதும் நிதி உதவி வழங்கும் திட்டம்.

12. விளையாட்டுக் கலையில் தமிழ்நாட்டின் சிறப்பை யாவரும் அறியச் செய்ய 'தமிழர் விளையாட்டு மடல்' என்ற பெயரில் மாத இதழ் வெளியிடுதல்.

[1983 அக்டோபர் 29

(திரு. ச. அங்குசாமி, அவர்களின் உடுக்குறியிடாத 27– வினா 6782-க்கான விடையைக் காண்க.)

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் பல அம்சங்களும் அவ்வப்போது மக்களின் விருப்பத்தினையும் சந்தைநிலையையும் அனுசரித்து மாற்றப்படுகின்றன.

பொதுமக்களின் விருப்பத்திற்கிணங்க 12—5—1981 மற்றும் 27—5—1981 ஆகிய தினங்களில் இரு வாரத்திற்கு ஒரு முறை சாதாரண குலுக்கல்கள் சோதனை அடிப்படையில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு வரிசைக்கும் இரண்டு ரூ. 50,000 முதற் பரிசுகளுக்கு பதிலாக ஒரே பரிசாக ரூ. 1,00,000 பரிசு வழங்கப்பட்டது. இவ்வாறு இரு வாரத்திற்கு ஒரு முறை நடத்தும் குலுக்கல்கள் செப்டம்பர் 1981 வரை நீடிக்கப் பட்டது. அவை நல்ல பலன் அளித்ததால் இருவாரந்திற்கு ஒரு முறை நடத்தும் குலுக்கல்கள் தொடர்ந்து நடத்தப் படுகின்றன.

தற்காலிகமான சிறப்புக் குலுக்கல்களிலும் இரண்டு சிறப்புப் பரிசுகளான ரூ. 5 இலட்சத்திற்கு பதிலாக ஒரு சிறப்புப் பரிசாக ரூ. 10 இலட்சமும், ரூபாய் ஒரு லட்சம் விதம் 3 இரண்டாவது சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு பரிசுசீட்டுத் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்பட்டுவரும் பரிசுகளின் அமைப்புகள் மாற்றப்பட்டு அவை மார்ச் 1982-ல் நடக்க இருக்கும் முதலாவது குலுக்க லிலிருந்து அமுலுக்குவரும். சிறப்புக் குலுக்கல்களில் சாதாரணப் பரிசுகள் அல்லாமல் எல்லா வரிசைகளுக்கும் பொதுவாக ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள ஒரு சிறப்பு முதல் பரிசும், ஒவ்வொன்றும் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள மூன்று சிறப்பு இரண்டாம் பரிசு களும் தொடர்ந்து வழங்கப்பட இருக்கின்றன. சாதாரணக் குலுக்கல் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் தேதியிலிருந்து மாதம் மும்முறை அதாவது 10 நாட்களுக்கு ஒரு முறை நடை பெறுவதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு V.

(திரு. குமரி அனந்தன், அவர்களின் உடுக்குறியிடாத 35 வினா எண் 8175–க்கான விடையைக் காண்க.)

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் அருள்மிகு தியாகராச சுவாமி ஆலயத்தை 24—8—1984-ல் ஆய்வு செய்ததிலிருந்து மேற்படி ஆலயத்தின் தணிக்கை அறிக்கைகளில் பரம்பரை அறங்காவலரின் நிர்வாகத்தில் பல குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டிருந்ததை வைத்து, சென்னை துணை ஆணையர் பரம்பரை அறங்காவலர் திரு. டி. கல்யாணசுந்தரம் செட்டி



1983 அக்டோபர் 29]

யாரை பதவிநீக்கம் செய்து உத்தரவிட்டார். மேலும் வட பழனி ஆண்டவர் ஆலய நிர்வாக அதிகாரியை மேற்படி ஆலயத் திற்கு தக்காராக நியமனம் செய்தார். மேற்படி ஆலயத்தின் ஆண்டு வருமானம் ரூ. 1 இலட்சத்திற்கு மேல் தற்பொழுது இருப்பதாலும், தற்போதுள்ள சட்டப் பிரிவு 47 (2) மற்றும் 53 (1) (எ) பிரிவுகளின்படி பரம்பரை அறங்காவலர் மீது ஒழுங்கு நடவடிக்கையை நடத்தும் அதிகாரம் அரசிற்கு வந்து விட்டதாலும் திரு. டி. கல்யாணசுந்தரம் செட்டியார் அவர்கள் தாக்கல் செய்த ரிட் மனுவில் உயர்நீதி மன்றம் உரிய அதிகாரி அதாவது அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியை, திருவொற்றியூர் அருள்மிகு தியாகராச சுவாமி ஆலயத்திற்கு தக்காராக அரசு நியமித்தால் ஒழிய, அவர் தக்காராக இருக்க முடியாது என்று தீர்ப்பு கூறிவிட்டது. எனவே அரசு, 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைய சட்டத்தின் பிரிவு 53 உட்பிரிவு 4–ன்படி (தமிழ்நாடு சட்டம் 22/59) அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியை, அருள்மிகு தியாகராசசுவாமி ஆலயத்தின் பணி களையும், நடவடிக்கைகளையும் கவனிப்பதற்கு தக்காராக 8— 1—1882-ல் நியமித்தது, இதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் திரு. டி. கல்யாணசுந்தரம் செட்டியார் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவினை அனுமதித்து உயர்நீதி மன்றம் அதன் மீது தற்காலிக இடைக்கால தடை விதித்தது. அந்த இடைக்கால தடையை சென்னை உயர்நீதி மன்றம் 17—2— 1982-ல் நீக்கிவிட்டது. எனவே தற்பொழுது அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்தின் செயல் அலுவலர் அருள்மிகு தியாகராச சுவாமி ஆலயத்தின் தக்காராக பதவியிலிருந்து கொண்டு அவ்வாலயத்தின் பணிகளையும் நடவடிக்கைகளையும் கவனித்துக்கொண்டு வருகிறார்.

## இணைப்பு VI.

(திரு. ப. வெங்கடசுப்பிரமணியன், அவர்களின் உடுக்குறியிடாத 80—வினா எண். 11427–ன் விடையைக் காண்க)

தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளில், தனது சுற்றுலாப் பயணச் சீட்டுக்களை விற்பதற்காக வெளிநாட்டு பயண முகவர்களை அமர்த்தியுள்ளது. மேலும், இலங்கையிலும் ஒரு வெளிநாட்டு பயண முகவர் ஒருவரை அமர்த்த திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக இராமேசுவரத்தில் வந்து இறங்குவதால் அத்திருத்தலத்தை உலக சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு ஒரு பெருந் திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளது. மேலும், பயணிகள் கடல் மார்க்கமாக வந்து இறங்குவதற்கு இராமேசு வரத்தில் ஒரு விரிவான பயணிகள் இறங்கும் துறை (Pie1) கட்டப்பட்டு வருகின்றது.

[1983 அக்டோபர் 29

இம்மாநில அரசின் முயற்சிகளின் பயனால் தற்போது மத்திய அரசு மதுரை வரை ''போயிங்'' விமான போக்குவரத்தை விரிவுபடுத்த முடிவெடுத்துள்ளது. மேலும் மதுரை விமான நிலையத்தை விரிவுபடுத்த மத்திய அரசு ரூபாய் 96 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் நிறைவேறியவுடன் நார்வே, ஸ்வீடன் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தும் மற்றும் இலண்டனிலிருந்தும் உல்லாசப் பயணிகளை ஏற்றிவரும் ஒப்பந்த விமான போக்குவரத்து (Chartered Flights) வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சென்னை விமான நிலையத்திலிருந்து அதிகமாக அகில உலக விமான பயணங்களை (International Flights) நடத்துமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளது. ஏனென்றால், இது சென்னைக்கு நேராக அயல்நாட்டு பயணிகள் வந்து இறங்குவதற்கும் மற்ற அயல் நாடுகளுக்கு நேராக செல்வதற்கும் ஏதுவாயிருக்கும். இவ்வசதிகளை செய்து கொடுத்தால் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் தமிழ்நாட்டிற்கு நேராக சென்னையிலேயே வந்து செல்வதற்கு உதவியாயிருக்கும்.

பயணிகள் மற்றும் சரக்கு கப்பல் போக்குவரத்து வசதிகள் கொழும்பில் இருந்து தூத்துக்குடிக்கு விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டவுடன் தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பம்பாய், மதுரை மற்றும் திருச்சி விமான நிலையங்களில் சுற்றுலா தகவல் நிலையங்களை ஆரம்பிக்க கருத்துரு ஒன்று உள்ளது.

''சன்னி சவுத்'' (Sunny South) என்னும் ஆங்கில சுற்றுலா விளக்க ஏடு ஒன்று இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வருகின்றது. 50 சதவிகித ஏடுகள் உலகெங்கிலும் உள்ள இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அலுவலகங்கள் மூலமாக வெளிநாடுகளில் விநியோகிக்கப்படும்.

சுற்றுலா பத்திரிகைகளின் நிருபர்களை அயல்நாட்டிலிருந்து வரவழைத்து, இங்கு பார்க்கக்கூடிய கவர்ச்சிகரமான காட்சிகளைப் பற்றியும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகளைப் பற்றியும் விளக்கிச் சொல்லும் திட்டமும் நிறைவேற்றப்படுகின்றது.

மேற்கூறிய முயற்சிகளும் திட்டங்களும், தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகமாக ஈர்ப்பதற்கு பெருந்துணை புரியும்.



1983 அக்டோபர் 29]

*(திரு. ப. வெங்கடசுப்பிரமணியன், அவர்களின் உடுக்குறியிடாத 92— வினா 12034-க்கான விடையைக் காண்க.)*

*மறைமலை நகர் அமைப்பு பணி நிலை பற்றிய விவர அறிக்கை.*

மறைமலை நகர் புதுநகர். சென்னையிலிருந்து 43 கி.மீ. தொலைவில் தாம்பரத்திற்கும் செங்கல்பட்டிற்கும் நடுவில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் வளர்ச்சிக்கான ஆயத்த வேலைகள் 1973-ம் ஆண்டு தருவாயில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் துவக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டுத் தருவாயில் 1,00,000 மக்கள் வசிப்பதற்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டு வளர்ச்சி அடைந்து வருகிறது.

2. இந்த இடம் ஊரகத் தன்மையுடையதாகும். இதில் உள்ள ஒன்பது கிராமங்களிலும் வசிக்கும் மக்கள் தொகை சுமார் 12,000. மறைமலை நகர் வளர்ச்சித் திட்டத்திற்காக 3,300 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படுகிறது. 50 சதவீத நிலங்கள் தனியாருடையவை. மற்றவை காடுகள் அல்லது அரசின் புறம்போக்கு நிலங்கள் ஆகும்.

3. மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான வளர்ச்சித் திட்டங்களின் விளக்கமான குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

*தொழில் வளர்ச்சி:*

480.54 ஏக்கர் பரப்புள்ள நிலம் தொழிற்பகுதியாக மேம்படுத்தப்பட்டு சாலைகள், குடிநீர் கழிவு நீரகங்கள் மற்றும் மின்சாரம் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 86 தொழில் மனைகளில் 83 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இவற்றில் 10 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவக்கியுள்ளன. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் இப்பகுதியில் 60 தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது. மேலும் 12-க்கு மேற்பட்ட தொழிற்கூடங்கள் உற்பத்தியை துவக்கியுள்ளன. சுமார் 5,000 தொழிலாளர்களுக்கு மறைமலை நகரில் இருக்கும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பு இருக்குமென உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது. தொழில் மனைகளுக்கு அதிக தேவையின் காரணமாக கூடுதலாக 85 ஏக்கர் நிலம் இவ்வாண்டு வளர்ச்சிக்காக எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மேம்படுத்தப்பட்டுள்ள 86 தொழில் மனைகளைத் தவிர மேலும் 30 தொழில் மனைகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

*வீட்டு வசதி:*

மூன்று குடியிருப்பு பகுதிகள் வீட்டு வசதிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு வகையான வருவாய் பிரிவினருக்கும் மொத்தம் 644 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 542 வீடுகள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டு இருப்பதனையும் அறியலாம். மேலும் 462 அபிவிருத்தி செய்யப்பட்ட

காலி மனைகள் பல்வேறு வருவாய் பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு பெற்றோர் வீடுகளை தாங்களாகவே கட்டிக் கொள்ளும் பணியும் நடைபெற்று வருகிறது. மேலும் 1983–85 ஆம் ஆண்டுகளுக்கு உயர்வருவாய் பிரிவினருக்கு 25 அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மனைகளும், 42 வீடுகளும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு 120 அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மனைகளும், 348 வீடுகளும், குறைந்தவருவாய் பிரிவினருக்கு 570 அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மனைகளும், 140 வீடுகளும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 800 அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மனைகளும் 3,394 வீடுகளும் தர திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக மொத்தம் 1,515 அபிவிருத்தி செய்யப்பட்ட காலி மனைகளும், 5,184 வீடுகளும் 1983–85 ஆம் ஆண்டு நடப்பில் பல்வேறு வகையான வருவாய் பிரிவினருக்கும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சாலைகள், குடிநீர் வசதி, கழிவு நீரகற்றல், தெருவிளக்குகள் போன்ற அத்தியாவசிய தேவைகள் அமைத்தும் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பாலாறு குடிநீர் வழங்கும் திட்டம் 404 லட்சம் ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 3 மில்லியன் காலன்கள் குடிநீர் தருமளவிற்கு மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடையும் கட்டத்தை நெருங்கியுள்ளது. குடியிருக்கும் மக்களின் சமுதாயத் தேவைகளான பள்ளிகள், சுகாதார வசதிகள், அங்காடிகள், தபால் நிலையம், வங்கி போன்றவை வளர்ந்துவரும் மக்கட் தொகைக்கேற்ப கிடைக்கும் இந்த வசதிகளைப் பொறுத்தும் தரப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி நிதி:

இதுவரை அபிவிருத்தி வேலைகளுக்கான தமிழக அரசால் வழங்கப்பட்ட 634.76 இலட்சம் ரூபாயும் மேலும் வீடுகளின் கட்டுமான வேலைகளுக்காக HUDCO உதவியால் 156 69 இலட்சம் ரூபாயும் 1974-ல் இருந்து 1982 வரை செலவு செய்யப்பட்டுள்ளது. மேம்பாட்டு செலவிற்காக 1982-83-ம் மற்றும் 1983–84 ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூபாய் 139.80 இலட்சம் மற்றும் ரூ. 125.00 இலட்சம் அரசினால் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*Detailed note on the development of Maraimalai Nagar.*

The New Town Maraimalai Nager is located 43 kms. from Madras between Tambaram and Chengalpattu. It is being developed on virgin land and is designed to have ultimately a population of 1,00,000 by 1991. The preliminary of developing work was intimated during 1973 by the Madras Metropolitan Development Authority.



PLANNING:

2. The site is rural in character with a population of about 12,000 comprised in the nine villages. 3,300 acres of lands are acquired for the development of Maraimalai Nagar. About 50 per cent of the lands are private while the rest are either forest or Government Poromboke lands.

3. Brief description of the different undertaken is given below:—

INDUSTRIAL DEVELOPMENT;

An extent of 480.54 acres has been developed for Industria purposes and all infrastructure facilities such as roads, water supply, drainage and Electricity have been provided. Out of the total number of 86 plots 83 plots have been allotted, out of which more than 10 industries have started production SIDCO has constructed 60 industrial sheds in this area and more than 12 sheds have started production. It is proposed to have an employment potential of 5,000 in the industrial complex at Marimalai Nagar. Due to heavy demand for the industrial plots and an additional extent of 85 acres of land have been taken up for development duringthe current year. This will provide for another 30 plots in 85 acres of land in addition to the 86 plots already developped.

There neighbourhoods for housing have been taken up fordevelopment. 644 houses have been allotted to various income group people and 542 houses are under construction. Further 462 open developed plots have been allotted for the various income groups and housing developments by the allottees themselves are being taken up in these plots. During 1983-85 it is programmed to provide for further 25 Open Developed Polts and 42 Ready Built Houses for High Income Group, 120 Open Developed Plots and 348 Ready Built Houses for M.I.G, 570 Open Developed Polts and 1,410 Ready Built Houses for Low Income Group, and 800 Open Developed Plots and 394 Ready Built Houses for Economically Weaker Section. Thus totally it is programmed that 1,515 Open Developed Plots and 5,194 Ready Built Houses be provided during 1983-85 for the various income groups.

In these areas the infrastructure facilities namely roads, water supply, drainage, street lights etc. have been provided. The palar water Supply Scheme for this project at a cost of Rs. 405 lakhs to provid

for 3 million gallons of water per day is nearing completion. The community facilities for the residents such as schools, health facilities shopping post, Office banking, etc., are being provided in accordance to the needs oi the growing population and alsoth financial resources available

FINANCE :

Madras Metropolitan Development Authority has spent so fara sum of Rs. 634.76 lakhs towarde development works financed by the Government of Tamil Nadu and Rs. 156.69 lakhs towards construction of Ready Built Houses with the assistance of HUDCO during the period of 1974 to 1982. The proposed development expenditure for the year 1981-83 by Government and 1983-84 are Rs. 139.80 lakhs and Rs. 120.00 lakhs.

136057
சென்னை-600 008

D
Y911, 31 N83
N83:53.1